இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள்: 28

சுடர் 32 | கதிர் 170 | வள்ளுவர் ஆண்டு 2048 | வைகாசி 01 திங்கட்கிழமை 15.05.2017

மகாராஜா பொதிகள் சேவை
11kg க்கு மேல் 01kg க்கான கட்டணம்
லண்டன் 600/-
ஜெர்மன் 650/-
உணவு பொருட்களை
விரைவாக அனுப்ப நாடவேண்டிய ஒரே இடம்
GTV Express
இல 225, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 - 2224338 / 021-4925024
இல 25 கந்தசாமி கோவில் வீதி வவுனியா
024 - 4930200 / 076 - 6908961


## 3 இடங்களில் நேற்று நினைவேந்தல்


வழக்கம்பரை


நவாலி


வவுனியா >> 25

## வானமே கூரையான வாழ்வு


படம்: அமரதாஸ்

## இரட்டைப்புளியடியில் நினைவேந்தல் இன்று ஆரம்பம்

முல்லைத்தீவு, மே 15
ஜனநாயகப் போராளிகள் கட்சியின் நினைவேந்தல் இன்று மாலை 4 மணியளவில் முள்ளிவாய்க்கால் இரட் >> 24

## புலிகளின் அடையாளங்கள் முள்ளிவாய்க்காலில் இப்போதும்



முல்லைத்தீவு, மே 15
ஆயுத ரீதியான தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட முள்ளிவாய்க்கால் மண்ணில் விடுதலைப் புலிகளின் >> 24

### வடக்கு மாகாண சபையின் ஏற்பாட்டில்

# ஒன்றிணைந்த நினைவேந்தலுக்கு முதலமைச்சர் விக்கி அழைப்பு

யாழ்ப்பாணம், மே 15

“முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை அனைவரும் ஒன்று சேர்ந்து ஒருமித்து கடைப்பிடிக்க வேண்டும். முள்ளிவாய்க்காலில் நடைபெறும் நினைவேந்தலில் கட்சி பேதமின்றி அனைவரும் ஒன்று சேர்ந்து பங்குபற்ற வேண்டும்”

இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்.

“அநியாயமாகக் கொலை செய்யப்பட்ட எமது மக்களை நாம் ஒன்றிணைந்து நினைவு கொள்வதன் மூலம் மக்களின் பெரிய துயர அலையை உண்டுபடுத்துகின்றோம். இறந்து போனவர்களின் ஆன்மாக்கள் சாந்தி அடைய வேண்டும் என்று ஒருமித்து மனதாரக் கோரிக்கை விடுவது இங்கும் பிறநாடுகளில் வாழும் தமிழ் மக்களையும் மனதால் ஒன்று சேர்க்க உதவுகின்றது. எமது மக்களின் ஒற்றுமையே எமது கோரிக்கைகளுக்கு ஆட்சியாளர்களைச் செவி சாய்க்க வைக்கும்.

மே 18ஆம் திகதி முள்ளிவாய்க்காலில் நடைபெறும் நினைவேந்தல் நிகழ்ச்சியில் கட்சி, மத, இன, வர்க்க பேதமின்றி, ஏழைகள் பணக்காரர்கள் என்ற வித்தியாசமின்றி எமது மக்கள் சேர்ந்து பங்குபற்ற வேண்டும்’ என்று முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

வடக்கு மாகாண சபையின் ஏற்பாட்டில் எதிர்வரும் 18ஆம் திகதி முள்ளிவாய்க்காலில் நினைவேந்தல் நிகழ்வு நடத்த ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இதனைத் தமிழ் மக்கள் பேரவை தலைமையேற்று நடத்த வேண்டும் எனவும், அவ்வாறு நடத்தப்படாவிட்டால், >> 25

## மே 18 அன்று முற்பகல் 9.30க்கு 3 நிமிடங்கள் மெளன அஞ்சலி

யாழ்ப்பாணம், மே 15
முள்ளிவாய்க்கால் நினைவேந்தலின் இறுதி நாளான மே 18ஆம் திகதி முற்பகல் 9.30 மணி தொடக்கம் 3 நிமிட நேரம், தமிழர்கள் வாழும் தேசம் எங்கும், சிரம் தாழ்த்தி மெளன அஞ்சலியை நடத்துமாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

மே 18ஆம் திகதி மு.ப. 9.30 மணிக்கு முள்ளிவாய்க்காலில் கூடும் மக்கள் கூட்டம் 3 நிமிட நேர மெளன அஞ்சலியை நடத்தும். அதே வேளை >> 23

## புதுடில்லிக்கு வருகை தருமாறு மகிந்தவுக்கு மோடி அழைப்பு

கோத்தபாய தெரிவிப்பு

கொழும்பு, மே 15
விரிவான அரசியல் கலந்துரையாடல்களை நடத்துவதற்கு, புதுடில்லிக்கு வருமாறு முன்னாள் அரச >> 25

## 2018 மே தினத்துக்குள் ஆட்சி அமைப்போம்

மகிந்த அணி சூளுரை

கொழும்பு, மே 15
அடுத்த ஆண்டு தொழிலாளர் தினத்துக்கு முன்னர் நாம் ஆட்சி அமைப்போம் என்று மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தா >> 06

## 2 விக்னேஸ்வரன்களும் கடமைகளைச் சரியாக நிறைவேற்றவேண்டும்

*நல்லை ஆதீன முதல்வர் வலியுறுத்து*



யாழ்ப்பாணம், மே 15
“வடக்கின் முக்கிய பதவிகளை வகிக்கும் 2 விக்னேஸ் >> 25

## வித்தியா படுகொலை வழக்கை யாழ்ப்பாணத்தில் நடத்தக் கோரி இன்று அடையாள உணவு ஒறுப்பு

யாழ்ப்பாணம், மே 15
புங்குடுதீவு மாணவி வித்தியாவின் படுகொலை வழக்கு விசாரணைகளை யாழ்ப்பாண மேல் நீதிமன்றத்திலிருந்து கொழும்புக்கு மாற்ற வேண்டாம் என வலியுறுத்தி அடையாள உணவு ஒறுப்புப் போராட்டம் >> 23

## கூட்டமைப்பு ஒருபோதும் வலுவிழந்து போய்விடாது

எமது தலைவர் சம்பந்தனே
சிறிகாந்தா நேற்று முழக்கம்

வவுனியா, மே 15
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நீடிக்கும். அது ஒருபோதும் வலுவிழக்காது. அப்படி வலுவிழக்கத் தமிழ் மக்கள் விடமாட்டார்கள். அதை நீங்கள் உறுதியாக நம்பலாம். கூட்டமைப்பில் >> 25

## கடலில் மூழ்கி மீனவர் சாவு

*குருநகரில் நேற்றுச் சம்பவம்*

யாழ்ப்பாணம், மே 15
கடற்றொழிலுக்குச் சென்ற மீனவர் மாரடைப்பால் நீரில் விழுந்து மூச்சுத் திணறி உயிரிழந்தார் என்று விசாரணை >> 25

## வாக்குறுதிகளை நிறைவேற்ற அரசு மீது அழுத்தம் அவசியம்

அமெரிக்கக் காங்கிரஸ் எம்.பியிடம்
வடக்கு முதலமைச்சர் வலியுறுத்து

யாழ்ப்பாணம், மே 15
“பன்னாட்டுச் சமூகத்துக்கு வழங்கிய வாக்குறுதிகளை இலங்கை நிறைவேற்ற வேண்டும். அதற்கான உரிய அழுத்தங்களை அமெரிக்கா கொடுக்க வேண்டும்”

இவ்வாறு அமெரிக்கக் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினரிடம் வலியுறுத்தியதாக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக் >> 23

## படையினருக்கு வழங்க மாற்றுக் காணிகளில்லை

யாழ். மாவட்டப் பிரதேச செயலாளர்கள் அறிக்கை

யாழ்ப்பாணம், மே 15
பாதுகாப்புத் தரப்பினருக்கு வழங்குவதற்கு அரச காணிகள், மாற்றுக் காணிகள் இல்லை என்று பிரதேச செயலாளர்களால், யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்கு அறிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன எனத் தெரிய வருகின்றது. காணி விடுவிப்புத் தொடர்பில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், >> 23

## இலங்கை இசை நிகழ்ச்சிக்கு இளையராஜா செல்லக்கூடாது

வலியுறுத்தி அவரது வீட்டுக்கு
முன்பாக நேற்றுப் போராட்டம்



சென்னை, மே 15
இலங்கையில் நடக்கும் இசைநிகழ்ச்சியில் இசைஞானி இளையராஜா கலந்து கொள்ளக் கூடாது என்று வலியுறுத்தி அவரது வீட்டின் முன்பாக >> 23

# சீனா சென்ற ரணிலுக்கு மைத்திரிபால கடிவாளம்

## அம்பாந்தோட்டைத் துறைமுகம் குறித்த எந்த உடன்படிக்கையும் வேண்டாம்

கொழும்பு, மே 15

அம்பாந்தோட்டைத் துறைமுகம் தொடர்பாக எந்தவொரு புரிந்துணர்வு உடன்பாட்டையும் சீனாவுடன் செய்து கொள்ள வேண்டாம் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க 5 நாள்கள் பயணமாக சீனாவுக்குப் புறப்பட்டுச் சென்றார்.

இந்தப் பயணத்தின் போது, சீனாவுடன் புரிந்துணர்வு உடன்பாடு கையெழுத்திடப்படவுள்ளது.

அதேவேளை, சீனாவுக்குப் புறப்படுவதற்கு முன்னதாக, அரச தலைவரும், தலைமை அமைச்சரும் கலந்துரையாடல் நடத்தினர்.

இதன்போதே, அம்பாந்தோட்டைத் துறைமுகம் தொடர்பாக உள்ள பிரச்சினைகள் தீர்க்கப்படும் வரையில், சீனாவுடன் அது தொடர்பான எந்த உடன்பாட்டையும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டாம் என்று அரச தலைவர் மைத்திரி அறிவுறுத்தியுள்ளார்.

முன்னதாக, ரணில் விக்கிரமசிங்கவின் சீனப் பயணத்துக்கு முன்னர் அம்பாந்தோட்டை துறைமுக உடன்பாட்டில் கையெழுத்திடுவதற்கு அரசு திட்டமிட்டிருந்தது என்று தெரிவிக்கப்பட்டது. (வ-5)

## ஜனநாயக ஆட்சியை ஏற்படுத்த

# இலங்கையிடம் உதவி கோருகிறது மியன்மார்

பீஜிங், மே 15

மியன்மாரில் ஜனநாயக ஆட்சியை நிலைநாட்டுவதற்காகவும், உறுதியானதொரு நாடாளுமன்றத்தை அமைப்பதற்கும் இலங்கையின் ஒத்துழைப்பை வழங்குமாறு அந்த நாட்டு அரச தலைவர் ஆங் ஷாங் சூகி, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

சீனாவின் பீஜிங் நகரில் நடைபெறவுள்ள ஒரு பாதை ஒரு அணை உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக சீனா சென்றுள்ள தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இலங்கைக் குழுவினருக்கும், மியன்மார் குழுவினருக்கும் இடையே நடைபெற்ற சந்திப்பின்போதே மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதற்குப் பதிலளித்துள்ள தலைமை அமைச்சர் ரணில்விக்கிரமசிங்க,

“இலங்கையின் சார்பில் வழங்கக்கூடிய சகல ஒத்துழைப்புகளும் வழங்கப்படும்.

இலங்கையின் நாடாளுமன்றக் குழுவொன்று மியன்மாருக்கு அனுப்பிவைக்கப்படும்" என்று உறுதியளித்தார்.



இலங்கைக்கும், மியன்மாருக்கும் இடையேயான வரலாற்று ரீதியிலான உறவுகளைப் பலப்படுத்துவது தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது என்று தலைமை அமைச்சரின் செயலக செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-5)

## வாள்வெட்டுக் குழு கொக்குவிலிலும் நேற்று அடாவடி

யாழ்ப்பாணம், மே 15

வாள்களுடன் வீடு புகுந்த 10 பேர் கொண்ட குழு மின்குமிழ்கள் உள்ளிட்ட பொருள்களை அடித்து நாசம் செய்துள்ளது. வீட்டுக்காரர் வெளியே ஓடியதால் காயங்களின்றித் தப்பித்தனர்.

இந்தச் சம்பவம் கொக்குவில் பிரம்படி 2 ஆம் ஒழுங்கையில் நேற்று மாலை 6.45 மணியளவில் இடம்பெற்றது.

அவர்களைக் கண்டதும் வீட்டில் நின்றிருந்தவர்கள் பின்புறமாக ஓடித் தப்பித்தனர். அந்தக் குழு வீட்டு மின்குமிழ்கள் உள்ளிட்ட பொருள்கள் பலவற்றையும் உடைத்துச் சேதமாக்கியது. சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு அறிவித்தும் உடனடியாக அவர்கள் அங்கு செல்லவில்லை என்று அயலவர்களால் கூறப்பட்டது. (த-4)



## வாளுடன் வந்த ரவுடிகளால் யாழ்.நகரில் நேற்று பதற்றம்

யாழப்பாணம், மே 15

யாழ்ப்பாண நகர் ஸ்ரான்லி வீதியில் நேற்று மு.ப. 11 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வாளுடன் வந்த இருவர், இளைஞன் ஒருவரைத் துரத்தியதால் அந்தப் பகுதியில் பதற்றம் ஏற்பட்டது. வாளுடன் வந்த இருவரும் நகரில் சாதாரணமாக நடமாடினர்.

மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த 21 வயது இளைஞன் ஒருவரின் பெயரில் பதிவு செய்யப்பட்ட மோட்டார் சைக்கிளிலேயே அவர்கள் வாளுடன் நகரில் சுமார் 15 நிமிடங்கள் நடமாடினர். அந்தப் பகுதியால் மற்றொரு மோட்டார் சைக்கிளில் பயணித்த 2 இளைஞர்களை அவர்கள் துரத்திச் சென்றனர். வாளுடன் நடமாடிய இருவரும் 20 வயது மதிக்கத்தக்கவர்கள்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கும் தகவல் வழங்கப்பட்டது. எனினும் பொலிஸார் குறித்த பகுதிக்கு வருவதற்கு முன்னரே அவர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றுவிட்டனர். சினிமாப் பாணியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தால் ஸ்ரான்லி வீதியால் பயணித்தவர்கள் பதற்றமடைந்தனர். (வ-101)

## ஈழப்படுகொலை நினைவேந்தல் திருகோணமலையில் வியாழனன்று

கொழும்பு, மே 15

ஈழப்படுகொலை நினைவேந்தல் நிகழ்வு எதிர்வரும் 18ஆம் திக்தி மாலை 4 மணிக்கு திருகோணமலையில் மனித உரிமைக்கும் அபிவிருத்திக்குமான நிலையத்தில் நடைபெறும் என்று அருட்தந்தை வி.யோகேஸ்வரன் தெரிவித்தார்.

“இறுதிப் போரின்போது முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்ட உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு 18ஆம் திகதியன்று தமிழர் தாயகமெங்கும் நினைவேந்தல் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அந்த வகையில் திருகோணமலையிலும் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது.

தமிழ் இன அழிப்பை உலகுக்கு நினைவூட்டுவதோடு, உயிரிழந்த உறவுகளின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனைக்காக ஒவ்வொரு வருடமும் மே மாதம் 12ஆம் திகதி முதல் 18ஆம் திகதிவரை முள்ளிவாய்க்கால் வாரம் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

இந்த நிகழ்வில் பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் அஞ்சலி செலுத்துபவர்களை கலந்துகொள்ளுமாறு” அருட்தந்தை வி.யோகேஸ்வரன் கேட்டுள்ளார்.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தலைமையில் இந்த முறையும் முள்ளிவாய்க்கால் வாரம் கடைப்பிடிக்கப்படுவதோடு, இந்த நாள்களில் பொதுச் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்படுகிறது. (வ-10)

## காலி முகத்திடலுக்கு அருகே முன்பு மயானம் இருந்ததாம்

### மனித எச்சங்கள் குறித்து பொலிஸார் தகவல்

கொழும்பு, மே 15

காலி முகத்திடலில் மனித எச்சங்கள் மீட்கப்பட்ட பகுதியானது 1989ஆம் ஆண்டு வரை சிறு மயானமாக காணப்பட்டது. ஆதலால் அங்கு புதைக்கப்பட்ட உடலங்களின் எச்சங்களாக இவை இருக்கமுடியும் என்று பொலிஸ் தரப்பு தெரிவித்தது.

காலி முகத்திடலில் சங்கிரிலா நட்சத்திர விடுதியின் நிர்மாணப்பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த நிலையில் நிர்மாணப்பணிகளுக்காக நேற்று முன்தினம் மண்ணை பைக்கோவால் தோண்டிய வேளை அங்கு மனித எச்சங்கள் காணப்பட்டன.

மனித எச்சங்கள் கோட்டைப் பொலிஸார் மீட்கப்பட்டன. அவை பகுப்பாய்வுச்செயற்பாடுகளுக்காக அவர்களால் அனுப்பப்பட்டன.

முதற்கட்ட விசாரணைகள் மற்றும் பகுப்பாய்வு நடவடிக்கைகள் நிறைவடைந்த நிலையில், இந்த மனித எச்சங்கள் பல வருடங்களுக்கு முற்பட்டதென்பது கண்டறியப்பட்டது. இது தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத் துள்ளனர். (வ-10)

## மோடியின் பாதுகாப்புக்காக வந்த ஹெலி கண்டியில் தரித்து நிற்கிறது

### தொழில்நுட்பக் கோளாறு காரணமாம்

கொழும்பு, மே 15

இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடியின் பயணத்துக்காக ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இந்திய உலங்கு வானூர்திகளில் ஒன்று பழுதடைந்த நிலையில் கண்டியில் தரித்து நிற்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.



இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்த இந்தியத் தலைமை அமைச்சர் கொழும்பில் இருந்து கண்டி மற்றும் டிக்கோயாவுக்கு பயணம் செய்வதற்காகவும், அவரது பாதுகாப்பு அணியினரின் பயணங்களுக்காகவும், மாற்று ஒழுங்குகளுக்காகவும் எம்.ஐ.17 உலங்கு வானூர்திகள் நான்கு புதுடில்லியில் இருந்து கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தன.

இந்தியத் தலைமை அமைச்சர் வெள்ளிக்கிழமை மாலையில் தனது பயணத்தை முடித்துக் கொண்டு கண்டியில் இருந்து புறப்பட்டுச்செல்ல முற்பட்ட போது, அவரது அணியில் இருந்த உலங்கு வானூர்தி ஒன்று தொழில்நுட்பக் கோளாறால் பறக்க முடியாத நிலை ஏற்பட்டது.

இதையடுத்து, ஏனைய உலங்கு வானூர்திகள் மூலம் இந்தியத்தலைமை அமைச்சரும் அவரது பாதுகாப்பு அணியினரும் கட்டுநாயக்க வானூர்தி நிலையத்துக்குப் புறப் பட்டுச் சென்றனர்.

இந்த நிலையில், தொழில்நுட்பக் கோளாறு இன்னமும் சீர் செய்யப்படாத நிலையில் கண்டி அஸ்கிரிய மைதானத்தில் இந்திய வான்படையின் எம்.ஐ.17 உலங்குவானூர்தி இன்னமும் தரித்து நிற்கிறது.

உலங்குவானூர்தியில் ஏற்பட்ட கோளாறைக் கண்டுபிடிப்பதற்கு இலங்கை விமானப்படை உதவியுள்ள போதிலும், உதிரிப்பாகங்களை இந்தியாவில் இருந்து எடுத்து வருவதற்காக அதிகாரிகள் காத்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (வ-5)

## வாகரை விநாயகர் ஆலய முன்றிலில் நினைவேந்தல்

மட்டக்களப்பு, மே 15

ஈழப்படுகொலையின் நினைவஞ்சலி நிகழ்வுகள் எதிர்வரும் 18ஆம் திகதி காலை 9 மணிக்கு மட்டக்களப்பு வாகரைப் பிள்ளையார் ஆலய முன்றிலில் நடைபெறும் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் அறிவித்தார்.

இறுதிப் போரின்போது முள்ளி வாய்க்காலில் படுகொலை செய்யப்பட்ட உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு 18ஆம் திகதியன்று தமிழர் தாயகமெங்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மட்டக்களப்பில் நடைபெறும் இந்த நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார். (வ-10)

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் அனைவரும் ஒன்றிணைந்து

## கிளிநொச்சியில் மே 30 இல் மிகப்பெரும் போராட்டம்

கிளிநொச்சி, மே 15

"வடக்கு கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் அனைவரும் ஒன்றிணைந்து மே 30ஆம் திகதி கிளிநொச்சியில் மிகப்பெரிய போராட்டத்தை முன்னெடுப்பர். அரசைத் திரும்பிப் பார்க்கும் அளவுக்கு அந்தப் போராட்டம் நடத்தப்படும். அதற்கு வடக்கு கிழக்கு முழுவதும் ஆதரவு பெறப்படும்"

இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் குடும்பங்களின் இணைப்பாளர் யோ.கனகரஞ்சினி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிளிநொச்சி மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் போராட்டம் 84ஆவது நாளாகவும் நேற்றுத் தொடர்ந்தது. எனினும் அரசு இதுவரை எங்களின் போராட்டம் தொடர்பாக சாதகமான பதிலை வழங்காது அலட்சியமாகச் செயற்படுகின்றது.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் 8 மாவட்டங்களின் சங்க தலைவர்கள், இணைப்பாளர் ஒன்றிணைந்து கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் கலந்துரையாடல் நடத்தப்பட்டது. எதிர்காலத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராயப்பட்டன.

கிளிநொச்சி மாவட்ட உறவுகளின் போராட்டம் 30ஆம் திகதி 100ஆவது நாளை எட்டவுள்ளது. கிளிநொச்சியில் அனைத்து மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களும் ஒன்றிணைந்து அரசுக்கு ஒரு செய்தியை வழங்க வேண்டும் என்று கலந்துரையாடலில் முடிவெடுக் கப்பட்டது என்றார். (வ-6)

# பேருந்தில் பயணித்த பெண்ணின் கைப்பையிலிருந்த நகைகள் மாயம்

## சாவகச்சேரிப் பொலிஸில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், மே 15

தேர்த்திருவிழாவில் அணிவதற்காக கைப்பையில் கொண்டு சென்ற நகைகள் பேருந்தில் மாயமாக மறைந்த சம்பவம் கடந்த வாரம் புலோலிக்கும் சாவகச்சேரிக்கும் இடையே இடம்பெற்றது என்று சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

புலோலியைச் சேர்ந்த பெண் ஒருவரின் நகைகளே இவ்வாறு காணாமற்போயுள்ளது.

அவர் தனது கணவரின் ஊரான கைதடியில் உள்ள ஆலயம் ஒன்றின் தேர்த்திருவிழாவில் கலந்து கொள்வதற்காக புலோலியில் இருந்து சாவகச்சேரி வரை பேருந்தில் பயணித்துள்ளார். நகைகளை அவர் கைப்பை ஒன்றில் வைத்துக் கொண்டு பயணமாகியுள்ளார்.

சாவகச்சேரி தரிப்பிடம் வந்ததும் பேருந்திலிருந்து இறங்கிய அவர் கைப்பையில் வைத்த நகைகளைப் பார்த்துள்ளார். எனினும் அவரது கைப்பைக்குள்ளிலிருந்த நகைகளைக் காணவில்லை. இதனால் தான் பயணித்த பேருந்தில் ஏறி நகைகளைத் தேடிய போதும் அவை கிடைக்கவில்லை.

நகைகள் திருடப்பட்டதா? அல்லது தவறிவிட்டதா? என்று பெண்ணுக்குத் தெரியவில்லை. காணாமற்போன நகைகளின் பெறுமதி சுமார் 4 இலட்சம் என்று தெரிவிக்கப்பட்டது. இது குறித்து அவரால் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (வ-10, 288)



சீனாவுக்கான பயணத்தை மேற்கொண்டுள்ள இலங்கை தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நேற்று சீன அரச தலைவர் ஜின்பிங்கை அவரது மாளிகையில் சந்தித்துப் பேச்சு நடத்தினார். (த)

# டிசெம்பர் இறுதிக்குள் மகிந்த ஆட்சி ஏற்படும்

## கருணாவின் ஆருடம் இது

செங்கலடி, மே15

"அதிகாரத்தில் இல்லாத ஒரு தலைவனுக்குப் பின்னால் உள்ள பலம் எது என்பதை கடந்த மே தினத்தில் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெளிவுபடுத்தியுள்ளார். இந்தவருட இறுதிக்குள் நிச்சயம் ஆட்சிமாற்றம் ஏற்படும்"

இவ்வாறு நம்பிக்கை வெளியிட்டார் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா அம்மான்)

கிரான் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்ற கலாசார விளையாட்டு விழாவில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்

"தமிழ்க் கட்சிகள் தேர்தல் காலங்களில் வழங்கும் வாக்குறுதிகளுக்கும் தேர்தல் முடிவடைந்த பின்பு அவர்களின் செயற்பாடுகளுக்கும் பெரியளவில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. அபிவிருத்தி மற்றும் கொள்கை என்பன பேச்சளவில் மாத்திரமே உள்ளன.

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் மே தினக் கூட்டத்தில் மக்கள் எழுச்சியைக் காட்டியுள்ளனர். மீண்டும் மகிந்த ஆட்சி வரும்போது எமது கட்சிக்கு அதிக முக்கியத்துவம் இருக்கும்.

அந்தச் சூழ்நிலையில் நாங்கள் தனித் தமிழ்க் கட்சியாகப் வெற்றிபெற்று மக்களுக்கான அபிவிருத்திகளைக் கொண்டு வருவோம்.

எமக்கு புதிய அரசியல் தலைமை தேவை என்பதற்காகவே நாங்கள் புதிய அரசியல் கட்சியை உருவாக்கியுள்ளோம். கிழக்கு மாகாண ஆட்சி தமிழர்களின் கைகளில் வரவேண்டும்.

மட்டக்களப்பில் மருத்துவத்துறை திட்டமிட்டு புறக்கணிக்கப்படுகிறது. இந்த விடயத்தில் நல்லாட்சியின் பங்காளிகள் என மார்புதட்டி பெருமைப்படும் கூட்டமைப்பினர் மௌனம் சாதிக்கிறார்கள்" என்று கருணா அம்மான் மேலும் தெரிவித்தார். (வ-ய-47)

# மாகாண, உள்ளூராட்சிசபைகளுக்கு டிசெம்பர் இறுதிக்குள் தேர்தல்கள்

## நளின் பண்டார எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, மே 15

எதிர்வரும் ஓகஸ்ட் அல்லது செப்ரெம்பரில் மாகாண சபைத் தேர்தலும் அதனைத் தொடர்ந்து டிசெம்பர் மாதத்துக்குள் உள்ளூராட்சி சபைத் தேர்தலும் இடம்பெறும் என்று ஐக்கிய தேசிய கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்வரும் ஓகஸ்டில் அல்லது செப்ரெம்பரில் 3 மாகாண சபைகளுக்கான தேர்தல் நடைபெறும். உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான 99 வீதமான பணிகள் நிறைவடைந்துள்ளன. இந்த வருடமே 2 தேர்தல்களும் இடம்பெறும்.

எதிர்க்கட்சிகள் கூறுவதுபோல் நாம் தோல்வி பயத்தால் இந்தத் தேர்தலை ஒத்திப்போடவில்லை. எமக்கு உறுதியான மக்கள் செல்வாக்கு இருக்கும்போது நாம் ஏன் தேர்தலுக்கு அச்சம் கொள்ள வேண்டும்.

இப்போது நாடு அபிவிருத்தியை நோக்கிப் பயணிக்கத் தொடங்கியுள்ளது. வெளிநாட்டு முதலீடுகள் வரத் தொடங்கியுள்ளன. மக்களின் கைகளுக்கு பணம் வரத் தொடங்கியுள்ளது. மகிந்தவால் சீரழிக்கப்பட்ட இந்த நாட்டை நாம் சீர்படுத்திக்கொண்டு செல்கிறோம்.

2020இல் தேர்தல் நெருங்கும் போது இந்த நாடு அடைந்திருக்கும் அபிவிருத்தியைக் காணலாம். ஆனால், 2020இற்கு முன் ஆட்சியை கவிழ்க்க மகிந்த அணி எடுக்கும் முயற்சி ஒருபோதும் வெற்றியளிக்காது.

மகிந்தவின் ஆட்சியில் ஏற்படவிருந்த மிகப் பெரிய வறுமையை நாம் இல்லாது செய்துள்ளோம். வெளிநாடுகளுடனான உறவை வலுப்படுத்தியுள்ளோம்.

அதனூடாக நாட்டுக்கு பெரும் நன்மைகள் ஏற்படவுள்ளன. அதற்கு சிறந்த உதாரணமாகத்தான் எமக்கு ஜிஎஸ்பி பிளஸ் வரிச் சலுகை கிடைக்கவுள்ளது என்றார். (வ-3)

# குழுக்களுக்கு இடையே மோதல்; முச்சக்கரவண்டிக்குத் தீ வைப்பு

யாழ்ப்பாணம், மே 15

இரு குழுக்களுக்கு இடையே இடம்பெற்ற மோதலை அடுத்து முச்சக்கரவண்டி ஒன்று தீயிட்டு எரியூட்டப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 7 மணியளவில் நாகர் கோயில் பகுதியில் நடைந்தது.

"வடமராட்சி கற்கோவளம் புனித நகரைச் சேர்ந்தவர்களுக்கும் நாகர் கோயில் பகுதியைச் சேர்ந்தவர்களுக்கும் இடையே சில தினங்களுக்கு முன் கைகலப்பு இடம்பெற்றது. புனித நகர் பகுதியை சேர்ந்த ஒருவர் முச்சக்கரவண்டியில் நாகர் கோயில் கள்ளுத் தவறணைக்கு சென்றபோது அங்கு வைத்து அவருடைய முச்சக்கரண்டி எரிக்கப்பட்டுள்ளது. முச்சக்கரவண்டி பாவனைக்கு உதவாத வகையில் எரிந்து நாசமாகியது. சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் நாகர் கோயில் பகுதியைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்" என்று பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர். (வ-10-26)



# மைத்திரியா? மகிந்தவா?

## தீர்மானம் எடுக்க சு.கவினருக்கு அறிவுறுத்து



கொழும்பு, மே 15

"சிறிலங்கா சுதந்திர கட்சியில் தொடர்ந்தும் நீடிப்பதா? அல்லது மகிந்த ராஜபக்சவின் பக்கம் செல்வதா? என்பதை நாடாளுமன்ற உறுப்பினர்களும், மாகாண சபை உறுப்பினர்களும் தீர்மானிக்க வேண்டிய காலம் வந்துள்ளது"

இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

"நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் சுதந்திரக் கட்சியின் தலைவர்கள் என தம்மைக் கூறிக் கொண்டு வேறு கட்சித் தலைவர்களுடன் இணைந்து செயற்படுகின்றனர். எதிர்காலத்தில் இவ்வாறு இரண்டு பக்கமும் கால் வைத்திருப்போர் தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படும்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வாக்குகளைப் பெற்றுக் கொண்ட நாடாளுமன்ற மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் சிறிலங்கா பொதுஜன முன்னணியை (மகிந்த அணியை) வலுப்படுத்த நடவடிக்கை எடுக்க முடியாது. அவ்வாறு தேவை என்றால் அவர்கள் குறித்த கட்சியில் இணைந்து கொண்டு அந்தக் கட்சி உறுப்புரிமையை பெற்றுக்கொள்ள வேண்டும்" என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மேலும் தெரிவித்தார். (வ-5)

# உயர்தரத்துக்குத் தகுதி பெறாத 4, 000 மாணவர்களுக்குத் தொழில் கல்வி

கொழும்பு, மே 15

கடந்த வருடம் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றி, உயர் தரத்துக்குத் தகுதி பெறாத 4 ஆயிரம் மாணவர்கள் தொழில் கல்விக்காக எதிர்வரும் செப்டம்பர் மாதம் உயர் தர வகுப்புக்களில் இணைக்கப்படுவர் என்று கல்வி அமைச்சு அறிவித்தது.

"4 ஆயிரம் மாணவர்களுக்காக 40 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. உயர் தரத் தொழில் கல்விக்காக 26 பாட வித்தானங்கள் முன்மொழியப்பட்டுள்ளன. இந்த சகல பாடவிதானங்களையும் இந்த ஆண்டு ஆரம்பமாகும் உயர் தர வகுப்பில் அறிமுகம் செய்வதா? இல்லையா? என்பது குறித்து இதுவரைதீர்மானிக்கவில்லை" என்றும் கல்வி அமைச்சு தெரிவித்தது. (வ)

## சீனாவிலிருந்து ரணில் வந்ததும் அமைச்சரவை மாற்றம் உறுதி

கொழும்பு, மே 15

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க சீனப் பயணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பிய பின்னர், அமைச்சரவை மாற்றம் இடம்பெறும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் காலை சீனாவுக்குப் பயணமானார். அதற்கு முன்னதாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை கடந்த வெள்ளிக் கிழமை இரவு அவர் சந்தித்துக் கலந்துரையாடினார். இந்த சந்திப்பின் போதே மேற்கண்டவாறு முடிவு எடுக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

அமைச்சரவை மாற்றம் தொடர்பாக, ஐக்கிய தேசியக் கட்சிக்கும், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையே முரண்பாடுகள் ஏற்பட்டிருந்தன. இந்த நிலையில், அரச தலைவரைச் சந்தித்த சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைச்சர்கள் சுதந்திரமான குழுவாக நாடாளுமன்றத்தில் அமரப் போவதாக தெரிவித்துள்ளனர்.

இரண்டு கட்சிகளுக்கும் இடையே செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்பாடு ஓகஸ்ட் மாதத்துடன் முடிவடையவுள்ள நிலையிலேயே அவர்கள் இவ்வாறு கூறியிருந்தனர். எனினும், அரச தலைவர் மைத்திரிபால அந்தத் திட்டத்தை உறுதியாக நிராகரித்து விட்டதுடன், அவ்வாறு செய்தால் தாம் கடுமையான நடவடிக்கை எடுப்பேன் என்றும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அமைச்சரவை மாற்றத்தின்போது முக்கிய சில அமைச்சுகள் கைமாறவுள்ளன. எனினும் அவை குறித்த விவரங்கள் இன்னும் அறிவிக்கப்படவில்லை.

தற்போதுள்ள அமைச்சுகளுக்குப் புதிய சில அதிகாரங்கள் ஒப்படைக்கப்படவுள்ளன. பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் பொன்சேகாவின் அமைச்சின் கீழ், அத்தியாவசிய சேவைகளைத் தடையின்றி முன்னெடுக்கும் செயலணி வழங்கப்படவுள்ளது. மலையக அபிவிருத்தி என்றொரு பிரிவு உருவாக்கப்படவுள்ளது.

சட்டம் ஒழுங்கு அமைச்சு புதிய ஒருவரிடம் கையளிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. பலமானதொரு கூட்டணியைக் கருத்திற்கொண்டு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கு அமைச்சுப் பதவியொன்றை வழங்குவதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நடவடிக்கை எடுக்கும் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டத்தில் தனியொரு கட்சி ஆட்சியமைக்கும் பட்சத்தில் அமைச்சரவை அமைச்சர்களின் எண்ணிக்கை 30 ஐ விஞ்சுதலாகாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன், அமைச்சரவை அல்லாத அமைச்சுகள், பிரதியமைச்சுகளின் எண்ணிக்கை 40ஆக இருக்க வேண்டும் எனவும் வரையறுக்கப்பட்டுள்ளது. எனினும், தேசிய அரசு அமையும் பட்சத்தில் அமைச்சரவையின் எண்ணிக்கையை நாடாளுமன்றத்தின் அனுமதியுடன் அதிகரித்துக்கொள்ள முடியும். இதற்கமையவே, அரசமைப்பின் 46 (4) உறுப்புரையின் பிரகாரம் அமைச்சரவைத் தகுதிகொண்ட அமைச்சர்களின் எண்ணிக்கையை 48ஆக அதிகரிப்பதற்கும் அமைச்சரவைத் தகுதியற்ற அமைச்சர்கள், பிரதியமைச்சர்களின் எண்ணிக்கையை 45ஆக அதிகரிப்பதற்கும் தேசிய அரசு நடவடிக்கை எடுத்திருந்தது. (வ-5)

## இரு குடியுரிமையுடைய எம்.பி கூட்டமைப்பில் எவருமில்லை

### பேச்சாளர் சுமந்திரன் தகவல்

யாழ்ப்பாணம், மே 15

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும், இரட்டைக் குடியுரிமையைக் கொண்டிருக்கவில்லை என்று, அந்தக் கட்சியின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின், மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் கீதா குமாரசிங்க இரட்டைக் குடியுரிமையைக் கொண்டிருந்தமையால், அவரது நாடாளுமன்ற உறுப்பினர் பதவி பறிக்கப்பட்டது. இதனை எதிர்த்து அவர் வழக்குத் தாக்கல் செய்துள்ளார். இருப்பினும், இதனைத்தொடர்ந்து இரட்டைக் குடியுரிமை விவகாரம் அரசியலில் பெரும் சர்ச்சைக்குரிய விவகாரமாகி யுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 4 பேர், இரட்டைக் குடியுரிமையைக் கொண்டிருப்பதாக தகவல்கள் வெளியாகியிருந்தது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர், எமது கட்சிக்குத் தெரிந்த வரையில், 16 நாடாளுமன்ற உறுப்பினர்களில் எவருக்கும் இரட்டைக் குடியுரிமை இல்லை என்றார். (வ-5)

## கோப்பாய் வைத்தியசாலையில் ரூ.10 லட்சம் செலவில் சீரமைப்பு

கோப்பாய் பிரதேச வைத்தியசாலையில் "நவமங்கையர் நிவாசம்" அமைப்பால் 10 லட்சம் ரூபா செலவிலான சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

வெளிநோயாளர்பிரிவு, மலசலகூடங்கள், நீர்விநியோகக்குழாய் இணைப்பு மற்றும் மின்சார இணைப்பு ஆகியவற்றின் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. வைத்தியசாலை பொறுப்பதிகாரிவைத்தியசாலையில் மேற்கொள்ள வேண்டிய அத்தியாவசிய சீரமைப்பு வேலைகள் தொடர்பாக நவமங்கையர் நிவாசத்தின் கவனத்துக்கு தெரியப்படுத்தியதை அடுத்து அவைநிறைவேற்றப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (வ-11)

## வாள்வெட்டுக்கு இலக்கானவர் வைத்தியசாலை சென்றபோது அங்கும் துரத்தி வந்தது கும்பல்

### *கச்சாயில் நேற்று இரவு சம்பவம்*

யாழ்ப்பாணம், மே 15

இரவு வாள்வெட்டுக்கு இலக்கானவர் வைத்தியசாலைக்குச் சென்றபோது வாள்வெட்டுக்காரர்கள் மீண்டும் துரத்திச் சென்றுள்ளனர். வைத்தியசாலை வாயிலில் பொலிஸார் நின்றதால் அவர்கள் திரும்பிச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் கச்சாய் தெற்கில் நேற்றிரவு 10.30 அளவில் இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த புவனேஸ்வரன் றஜீவன் (வயது 28) என்பவரே கையில் படுகாயமடைந்தார். அவரது வீட்டுக்கு அண்மையில் வைத்து வாளால் வெட்டி விட்டுத் தப்பிச்சென்ற வாள் வெட்டுக்காரர்கள் காயமடைந்தவர் சிகிச்சைக்காகச் சாவகச்சேரி வைத்தியசாலைக்குச் சென்றுகொண்டிருந்த போது அவரை மீண்டும் துரத்திச் சென்றனர். ஆயினும் அவர் வேகமாக வைத்தியசாலையை நெருங்கினார். வைத்தியசாலை வாயிலில் நேற்றுப் பொலிசார் நின்றிருந்தனர். இதனால் வாள்வெட்டுக்காரர் திரும்பிச் சென்றனர் என்று பாதிக்கப்பட்ட தரப்பினரால் கூறப்பட்டது. (த-4-9)

## வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய்த் தடுப்பூசி

யாழ்ப்பாணம், மே 14

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் அமைந்த குருநகர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்குவிசர் நோய்த்தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாக யாழ்ப்பாண மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி எஸ். உமாசுதன் அறிவித்துள்ளார்.

இன்று திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் மு.ப 11 மணி வரை சென்.றோக் சனசமூக நிலைய முன்பாகவும் காலை 11 மணிதொடக்கம் பி.ப 1 மணிவரை றெக்கிளமேசன் சனசமூக நிலையத்திலும் பி.ப 2.30 தொடக்கம் மாலை 4 மணிவரை புதியகடற்கரை தண்ணீர்தாங்கி சந்தியிலும், நாளை செவ்வாய்க்கிழமை மு.ப 9 மணிக்கு தண்ணீர்தாங்கி 11ஆம் குறுக்குத் தெருவிலும் மு.ப 11 தொடக்கம் 1 மணி வரை தண்ணீர் தாங்கி 3ஆம் குறுக்குத் தெருவிலும் பி.ப 2.30 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை தண்ணீர் தாங்கி 4 ஆம் 5ஆம் குறுக்குத் தெருவிலும் இடம்பெறும். (த-10)

## ஒழுங்கைகளில் கழிவுகள் வீசுவதால் பொதுச் சுகாதாரத்துக்குப் பங்கம்

### அச்சுவேலி மக்கள் கவலை

அச்சுவேலி, மே 15

அச்சுவேலிப் பகுதியில் உள்ளூர் ஒழுங்கைகள் மற்றும் அவற்றின் சந்திகளில் கழிவுகள் இரவோடு இரவாக கொட்டப்பட்டு வருகின்றன. இதனால் பல்வேறு சிரமங்களுக்கு உள்ளாவதோடு பொதுச் சுகாதாரத்துக்கும் பங்கம் ஏற்படுவதாகப் பொதுமக்கள் கவலை தெரிவித்தனர்.

அச்சுவேலிப் பகுதியில் முறைகேடான வகையில் கழிவுப் பொருள் கொட்டப்படுகின்றமை தொடர்பாக பொதுமக்கள் கூடும் இடங்களில் அவர்களின் பேசுபொருளாக இருந்து வருகின்றது.

அத்துடன், அண்மையில் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற கலந்துரையாடலிலும் இது தொடர்பான கருத்துக்கள் மக்களால் முன்வைக்கப்பட்டன. அச்சுவேலிப் பகுதியில் முறைகேடான விதத்தில் கழிவுகள் பொதுமக்கள் நடமாடும் இடங்களில் வீசப்படுவது தொடர்பாக வலி. கிழக்குப் பிரதேச சபையின் அச்சுவேலி உப அலுவலகத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்ட போதிலும், எந்தவிதமான நடவடிக்கையும் இது வரை எடுக்கப்படவில்லை என்று குற்றஞ்சாட்டப் பட்டது.

"குப்பைகள் அகற்றும் நடைமுறையில் அட்டவணைப்படுத்தப்பட்ட முறைமையின் பிரகாரம் குறிப் பிட்ட வீதிகள், ஒழுங்கைகள் உள்ளடக்கப்படுவது தொடர்பாக வலி. கிழக்குப்பிரதேச சபை பகிரங்கமாக அறிவித்து அவற்றை அகற்ற முன்வர வேண்டும்" என்று பொதுமக்கள் கோருகின்றனர். (வ-11)

## திறந்த பல்கலையால் விண்ணப்பங்கோரல்

யாழ்ப்பாணம், மே 15

இலங்கைத்திறந்தபல்கலைக்கழகத்தால் தொடர்பாடலுக்கான பேச்சு ஆங்கிலம், மனிதவள முகாமைத்துவம் ஆகிய குறுகியகாலக்கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

18 வயதுமேற்பட்ட அனைவரும் இந்தக் கற்கைநெறிக்கு விண்ணப்பிக்கமுடியும் என்று இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்தார். "இந்தக்கற்கைநெறிகள் 3 மாதகாலங்களைக் கொண்டுள்ள நிலையில், அதற்கான அனைத்து வகுப்புக்களும் பிறவுண் வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் நடைபெறவுள்ளன. கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்கவிரும்பும்விண்ணப்பதாரிகள் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் விண்ணப்பப்படிவங்களைப்பெற்று எதிர்வரும் 19ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கமுடியும்." என்று யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார். (வ-21)



*சாவகச்சேரியில் அமைக்கப் பட்டுள்ள விகாரைக்கு தாது கோபம் அமைப்பதற்கான அடிக்கல் நேற்று நடப்பட்டது. 523 ஆவது படைப் பிரிவின் தளபதி அடிக்கல்லை நட்டார்.* (த)

## சாராயம் விற்ற இருவருக்குத் தண்டம்

யாழ்ப்பாணம், மே 15

சட்டவிரோதமான முறையில் சாராயம் விற்ற குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச்சம்பவம்கடந்தபுதன்கிழமை கரவெட்டி சிறிநாரதா பகுதியில் நடைபெற்றது.

போயா விடுமுறையில் சட்டவிரோதமாக குறித்த நபர்கள் சாராயம் விற்றுள்ளனர். இவர்களிடம் இருந்து 6 கால் போத்தல் சாராயமும், 2 ஒரு போத்தல் சாராயமும் கைப்பற்றப்பட்டுள்ளன.

70 வயதுடையவரும், 38 வயதுடையவரும் இந்தக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளனர். பருத்தித்துறை நீதிமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை முற்படுத்திய போது இருவருக்கும் தலா 15 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது. (த-10-26)

# கற்கோவளத்தில்நேற்று இளைஞர் குழு அடாவடி

## வாள்கள்,பொல்லுகளுடன் அட்டகாசம்

யாழ்ப்பாணம், மே 15
பருத்தித்துறை கற்கோவளத்தில் வாள்கள், பொல்லுகளுடன் நடமாடிய குழுவொன்று அடாவடியில் ஈடுபட்டதோடு பொருள்களுக்கும் சேதம் விளைவித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.
இதனையடுத்து அங்கு பொலிஸார் குவிக்கப்பட்டுத் தேடுதல் நடத்தப்பட்டதோடு நிலமை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.
இந்தச் சம்பவம் நேற்று மாலை 5 மணியளவில் இடம்பெற்றது. இரண்டு தரப்பினருக்கு இடையிலான முரண்பாடு காரணமாக இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகக் கூறப்பட்டது.
இதனால் இரண்டு தரப்பினரும் குழுக்களாகப் பிரிந்து நின்று தாக்குதல் முயற்சியில் ஈடுபட்டனர் என்றும், இரண்டு வீடுகளுக்குச் சேதம் விளைவிக்கப்பட்டதாகவும் பொலிஸாரால் கூறப்பட்டது.
இளைஞர் குழு வாள்கள், பொல்லுகளுடன் ஒழுங்கைகளுக்குள் ஓடித் திரிந்ததால் மக்கள் அச்சமடைந்தனர். பின்னர் பொலிஸாரைக் கண்டதும் அந்தக் குழுவினர் ஓடி ஒளிந்து கொண்டனர். எவரும் கைது செய்யப்படவில்லை. விசாரணை முன்னெடுக்கப்படுகிறது என்று பொலிஸார் மேலும் கூறினர்.

(த-4-26)

# வசதி வாய்ப்பு இருந்தும் சுயதொழில் புரிவதற்கு இளையோர் பின்னடிப்பு

## மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் பிரேமச்சந்திரன் கவலை

யாழ்ப்பாணம், மே 15
யாழ்ப்பாணத்தில் சுயதொழில் செய்வதற்கான சகல வசதி வாய்ப்புக்களும் இருந்தும், அதை முன்னெடுப்பதற்குப் பட்டதாரிகள் உட்பட இளைய சமுதாயம் முன்வருவதில்லை எனச் சிறைச்சாலை மறுசீரமைப்பு, மீள்குடியேற்றம், புனர்வாழ்வு மற்றும் இந்து விவகார அலுவல்கள் அமைச்சின் பணிப்பாளர் வே.பிரேமச்சந்திரன் குற்றஞ்சாட்டினார்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் புதிய துணைவேந்தர் இ.விக்னேஸ்வரனுக்குப் பாராட்டு விழா நேற்று இணுவில் கந்தசுவாமி ஆலயத்தில் பி.ப. 2.30 மணிக்கு பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் வ.மகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
எமது மாகாணத்தைப் பொறுத்தவரை முன்னைய காலத்தைவிட தற்பொழுது சுயதொழில் வாய்ப்புக்களை உருவாக்க மிகக் குறைந்த வட்டி வீதத்தில் சுயதொழில் கடன்கள் வழங்கப்படுகின்றன. ஆனால் இந்தக் கடன் திட்டத்தின் ஊடாக சுயதொழில் செய்வதற்கு வேலைதேடும் பட்டதாரிகளோ அல்லது இளைய சமுதயாமோ முன்வருவதில்லை. இந்த நிலமையை மாற்ற பல்கலைக்கழகத்திலிருந்து இது தொடர்பில் விழிப்புணர்வு இளையவர்கள் மத்தியில் கொடுக்கப்படவேண்டும்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தராகப் பதவியேற்றுள்ள விக்னேஸ்வரன் இந்த நிலமையைப் பட்டதாரி மாணவர்கள் மத்தியில் கொண்டுசென்று அவர்கள் சுயதொழிலில் ஈடுபடக்கூடிய வழிவகையை ஏற்படுத்தவேண்டும்.
துணைவேந்தர் பதவியேற்றபோது சில விமர்சனங்களுக்கு ஆட்பட்டிருக்கலாம். ஆனால் இவ்வாறான பதவிகள் வரும்போது கூடவே விமர்சனங்களும் வருவது வழக்கம். ஆகவே இது தொடர்பில் அவர் எதையும் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை. அவரும் அலட்டிக்கொள்ளமாட்டார் என எனக்குத் தெரியும் - என்றார்.

(த)

# கிணறு இறைத்தபோது சிக்கின கைக்குண்டுகள்

## தையிட்டியில் நேற்றுச் சம்பவம்

வலி. வடக்கு தையிட்டியில் கிணற்றிலிருந்து கைக்குண்டுகள் பல நேற்று மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். மிகுதி கைக்குண்டுகள் இன்று மீட்கப்படும் என்றும் கூறப்பட்டது.
தையிட்டி அரசடிப்பிள்ளையார் கோயிலை அண்மித்துள்ள காணி ஒன்றைத் துப்புரவு செய்யும் பணி இடம்பெறுகிறது. நேற்றுக் குறித்த காணியிலுள்ள கிணற்றைக் காணிக்காரர் இறைத்துச் சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டிருந்தபோது அதற்குள் இறங்கியவர்கள் பெட்டிகள் பலவற்றை அவதானித்துள்ளனர். அந்தப் பெட்டிகளில் சில உடைந்து அவற்றிலிருந்த கைக்குண்டுகள் சில வெளியே தெரிந்துள்ளன.
அது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. அவற்றில் உள்ள கைக்குண்டுகள் இன்னும் பயன்படுத்தக்கூடிய நிலையில் உள்ளன என்றும், அங்குள்ள இன்னும் பல பெட்டிகள் இன்று மீட்கப்படும் என்றும் பொலிஸார் மேலும் கூறினர்.

(த-4-26)

# எம்மைத் தொடர்ந்தும் ஏமாற்றும் மைத்திரி அரசு

## கேப்பாபிலவு மக்கள் விசனம்



முல்லைத்தீவு, மே 15
எம்மை மீண்டும் ஏமாற்றுவதற்காகவா மே 15 காணிகள் விடுவிக்கப்படும் என்று மைத்திரி அரசு அறிவித்தது. தொடர்ச்சியாக பொய்யான வாக்குறுதிகளை வழங்கி எம்மை ஏமாற்றிக் கொண்டே இருக்கிறது இந்த அரசு. இவ்வாறு கேப்பாபிலவு மக்கள் விசனம் தெரிவித்தனர்.
"மக்களுக்குச் சொந்தமான காணிகளில் முகாம் அமைத்துள்ள இராணுவம் வெளியேறவேண்டும். எமது காணியில் எம்மை மீள்குடியமர்த்த வேண்டும்" என்ற கோரிக்கையை முன்வைத்து கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதிதொடர் அமைதி வழிப் போராட்டத்தை கேப்பாபிலவு மக்கள் முன்னெடுத்து வருகின்றனர்.
இது குறித்து அவர்கள் மேலும் தெரிவித்ததாவது,
"எங்கள் காணிகளில் எம்மை குடியமர்த்துவதற்கு எவரும் கரிசனையாகச் செயற்படவில்லை. மீள்குடியேற்ற அமைச்சரால் மே மாதம் 15 ஆம் திகதி காணிகள் விடு விக்கப்படும் என்று ஊடகங்கள் ஊடாக அறிந்து கொண்டோம். ஆனால்" இதுவரைக்கும் எந்த அதிகாரிகளும் எம்மை அணுகி காணிகள் விடுவிப்பது தொடர்பில் எமக்குத் தெரிவிக்கவில்லை. 75 நாள்களாக நாங்களும் இந்த தகரக் கொட்டகைக்குள் காணிகள் விடுவிக்கப்படும் என்ற எதிர்பார்ப்புடன் இருக்கின்றோம். எமது காணிகளில் நாம் மீள்குடியமர்வதில் இருந்து பின்வாங்க மாட்டோம். பொறுப்பு வாய்ந்தவர்கள் விரைந்து செயற்பட்டு, எம்மை எமது காணிகளில் மீள்குடிய மர்த்துங்கள். இனியும் எம்மை ஏமாற்றாதீர்கள் - என்றனர்.

(ஐ-7)

# புதிய நிர்வாக சபை தெரிவு

கைதடி, மே 15
கைதடி மக்கள் நலன் பேணும் நட்புறவுக்கழகத்தின் இந்தாண்டுக்கான புதிய நிர்வாகத் தெரிவுகள் அண்மையில் அதன் தலைவர் சீ.சந்திரன் தலைமையில் நடைபெற்றது.
இந்த ஆண்டுக்கான தலைவராக ஓய்வு நிலை அதிபரும் சமாதான நீதவானுமாகிய லயன் ப.செல்லத்துரையும், செயலாளராக யாழ். போதனா வைத்தியசாலையின் ஓய்வு நிலை உத்தியோகத்தர் வே.சின்னத்தம்பியும் பொருளாளராகக் கைதடி கவிராஜ் சாரதிப் பயிற்சி பாடசாலையின் பணிப்பாளர் கு.டசீபனும் தெரிவு செய்யப்பட்டனர். மேலும் பதினொரு பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

(த-288)

# திருட்டுச் சந்தேக நபர் அல்வாயில் கைதானார்

யாழ்ப்பாணம், மே 15
அல்வாயில் திருட்டில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் தேடப்பட்டு வந்தவர்களில் மற்றொருவர் நேற்றுமுன் தினம் கைதுசெய்யப்பட்டார். அவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
அல்வாயில் கடந்த மார்ச் மாதம் வீடு புகுந்து நகைகள் உள்ளிட்ட பொருள்கள் திருடப்பட்டன என்று முறையிடப்பட்டது. இந்தக் குற்றச்சாட்டில் ஏற்கனவே 2 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் உள்ளனர். இந்தநிலையில்கிடைத்த தகவலின்படி நேற்றுமுன்தினம் அல்வாயைச்சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டார். அவரும் மறியலில் வைக்கப்பட்டுள்ளார். இந்தக் குற்றச்சாட்டில் இன்னும் 2 பேர் தேடப்படுகின்றனர் என்று பொலிஸார் மேலும் கூறினர்.

(த-4)



# கனரக வாகனம் மோதி மின் கம்பம் முறிந்தது

பளை, மே 15
கனரக வாகனம் மோதியதால் மின் கம்பம் ஒன்று முறிந்தது. ஆலய உற்சவத்துக்காகப் பற்றைகளைத் துப்பரவாக்கும் பணியில் ஈடுபட்ட வாகனமே மின்கம்பத்தடன் மோதியது எனத் தெரிவிக்கப்பட்டது.
இந்தச் சம்பவம் கடந்த பத்தாம் திகதி வடமராட்சி கிழக்கு மருதங்கேணி ஆழியவளை சாலையில் இடம்பெற்றுள்ளது.
அந்தப் பகுதியில் உள்ள வடலியடிப் பிள்ளையார் ஆலயச் சுற்றாடலில் காணப்பட்ட புதர்களைத் துப்பரவு செய்த வாகனம் மோதியதில் மின்கம்பம் முறிந்துள்ளதெனத் தெரிவிக்கப்பட்டது.

(த-9)

# ஏதோ சிலவற்றையாவது செய்கிறது மாகாண சபை

## வடக்கு அவைத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்.மே.15
வடக்கு மாகாண சபை ஒன்றும் செய்வது இல்லை என்று தான் சொல்வதைக் கேட்டிருப்போம். ஆனால் கடந்த மூன்று வருடத்துக்கு முன்பு இந்த வலசப் பறவைகள் தினம் என்று ஒன்று இங்கு நடந்ததா அவ்வாறு ஒரு சிந்தனை இருந்ததா? அதற்கான ஒரு செயற்பாடு நடைபெற்றதா? சொன்னவற்றைச் செய்யவில்லை என்பது உண்மை. ஆனால் அதற்குள்ளும் சிலவற்றை நாம் செய்திருக்கிறோம்.
இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர் சி.வி.கே. சிவஞானம்.
வடக்கு மாகாண சபையின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட வலசப் பறவைகள் தினத்தின் இறுதிநாள் நிகழ்வு நேற்று யாழ்ப்பாணம் பொதுநூலகக் கேட்போர் கூடத்தில் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் நடைபெற்றது.
இதில் உரையாற்றும்போதே சி.வி.கே. சிவஞானம் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
வடக்கு மாகாண சபை ஒன்றும் செய்வது இல்லை என்று தான் சொல்வதைக் கேட்டிருப்போம். ஆனால் கடந்த மூன்று வருடத்துக்கு முன்பு இந்த வலசைப் பறவைகள் தினம் என்று ஒன்று இங்கு நடந்ததா அவ்வாறு ஒரு சிந்தனை இருந்ததா? அதற்கான ஒரு செயற்பாடு நடைபெற்றதா? அதற்கான பதில் இல்லை என்பதுதான். அப்படி இல்லை என்று பதில் வந்தால் நாங்கள் ஏதோ செய்கிறோம். எல்லாவற்றையும் செய்யவில்லை என்பதும் உண்மை. சிலதைச் செய்திருக்கிறோம். சொன்னவற்றைச் செய்யவில்லைஎன்பதுவும்உண்மை. ஆனால் அதற்குள்ளும் சிலவற்றை நாம் செய்திருக்கிறோம்
இந்த வகையில் வலசப் பறவைகள் என்பது பற்றிக் கதைக்கும்போது எனது இனம் பற்றிய ஒரு சிந்தனை வருகின்றது. நாங்கள் ஆரம்ப காலத்தில் இருந்து குறிப்பாக யாழ்ப்பாணத்துத் தமிழர் சிங்கப்பூர், மலேசியா போய் இப்பொழுது உலகத்திலுள்ள அனைத்து நாடுகளிலும்நாம்இருக்கிறோம். முதல் அங்கேயே நின்றோம். இப்பொழுது வந்து வந்து போகின்றோம். எம்முடைய தாயக மண் எம்முடைய மண் என்று நினைத்து வந்து போய்க் கொண்டிருக்கிறோம். எங்களுடைய இனம் இப்பொழுது பல இடங்களிலும் இருக்கின்றோம் வலசைப்பறவைகள் போன்றே தான் தமிழர்கள் இருக்கின்றோம். தமிழர்கள் வலசை மக்கள் அவை பறவைகள் அவ்வளவு தான்என்றார்.
இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானமும், விருந்தினர்களாக வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்களான விந்தன் கனகரட்ணம், பரஞ்சோதி, வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் தவராசா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

(த-12)



கரவெட்டி விக்னேஸ்வராக்கல்லூரியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நேற்று மாபெரும் நடைபவனி இடம்பெற்றது. கல்லூரி அதிபர் எஸ். கனகலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்த நடைபவனியில் கல்லூரி பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், நலன் விரும்பிகள் என ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். (த-108)

யாழ்ப்பாணம் பஸ்ரியன் சந்தியில் நேற்று மாலை இரண்டு முச்சக்கரவண்டிகள் ஒன்றுடன் ஒன்று மோதிச் சேதமடைந்தன. இரண்டு முச்சக்கரவண்டிச் சாரதிகளும் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-115)



# மகனை வெளிநாடு அனுப்பியதால் கடன் தவறான முடிவால் உயிரிழந்தார் தந்தை

யாழ்ப்பாணம், மே 15

குடும்பத் தலைவர் ஒருவர் தவறான முடிவு எடுத்து உயிரை மாய்த்துள்ளார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

கடன்பட்டு வெளிநாடு சென்ற தனது மகன் திருப்பி அனுப்பப்பட்டதால் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் குறித்த தந்தையார் தவறான முடிவு எடுத்து உயிரை மாய்த்துள்ளார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவத்தில் சண்டிலிப்பாய் மாசியப்பிட்டியைச் சேர்ந்த முருகேசு தம்பிராசா (வயதுய 58) என்பவரே உயிரிழந்தார். கடனைத் திரும்பச் செலுத்த முடியவில்லையே என்று கவலைப்பட்டுக்கொண்டிருந்த குறித்த குடும்பத் தலைவர் நேற்றுமுன்தினம் தவறான முடிவு எடுத்து நஞ்சருந்தியுள்ளார். யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அவருக்கு மேலதிக சிகிச்சை அளிக்கப்பட்ட போதும் சிகிச்சை பயனளிக்காது அவர் நேற்றுக் காலை உயிரிழந்தார் என்று விசாரணையில் மேலும் தெரிவிக்கப்பட்டது. இவர் 4 பிள்ளைகளின் தந்தை. பொலிஸார் மற்றும் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் விசாரணை மேற்கொண்டனர். உடலம் குடும்பத்தினரிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டது. (த-4)

## மே 18 இல் விளையாட்டுப்போட்டி சகல கழகங்களும் நிராகரிக்கவேண்டும்

*உறவுகள் கோரிக்கை*

கிளிநொச்சி மே 15

முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தை முன்னிட்டு நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகளை கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த விளையாட்டு கழகங்கள் நிராகரிக்க வேண்டும். இவ்வாறு கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றிலில் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

"முள்ளிவாய்க்கால் நினைவு தினம் என்பது புனிதமாகக் கடைப்பிடிக்க வேண்டிய நாள். எங்களுடைய இறந்த உறவுகளை நினைவு கூருகின்ற நாள். அந்த நாளில் விளையாட்டுப் போட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இது மிகவும் வேதனைக்குரியது. இராணுவத்தால் பல உயிர்கள் காவுகொள்ளப்பட்டன. அவர்களை நினைவு கூருகின்ற நேரத்தில் இந்த விளையாட்டுப் போட்டிகளை ஒழுங்குபடுத்தியிருப்பது கவலைக்குரியது. கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து இந்தப் போட்டிகளில் பங்குபற்றும் விளையாட்டுக் கழகங்கள் போட்டிகளில் கலந்து கொள்ளாது புறக்கணிக்க வேண்டும். போட்டியை வேறொரு நாளில் நடத்துவதற்கு ஏற்பாட்டுக்குழு நடவடிக்கை எடுக்க வேண்டும். " -என்றனர். (ஐ-6)

## இலக்கிய மன்றத்தின் சந்திப்பு

ஆதிரை கலை இலக்கிய சமூக விஞ்ஞான மன்றத்தின் சந்திப்பும் கலந்துரையாடலும் இன்று பிற்பகல் 4மணிக்கு பருத்தித்துறை ஞானாலயத்தில் தென்பொலிகை குமாரதீபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் இந்திய திரைப்படப் பாடலாசிரியர் கவிஞர் விவிகா மற்றும் சட்டத்தரணி செவ்வேள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். இவர்களுடன் இலக்கியவாதிகள் சந்தித்து அனுபவங்களைப் பெற்றுக்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (த-12)

## கசிப்பு வைத்திருந்த ஒருவர் கைதானார்

கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் துன்னாலை மேற்கு குடவத்தைப் பகுதியில் அண்மையில் நடைபெற்றது.

ஒரு லீற்றர் கசிப்பை தனது உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டிலேயே இவர் கைது செய்யப்பட்டுள்ளார். எதிர் வரும் 26 ஆம் திகதி வரை சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்கும்படி பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (த-10-26)

## மரக்கறிகளின் நேற்றைய நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | சுன்னாகம் |
|---|---|---|---|---|
| முள்ளங்கி | 80 | 80 | 60 | 80 |
| கத்தரி | 120 | 120 | 140 | 140 |
| கரட் | 180 | 170 | 200 | 280 |
| மரவள்ளி | 60 | 80 | 60 | 70 |
| பயிற்றை | 120 | 80 | 100 | 120 |
| பாகல் | 160 | 180 | 180 | 240 |
| கருணைக்கிழங்கு | 80 | 100 | | 100 |
| பெ.வெங்காயம் | 90 | 100 | 100 | 100 |
| சி.வெங்காயம் | 200 | 200 | 240 | 240 |
| பூசணி | 60 | 40 | 50 | 60 |
| தக்காளி | 120 | 100 | 100 | 120 |
| வாழைக்காய் | 50 | 40 | 40 | 50 |
| கீரை | 25 | 30 | 15 | 40 |
| பொன்னாங்காணி | 20 | 40 | 40 | 30 |
| பச்சை மிளகாய் | 100 | 200 | 160 | 200 |
| புடோல் | 80 | 80 | 100 | 80 |
| கோவா | 140 | 160 | 240 | 160 |
| வெண்டி | 100 | 100 | 100 | 80 |
| போஞ்சி | 160 | 160 | 240 | 200 |
| லீக்ஸ் | 100 | 100 | 140 | 100 |
| தேங்காய் | 70 | 65 | 60 | 70 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 110 | 110 |
| தேசிக்காய் | 60 | 60 | 60 | 80 |
| வல்லாரை | 20 | 20 | 15 | 10 |
| கறிமிளகாய் | 120 | 180 | 190 | 200 |
| இராசவள்ளி | 200 | 100 | 250 | 300 |
| முருங்கைக்காய் | 120 | 80 | 120 | 100 |

## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்



| | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|
| இறால் | 800 | 1000 | 800 |
| நண்டு | 300 | 500 | 300 |
| கணவாய் | 600 | 800 | 800 |
| பாரை | 700 | 700 | 600 |
| சுறா | 700 | 1000 | – |
| சீலா | 500 | 500 | 300 |
| விளை | – | 500 | – |
| முரல் | 400 | 400 | 500 |
| கும்பிளா | 400 | 400 | 450 |
| கிளாக்கன் | – | 600 | – |
| ஓரா | 300 | 600 | – |
| திரளி | 200 | 200 | 200 |
| நகரை | 200 | 300 | – |
| சூடை | 100 | 200 | 150 |
| ஒட்டி | – | 300 | – |
| திருக்கை | 300 | 400 | 400 |
| மதனம் | 200 | 300 | – |
| கொய் | 60 | 100 | 200 |
| பாலை | 200 | 600 | – |
| வாழை | – | 500 | – |

*2018 மே...*

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னந்த அளுத்கமகே தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தாவது:

கூட்டு அரசு எந்தவொரு அபிவிருத்திப் பணிகளையும் முன்னெடுப்பதில்லை. மகிந்த ஆரம்பித்து வைத்த வேலைத் திட்டங்களை மீளவும் ஆரம்பித்துவிட்டு அவை தம்மால் முன்னெடுக்கப்பட்டவை என்று அரசு காட்டிக்கொள்கிறது. கண்டி அதிவேகப் பாதை நிர்மாணம் இதற்குச் சிறந்த உதாரணமாகும்.

மகிந்த ஆரம்பித்து வைத்த அந்த நிர்மாணப் பணியைத்தான் இந்த அரசு மீண்டும் ஆரம்பிக்கின்றது. கூட்டு அரசால் புதிதாகத் தொடங்கப்பட்டது என்று எதுவுமில்லை. ஆகக் குறைந்தது ஒரு மலசல கூடத்தையேனும் கூட்டு அரசு மக்களுக்கு நிர்மாணித்துக் கொடுக்கவில்லை.

ஆட்சி அமைந்து 2 வருடங்கள் ஆகின்றன. இந்த 2 வருடங்களையும் வெறுமனே கடத்திய அரசு மீதிக் காலத்தையும் அவ்வாறுதான் கடத்தப் போகின்றது. அவ்வாறு நடந்தால் அது நாட்டுக்குப் பெரும் ஆபத்தாக அமைந்துவிடும். இனியும் இந்த ஆட்சி தொடர்வதை அனுமதிக்க முடியாது.

இந்தத் தொழிலாளர் தினக் கூட்டம் அரசுக்கு ஒரு செய்தியைக் கூறியுள்ளது. ஆட்சி அதிகாரத்தைக் கைகளில் வைத்துள்ள 2 கட்சிகளின் தொழிலாளர் தினக் கூட்டங்களுக்கு வந்த மக்களின் எண்ணிக்கையை விடவும் எதிர்க்கட்சியான எங்களது கூட்டத்துக்கு வந்த மக்களின் எண்ணிக்கை அதிகம்.

மக்கள் கூட்டு அரசுக்கு வழங்கிய ஆணை முடிந்துள்ளதை எமது தொழிலாளர் தினக் கூட்டத்துக்கு வந்த மக்கள் தெரிவித்தனர். இதற்குப் பிறகும் இந்த அரசால் தொடர்ந்து பயணிக்க முடியாது. அடுத்த வருட மே தினத்துக்குள் இந்த அரசைக் கவிழ்ப்போம். புது ஆட்சியை உருவாக்குவோம்.

அரசு உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைத் தேர்தலுக்குச் சென்றால் உண்மை நிலை விளங்கும். அத்தோடு அரசின் ஆட்டம் அடங்கிவிடும். தாம் தோற்பது நிச்சயம் என்று உணர்ந்துள்ளதால்தான் தேர்தலை நடத்தாமல் அரசு இழுத்தடிக்கின்றது - என்றார். (வ-5)



பெண்களுக்கான ஆடம்பர நெக்லஸ் நவீன வடிவங்களில் தற்போது சந்தைக்கு வந்துள்ளன. இவை கோல்ட் வடிவிலும், வெள்ளி வடிவிலும் காணப்படுகின்றன. இவை ஆயிரத்து 50 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.

## இருதய நோயால் 12 நாள் சிசு சாவு

கிளிநொச்சி, மே 15
கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் பிறந்து 12 நாள்களேயான சிசு இருதய நோயால் இறந்துள்ளது என்று கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.
மூச்சு எடுப்பதற்குச் சிரமப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட சிசு கடந்த வியாழக்கிழமை உயிழந்தது என்றும்தெரிவிக்கப்பட்டது. (ற-6)

## சட்டவிரோத மின் பாவனை: இருவர் மீது வழக்குத் தாக்கல்

தென்மராட்சி, மே 15
தென்மராட்சி பிரதேசத்தில் சட்ட விரோதமாக மின்சாரம் பெறுவோரைக் கண்டு பிடிக்கும் நடவடிக்கையில் இலங்கை மின்சார சபையினர் பொலிஸாருடன் இணைந்து ஈடுபட்டுள்ளனர்.
நேற்றுமுன்தினம் இரவு பிரதேசத்தில் மேற்கொண்ட சோதனையில் மீசாலை மற்றும் கொடிகாமம் எருவன் பகுதிகளில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற இருவர் இனங் காணப்பட்டனர்.
சாவகச்சேரி பொலிஸார் மீசாலை வாசிக்கு எதிராகவும், கொடிகாமம் பொலிஸார் எருவன் வாசிக்கு எதிராகவும் நேற்று சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் வழக்குகள் தாக்கல் செய்தனர்.
வழக்குகளை விசாரித்த நீதிவான் வழக்குகளை ஜூன் மாதத்திற்கு ஒத்திவைத்தார். (ற-9)

# மூளாய் வீட்டுத் திட்டத்துக்கான வேலைத் திட்டங்கள் ஆரம்பம்

## பயனாளிகளுக்கான மணல் நேற்று விநியோகம்



யாழ்ப்பாணம், மே 15
யாழ்ப்பாணம், பொன்னாலை, மூளாய் குடியேற்றத் திட்டத்துக்கான கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வீட்டுத் திட்டத்துக்கான மணல் நேற்று விநியோகிக்கப்பட்டது.
பொன்னாலை, மூளாய் குடியேற்றத்திட்டம் 1980 ஆண்டு காலப்பகுதியில் 65 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டது. 80ஆம் ஆண்டு முதல் இருந்து 90ஆம் ஆண்டுவரை அந்தக் காணிகளிலேயே அந்த மக்கள் வாழ்ந்து வந்தனர். 1990ஆம் ஆண்டின் பிற்பகுதியில் ஏற்பட்ட போர்ச்சூழலால் அங்கிருந்த மக்கள் இடம்பெயர்ந்து சென்றனர். போர் நிறுத்த காலத்தில் மக்கள் சொந்த இடங்களுக்கு திரும்பி வந்த போது அவர்களது வீடுகள் உடைக்கப்பட்டிருந்தன. 2005ஆம் ஆண்டளவில் அந்தந்த காணி உரிமையாளர்களுக்கு அரசால் வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டன.
பின்னர் ஏற்பட்ட இராணுவ ஆக்கிரமிப்பால் அந்த மக்கள் மீண்டும் இடம்பெயர்ந்தனர். கடந்த பல வருடங்களாக அவர்கள் பல இடங்களில் வாழ்ந்தனர். தற்போது அந்தக் காணிகளுக்கான வீட்டுத் திட்டங்களை வழங்குவதற்கு வலிகாமம் மேற்கு பிரதேச செயலகம் முன்வந்தது. பயனாளிகளுக்கு தலா 5 இலட்சம் ரூபா நிதி தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் வழங்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.
மக்கள் தங்களுடைய காணிகளில் வீடு அமைப்பதற்கான பணிகளை முன்னெடுத்தனர். அதற்கான மணல்க் கொள்வனவுகளை பெற்றுக்கொள்வதற்கு சிறிது தாமதங்கள் ஏற்பட்டன. தற்போது மணலுக்கான அனு மதி கிடைத்துள்ளது. வடமராட்சி நாகர்கோயிலில் இருந்து மணல் கொண்டுவரப்பட்டது.



நேற்றுக் காலை முதல் மூளாய் குடியேற்றத் திட்டத்தை சேர்ந்த மக்களுக்கு மணல் விநியோகிக்கப்பட்டது. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தொழில் நுட்ப உத்தியோகத்தர் அ. ஜெயகரன் மக்களுக்கான மணல் விநியோகத்தில் நேரடியாக ஈடுபட்டார். அவருடைய கண்காணிப்பில் மக்கள் வீடு கட்டுவதற்கான ஆரம்ப கட்ட (அத்தி பாரம்) வேலைத்திட்டங்களில் ஈடுபட்டனர்.
மூளாய் குடியேற்றத் திட்டத்தில் உள்ள 65 வீடுகளினதும் காணிகளுக்கும் தொடரச்சியாக மணல் விநியோகிக்கப்படும் என்றும், மக்களை அவர்களுடைய காணிகளை அடையாளப்படுத்தி அதற்கான வேலைத்திட்டங்களை ஆரம்பிப்பதற்குத் தொடர்பு கொள்ள முடியும் என்று அறிவுறுத்தப்பட்டது. (ற-21)

காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில்

## கூட்டமைப்பும், அரசும் பாராமுகமாக நடக்கின்றன

### ஆனந்த சங்கரி குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மே 15
காணாமல் ஆக்கப்பட்டவர்களது உறவினர்கள் நடத்தும் போராட்டம் எந்தவிதத் தீர்வும் பெற்றுக் கொள்ள முடியாது 100ஆவது நாளை நோக்கிப் பயணிக்கின்றது. இந்த விடயத்தில் அரசும், தமிழ்த்தேசியக்கூட்டமைப்பும் பாராமுகமாகவே நடந்து கொள்கின்றன என தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ. ஆனந்த சங்கரி தெரிவித்தார்.
அவரால் மேலும் அனுப்பப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:
காணமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் மேற்கொள்ளப்படும் போராட்டத்துக்கு ஒரு தீர்வை பெற்றுக் கொடுக்க முடியாமல் ஏதோ சாட்டுப் போக்குகள் கூறியே சம்பந்தப்பட்டவர்கள் காலத்தை கடத்திவிட்டார்கள்.
காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் எத்தனையோ புகைப்படங்கள் மற்றும் ஒளிப்பதிவு ஆதாரங்களை தம்வசம் வைத்துள்ளார்கள். அந்த ஆதாரங்களில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் அருகில் உள்ள இராணுவ அதிகாரிகள் மற்றும் வீரர்களை அடையாளம் கண்டு அவர்களிடம் விசாரணை செய்தால் அவர்களுக்கு என்ன நடந்தது என்று தெரியும்.
காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நிலையை அறிந்து அவர்களின் உறவுகளுக்கு ஒரு முடிவை அறிவிக்கலாம். இந்த பொறுப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கையில் எடுத்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அதைக் தட்டிக்கழிப்பது தமிழ்த்தேசியக்கூட்டமைப்பிற்கு அழகல்ல. என்றுள்ளது. (ற-10)

## தாதியர் விரிவுரையாளர்களுக்கு மேலதிக கொடுப்பனவு அதிகரிப்பு

கொழும்பு, மே 15
தாதியர் பயிற்சி நிலையங்களில் கற்பிக்கும் விரிவுரையாளர்களுக்கான மேலதிக கொடுப்பனவு 10 ஆயிரம் ரூபாவால் அதிகரிக்கப்படும் என்று சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.
பன்னாட்டுத் தாதியர் தின நிகழ்வு கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது
விரிவுரையாளர்களுக்கு மேலதிக நேரக் கொடுப்பனவை அதிகரிக்க வேண்டும் என்று கோரப்பட்டிருந்தது. அதைப் பரிசீலித்த அரசு மேலதிகமாக 10 ஆயிரம் ரூபாவை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது. மேலதிக கொடுப்பனவு எதிர்காலத்தில் 20 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்படும். ஏனைய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடி வருகிறோம். சுகாதாரத் துறை சிறந்த நிலையில் பேணப்படும். என்றார். (ற-4)

## நாட்டுக்கு பயன்மிக்கதான அமைச்சரவைத் திருத்தம்

### விரைவில் என்கிறார் அமைச்சர் ராஜித

கொழும்பு. மே 15
நாட்டுக்கு பயன்மிக்க வகையில் அமைச்சரவைத் திருத்தம் ஒன்றை விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளது.



இவ்வாறு சுகாதார. போசனை மற்றும் தேசிய மருத்துவத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.
மருந்தாளர்கள் 52 பேருக்கு நியமனக் கடிதங்களை வழங்கும் நிகழ்வில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது
அமைச்சரவைத் திருத்தத்துக்கு அரச தலைவரதும், தலைமை அமைச்சரதும் இணக்கம் கிடைத்துள்ளது. அரச பணியார்களின் பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாடித் தீர்வு காண்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.
சுகாதார சேவையாளர்களுக்கு மேலதிக நேர பணிக் கொடுப்பனவுக்காக மட்டும் இந்த ஆண்டு 4 பில்லியன் ரூபா மேலதிக நிதி அவசியமாகவுள்ளது என்று நிதியமைச்சு தெரிவித்துள்ளது. அதற்கு அவசியமான சுற்றறிக்கை எதிர்வரும் நாள்களில் வெளியிடப்படும் என்றார். (ற-5)

# சுகாதாரத் தொண்டர்களின் போராட்டம் வலுவாகின்றது

## யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி சுகாதார தொண்டர்களும் இணைந்தனர்

வவுனியா, மே 15
நிரந்தர நியமனம் கோரி சுகாதாரத் தொண்டர்களால் வவுனியாவில் மேற்கொள்ளப்பட்டுவரும் போராட்டம் நேற்று 11 ஆவது நாளாகத் தொடர்ந்தது.
யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி போன்ற பகுதிகளிலுள்ள சுகாதாரத் தொண்டர்கள் வவுனியா போராட்டத்தில் நேற்றுமுன்தினம் இணைந்து கொண்டனர்.
யாழ்ப்பாணத்திலிருந்து 20சுகாதாரத் தொண்டர்கள் போராட்டத்தில் இணைந்து கொண்டுள்ளனர்.
"யாழ்ப்பாணத்தில் எம்மால் மேற்கொண்ட போராட்டத்துக்கு ஆதரவு வழங்க எவரும் முன்வரவில்லை. எனவே வவுனியாவிலுள்ள போராட்ட களத்தில் இணைந்துகொண்டுள்ளோம்" என்று அவர்கள் தெரிவித்தனர்.




வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், சி. சிவமோகன் வடமாகாண சுகாதார அமைச்சர் ப. சத்தியலிங்கம் ஆகியோர் சுகாதார தொண்டர்களின் போராட்டக் களத்துக்குச் சென்று தங்களது ஆதரவைத் தெரிவித்தனர். சுகாதாரத் தொண்டர்களின் போராட்டம் நியாயமானது. நியமனம்வழங்கு வதற்கு வலியுறுத்துவோம் என்று அவர்கள் தெரிவித்தனர்.
"15 ஆண்டுகளுக்கு மேலாக சுகாதாரத் தொண்டர்களாகப் பணியாற்றும் எமக்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி போராட்டத்தை ஆரம்பித்துள்ளோம். எமக்குத் தீர்வு கிடைக்கும் வரை போராட்டத்தைக் கைவிடப்போவதில்லை" என்று போராட்டம் நடத்துவோர் தெரிவித்தனர். (ற-10)

# மேலதிக சிறுபோக செய்கையை உடன் அழிப்பதற்குத் தீர்மானம்

## இரணைமடு விவசாயிகள் சம்மேளனச் செயலாளர் தெரிவிப்பு

கிளிநொச்சி, மே 15
இரணைமடுக் குளத்தின் கீழ் சிறுபோகத்துக்கு 890 ஏக்கர் நிலமே அனுமதிக்கப் பட்டுள்ளது. ஆனால் ஆயிரத்து 30 ஏக்கர் நிலத்தில் சிறுபோகம் விதைக்கப்படுகின்றது. நெருக்கடிகளைத் தவிர்க்கும் நோக்கில் மேலதிக விதைப்பு நிலத்தை உடனடியாக அழிப்பது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு இரணைமடு விவசாயிகள் சம்மேளனச் செயலாளர் சிவமோகன் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:
இரணைமடுக் குளத்தின் கீழ்2017ஆம்ஆண்டுக்கான சிறுபோகம் 890 ஏக்கர் நிலத்திலேயே மேற்கொள்ள அனுமதிப்பட்டிருந்தது.

இரணைமடுக் குளத்தின் கீழான விதைப்பு இடம்பெறும் பிரதேசங்கள் அளவிடப்பட்டன. விதைப்புக்காக உழவு செய்யப்பட்ட பிரதேசமாக ஆயிரத்து 30 ஏக்கர் கண்டறியப்பட்டது. இதுவரை 905ஏக்கர்நிலத்தில்விதைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலதிக விதைப்பு நிலமாக 140 ஏக்கர் இனங்காணப் பட்டுள்ளது. அவற்றை உடனடியாக அழிக்கத் தீர்மானிக்கப்பட்டது. மேலதிக விதைப்பு மேற்கொண்டவர்களுக்கான உரமானியத்தையும், நீர்ப் பங்கையும் நிறுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நீர்ப்பாசனப் பணிப்பாளர் சுதாகரன், கமநல சேவைகள்உதவிப்பணிப்பாளர்ஆயகுலன், விவசாயிகள் கலந்து கொண்ட சந்திப்பிலேயே இந்த முடிவுகள் எடுக்கப்பட்டன- என்றார். (ற-101)

# பௌத்த நிலையங்களின் பணிகள்பாராட்டத்தக்கன

## அரச தலைவர் மைத்திரி தெரிவிப்பு

கொழும்பு, மே 15
பணம் மற்றும் அதிகாரத்தின் பின்னால் இழுபட்டுச் செல்லும் சமூகம் மனிதனின் நற்பண்புகளைப் பின்னடையச் செய்துள்ளது. இத்தகைய நிலையில் பன்னாட்டு பௌத்த நிலையங்கள் மேற்கொண்டு வரும் பணி பாராட்டத் தக்கது.

இவ்வாறு அரசதலைவர் மைத்திரிபாலசிறிசேன தெரிவித்தார்.
மானெல்வத்த நாகானந்த பன்னாட்டு பௌத்த பல்கலைக் கழகத்தின் வெசாக் புண்ணிய நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் அரச தலைவர் மைத்ரிபால சிறிசேன முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார். அங்கு உரையாற்றினார் என்று தெரிவித்து அரச தலைவரின் ஊடகப் பிரிவு அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

அதில் உள்ளதாவது
புத்த பெருமானின் மூன்று முக்கிய புண்ணிய நிகழ்வுகளைக் கடைப்பிடிக்கும் சிறி நாகானந்த பன்னாட்டு பௌத்த வெசாக் புண்ணிய நிகழ்வு மானெல்வத்த நாகானந்த பன்னாட்டு பௌத்த பல்கலைக்கழகத்தில் சிறப்பாக நடைபெறுகின்றது.

நிகழ்வின் இரண்டாம் நாளான நேற்று காலை விகாரைக்குச் சென்ற அரச தலைவர் முதலில் சமய நிகழ்வுகளில் கலந்துகொண்டார். நாகானந்த பன்னாட்டு பௌத்த பல்கலைக்கழகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி போதாகம சந்திம தேரர் மற்றும் தாய்லாந்தின் மகா சூலா லோன்கோன் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் தர்மகோஷா ஜான் தேரர்களால் அனுசாசன உரை நிகழ்த்தப்பட்டது.

பேராசிரியர் சங்கைக்குரிய தீகல்லே மகிந்த தேரர் மற்றும் கலாநிதி காமினி காரியவசம் ஆகியோரால் எழுதப்பட்டுள்ள பௌத்த நூல் அரச தலைவரிடம் கையளிக்கப் பட்டது. நிகழ்வுக்கு வருகை தந்திருந்த வெளிநாட்டு தேரர்களால் அரச தலைவருக்கு நினைவுச் சின்னம் வழங்கப்பட்டது. (ற-10)

# சர்ச்சையில் சிக்கினார் ரணில்



கொழும்பு, மே 15
தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க சர்ச்சையில் சிக்கியுள்ளார் என்று சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பன்னாட்டு வெசாக் தினத்தில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க பௌத்த கொடியை தலைகீழாக அணிந்திருந்தார் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் பன்னாட்டு வெசாக் தின நிகழ்வு விழா, இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி தலைமையில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. இதன்போது எடுக்கப்பட்ட புகைப்படங்கள் சிலவும் இணையத்தளங்களில் பதிவிடப்பட்டுள்ளது.

குறித்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்த ஏனையோர் சரியான முறையில் பௌத்த கொடியை அணிந்திருந்தனர். ரணில் மாத்திரம் தலைகீழாக அணிந்திருந்தார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ - 10)

# கடவுச்சீட்டுச் சுட்டெண்ணில் இலங்கைக்கு 85ஆவது இடம்

கொழும்பு, மே 15
2017ஆம் ஆண்டுக்கான குடிவரவு குடியகல்வு மற்றும் கடவுச்சீட்டு சுட்டெண்ணில் இலங்கைக்கு 85ஆவது இடம் கிடைத்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. 91 நாடுகளை அடிப்படையாக கொண்டு இந்த சுட்டெண் வெளியிடப்பட்டுள்ளது. ஜேர்மன், சிங்கப்பூர் அந்த பட்டியலில் உலகின் மிக பலமான கடவுச்சீட்டு கொண்ட நாடுகளாக மதிப்பிடப்பட்டுள்ளன. அந்த நாடுகளின் வெளிநாட்டு கடவுசீட்டுகளை பயன்படுத்தி, நுழைவு விசைவு இன்றி 159 நாடுகளுக்கு பயணிக்க முடியும்.

இலங்கைக் கடவுச்சீட்டில் நுழை விசைவு இன்றி 37 நாடுகளுக்கு மாத்திரமே பயணிக்க முடியும். சுட்டெண்ணில் சுவீடன் இரண்டாம் இடத்தை பிடித்துள்ளது. அந்த நாட்டின் கடவுசீட்டை பயன்படுத்தி 158 நாடுகளுக்கு நுழைவு விசைவு இன்றி பயணிக்க முடியும்.

இந்த சுட்டெண்ணில் டென்மார்க், பின்லாந்து, இத்தாலி, பிரான்ஸ், ஸ்பெயின், நோர்வே, ஐக்கிய ராஜ்ஜியம், தென் கொரியா, அமெரிக்கா ஆகிய நாடுகள் மூன்றாம் இடத்தை பிடித்துள்ளன. இந்த நாடுகளின் கடவுச்சீட்டுகளை பயன்படுத்தி நுழைவு விசைவு இன்றி 157 நாடுகளுக்கு பயணிக்க முடியும். குடிவரவு குடியகல்வு மற்றும் கடவுச்சீட்டு சுட்டெண்ணில் 84ஆவது இடத்தை பிடித்துள்ள எத்தியோப்பியா கடவுச்சீட்டில் நுழைவு விசைவு இன்றி 38 நாடுகளுக்கு பயணிக்கமுடியும்.

80ஆவது இடத்தை பிடித்து நைஜீரியா கடவுச்சீட்டில் நுழை விசைவு இன்றி 43 நாடுகளுக்கு பயணிக்கமுடியும். 82ஆவது இடத்தை பிடித்துள்ள மியன்மார் கடவுச்சீட்டில் நுழை விசைவு இன்றி 41 பயணிக்க முடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது. சுட்டெணில் 53ஆவது இடத்தை பிடித்துள்ள மாலைதீவு கடவுச்சீட்டில் நுழை விசைவு இன்றி 53 நாடுகளுக்கு பயணிக்கமுடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-10)

# பட்டப்பகலில் வீடு பிரித்து திருட்டு

வடமராட்சி கரவெட்டியில் பட்டப்பகலில் கதவு பிரித்து விடு புகுந்த திருடர்கள் பணம் மற்றும் நகைகளைத் திருடிச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் கரவெட்டி மேற்கில் நேற்றுமுன்தினம் முற்பகல் 11.30 அளவில் இடம் பெற்றது. வீட்டிலிருந்த குடும்பத் தலைவியைத் தவிர ஏனையவர்கள் காலையில் வெளியே சென்றிருந்தனர். வீட்டிலிருந்தவரும் முற்பகலில் தேவை கருதி வெளியே புறப்பட்டுச் சென்றுள்ளார். திரும்பி வந்து பார்த்தபோது வீட்டுக் கதவு திறந்தபடி காணப்பட்டது. உள்ளே சென்று பார்த்த போது அலு மாரி உடைக்கப்பட்டுப் பொருள்கள் சிதறுண்டு காணப்பட்டன. அதன்பின்னரே வீட்டிலிருந்த சுமார் 8 பவுண் நகைகளும் சுமார் ஒரு லட்சம் ரூபா பணமும் காணாமல் போயுள்ளமை தெரியவந்தது என்று முறையிட ப்பட்டிருக்கிறது என்று பொலிஸார் தெரிவித்தனர். அது தொடர்பில் விசாரணை செய்வதாக நெல்லியடிப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ற-4-26)

## தொண்டையில் “கேக்” சிக்கியதால் சிறுவன் சாவு

கண்டி, மே 15
கேக்கை உண்ட 6 வயதுச் சிறுவன் தொண்டையில் கேக் துண்டு சிக்கியதால் மூச்சுத்திணறி உயிரிழந்தான் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் கண்டி தெனியாய - என்சல்வத்த தோட்டத்தில் கடந்த வியா ழக்கிழமை நடந்துள்ளது. அதே இடத்தைச் சேர்ந்த சிறுவனே இவ்வாறு உயிரிழந்தான்.

பாடசாலையில் தரம் ஒன்றில் பயிலும் குறித்த சிறுவன் மூச்சுத்திணறியபடி தாயிடம் ஓடிச் சென்று மயங்கிச் சரிந்தான். உடனடியாக சிறுவனை வைத்தியசாலையில் சேர்த்தபோது அவர் உயிரிழந்துவிட்டமை உறுதிப்படுத்தப்பட்டது. விசாரணைகளின் பின்னர் சிறுவனின் உடலம் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது. (ற-4)

# மலையக மக்களும் இலங்கையரே

## மோடியின் பேச்சுக்கு முன்னாள் கடற்படை அதிகாரி பதில்

கொழும்பு, மே 15
மலையக மக்களும் தற்போது இலங்கை குடிமக்களே. அவர்கள், இந்தியாவிலிருந்து வந்த சாதாரண தோட்டத் தொழிலாளர்கள் அல்லர். குறிப்பிட்ட அந்த மக்களைப் பற்றி மாத்திரம் பேசாமல், இலங்கைக் குடிமக்களே பற்றி, இந்தியத் தலைமை அமைச்சர் பேசியிருக்க வேண்டும்.

இவ்வாறு முன்னாள் கடற்படை அதிகாரி ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,
குறிப்பிட்ட ஒரு தொகை மக்களைப் பற்றி மாத்திரம் பேசுவது என்பது, கடினமான நேரத்திலும் நாட்டுக்குள் ஏற்பட்டுள்ள நல்லிணக்கத்தைச் சீர்குலைக்கும் ஒரு விடயமாகும். நாட்டில் காணப்படும் வளங்கள் அனைத்தும் அனைத்துக் குடிமக்களுக்கும் சமமாகப் பிரிக்கப் பட்டி ருக்க வேண்டும். மோடி, நாட்டின் ஒரு பகுதி குடிமக்களுக்கு மாத்திரம் ஆதரவாக பேசிவிட்டு, நாட்டிலுள்ள மற்றைய சமூகத்தினர் கெட்டவர்கள் என்று உலகத்துக்கு எடுத்துக்காட்டியுள்ளார்.

நீண்ட காலமாக இடம்பெற்ற போர் காரணமாக, அனைத்து சமுதாயத்தைச்சேர்ந்த பலரும் உயிரிழந்தனர். தற்போது, நல்லிணக்கம் ஏற்பட்டு ஒவ்வொரு சமுதாயத்தில் உள்ளவர்களும் மற்றைய சமுதாயத்துடன் ஒன்றுபட்டு வாழ்வதற்கு ஆசைப்படுகின்றனர்.



மோடியின் இந்தச் செயற்பாடு, நாட்டின் இறையாண்மைக்கு அச்சுறுத்தலாகும். இந்தியத் தலைமை அமைச்சருக்குத் தேவையான பாதுகாப்பை நாம் வழங்கியிருப்போம் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை. இங்கே உள்ள நல்ல குடிமக்கள் மீது சந்தேகம் இருப்பதால், அவருக்குத் தேவையான பாதுகாப்பைக் கொண்டு வருதற்கு அவருக்கு உரிமை உண்டு. ஆனால், அது நாட்டின் இறையாண்மைக்கு அச்சுறுத்தலாக அமையும் என்பதை அவர் புரிந்துக்கொள்ள வேண்டும் - என்றார். (ஐ-10)


# சிப்பாய்க்கு தூக்கு

கொழும்பு, மே 15
கடமைக்காக வழங்கப்பட்ட துப்பாக்கியைப் பயன்படுத்திக் கொலை செய்த இராணுவச் சிப்பாய்க்கு அனுராதபுரம் உயர் நீதிமன்றில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.

கடமைக்காக வழங்கப்பட்ட ரி56 ரக துப்பாக் கியால் இந்தக் கொலை யைச் செய்துள்ளார் என்று நீதிமன்றத்தில் உறுதி செய்யப்பட்டுள்ளது. அந்த முன்னாள் சிப்பாய்க்கு கடந்த வியாழக் கிழமை தூக்குத் தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

ஹொரவபொத்தான, கப்பு கொல்லாவையில் 2007ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 15ஆம் திகதி இந்தக் கொலைச் சம்பவம் நடந்துள்ளது. (ற-10)





வடக்கு மாகாண விவசாய அமைச்சின் ஏற்பாட்டில் உலக வலசைப் பறவைகள் தினத்தை முன்னிட்டு வதிவிடக் கருத்தமர்வும் வெளிக்களப் பயிற்சியும் யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்டது. கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்த இந்தச் செயற்பாடுகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெற்றன. மூன்று நாள் நிகழ்ச்சியில் வடக்கின் ஐந்து மாவட்டங்களையும் சேர்ந்த 108 மாணவர்கள் பங்கேற்றனர். (ற-10)

## கசிப்புக் காய்ச்சிய குற்றச்சாட்டில் கதிரிப்பாயில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், மே 15

அச்சுவேலி கதிரிப்பாயில் வீடு ஒன்றில் 20 லீற்றர் கோடா மற்றும் கசிப்பு என்பன மீட்கப்பட்டன என்று அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர். அவற்றை வைத்திருந்த குற்றச்சாட்டில் குறித்த வீட்டு உரிமையாளர் கைது செய்யப்பட்டார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது.

அந்த நபர் கசிப்பு உற்பத்தி மற்றும் வியாபாரங்களில் ஈடுபடுபவர் என்று தகவல்கள் கிடைத்திருந்தன. கண்காணிப்பைத் தொடர்ந்தோம். நேற்றுக் கிடைக்கப்பட்ட தகவலின் படி வீட்டுக்குச் சென்றபோது அங்கு 20 லீற்றர் கோடா, கசிப்பு 3 லீற்றர், லீட்ஸ், கசிப்பு காய்ச்சுவதற்கான உபகரணங்கள் உள்ளிட்ட பொருள்கள் மீட்கப்பட்டன. அவற்றை வைத்திருந்தமை மற்றும் கசிப்பு காய்ச்சியமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் குறித்த வீட்டு உரிமையாளரான 50 வயதுநபர் மீது சுமத்தபட்டிருக்கிறது. அவர் விசாரணையின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-4, 26)

## புதுங்கிக் கொண்ட விமல் வீரவன்ச பல தரப்புகள் விமர்சனம்

கொழும்பு, மே 15

இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடிக்கு எதிராக கறுப்புக் கொடிப் போராட்டம் நடத்தப்பட வேண்டும் என்று காட்டமாகக் கருத்துத் தெரிவித்திருந்த தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்சவின் உத்தியோகபூர்வ இல்லத்திலேனும் கறுப்பக்கொடி ஏற்றப்பட்டிருக்கவில்லை என்று பல தரப்பினரும் விமர்சித்துள்ளனர்.

இலங்கையில் நடைபெற்ற பன்னாட்டு வெசாக் கொண்டாட்டத்துக்கு இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திரமோடி வரும்போது அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கறுப்புக்கொடிப் போராட்டம் நடத்தப்படும் என்று கடந்த முதலாம் திகதி காலி முகத்திடலில் நடைபெற்ற மே தினக் கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றிய போது தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்திருந்தார்.

தற்போது அந்தப் போராட்டத்தில் இருந்து பின்வாங்கியுள்ளார். இலங்கை வந்திருந்த இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்தி மோடி பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்று நாடு திரும்பியுள்ளார். (ற-10)

# புதிய பேருந்து நிலையத்தை பாழடிக்காது பயன்படுத்துக

## வவுனியா மாவட்ட மக்கள் கோரிக்கை

வவுனியா, மே 15

பெரும் நிதிச் செலவில் வவுனியாவில் அமைக்கப்பட்ட பேருந்து நிலையம் பாழடைவதற்கு முன்னதாக மாற்று ஏற்பாடுகளை மேற்கொண்டு மக்கள் பாவனைக்கு அதைத் திறக்க வேண்டும் என்று மாவட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



"திட்டமிடலின்மை, ஒத்துழைப்பு இன்மை என்பவற்றால் 195 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட பேருந்து நிலையம் கால்நடைகளின் கூடாரமாக மாறியுள்ளது. மாவட்டத்தின் அபிவிருத்திக்கு உகந்த திட்டடமிலை மேற்கொண்டு ஆவண செய்ய முன்வர வேண்டும். மக்கள் வரிப்பணத்தில் அமைக்கப்பட்ட இந்தத் திட்டம் வீணாகாது பொருத்தமான முடிவை எடுக்க வேண்டும். பேருந்து நிலையமாகவோ அல்லாது பொருத்தமான செயற்பாட்டையோ முன்னெடுக்க வேண்டும்." என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இந்தப் புதிய பேரூந்து நிலயம் கடந்த ஜனவரி மாதம் 16 ஆம் திகதி கொழும்பு போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி செல்வாவால், மக்களின் பாவனைக்குத் திறக்கப் பட்டது.

அதன்பின்னர் இ.போ.ச மற்றும் தனியார் பேருந்து சாரதிகளிடையே முறுகல் நிலை ஏற்பட்டது. இ.போ.ச சாலை ஊழியர்கள் பழைய பேருந்து நிலையத்தில் சேவைகள் மேற்கொள்வதற்கு அனுமதிக்க வேண்டும் என்று தெரிவித்து தொடர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். வவுனியா மாவட்ட செயலகத்தில் நீண்ட பேச்சுக்கள் இடம்பெற்றன. இணைந்த நேர அட்டவணை தயாரிக்கும் வரை புதிய பேருந்து நிலையத்தில் எந்த விதமான சேவைகளும் மேற்கொள்ளப்பட மாட்டாது எனவும், அதுவரை பழைய பேருந்து நிலையத்தில் இருந்து தனியார், இ.போ.ச. பேருந்துகள் சேவைகளை மேற்கொள்ளமுடியும் என்று முடிவு செய்யப்பட்டது. ஒப்பந்தத்தில் இரு தரப்பினரும் கைச்சாத்திட்டனர். அதன் பின்னர் புதிய பேரூந்து நிலையத்தில் எந்த விதமான சேவைகளும் இடம் பெறவில்லை.

அண்மையில் கருத்துத் தெரிவித்திருந்த வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் இது தொடர்பாகச் சட்ட நடவடிக்கை எடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். எனினும் புதிய பேருந்து நிலைய விவகாரத்தில் முன்னேற்றகரமான நடவடிக்கைகள் எவையும் இதுவரை முன்னெடுக்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. (ற-21)

## திருமண வீட்டில் கைக்குண்டு வீச்சு ஒருவர் சாவு

பதுளை, மே 15

மகியங்கனை பிரதேசத்தில் திருமண வீடொன்றின் மீது மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் ஒருவர் உயிரிழந்ததார். பெண்ணொருவர் படுகாயமடைந்தார்.

இச்சம்பவம்கடந்தவியாழக்கிழமை நடந்துள்ளது..

மோட்டார் சைக்கிளில் சென்றவர்கள் கைக்குண்டுத் தாக்குதலை மேற்கொண்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவத்தில் 64வயது நிரம்பிய நபர் அவ்விடத்திலேயே உயிரிழந்தார். படுகாயமடைந்த பெண் மகியங்கனை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, பின்னர் அங்கிருந்து கண்டி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். அவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் ஒருவரை கைதுசெய்துள்ளனர்.

தனிப்பட்ட குரோதமே, இக்கைக்குண்டுத் தாக்குதலுக்கு காரணம் என்று கூறப்படுகின்றது. (ற-ய-41)

## ஆவணப்படுத்தல் கருத்தரங்கு

கிளிநொச்சி, மே 15

கிளிநொச்சி ஊடக அமையமும், லண்டன் லிட்டில் எய்ட் அமைப்பும் இணைந்து வாசிப்பு மற்றும் ஆவணப்படுத்தல் தொடர்பான கருத்தரங்கு ஒன்றை நடத்தின.

ஊடகவியலாளர்கள் மாணவர்கள் கலைஞர்களுக்கு நடத்தப்பட்ட இந்தப் பயிற்சி கருத்தரங்கில் வாசிப்பும் அதன் முக்கியத்துவம் மற்றும் நூல்களை ஆவணப்படுத்தல் போன்ற விடயங்களை லண்டனிலிருந்து வருகை தந்த நூலகவியலாளர் என் . செல்வராஜா வழங்கினார். இவர் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரைக்கும் பன்னிரண்டு நூல் தேட்டம் ஆவணப்படுத்தல் தொகுப்பை வெளியிட்டார். அதில் ஈழுத்து நூல்களில் பன்னிரண்டாயிரம் வரையில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ற)



# மக்களுக்கு உதவ சமூகமட்ட நிறுவனங்கள் முனைய வேண்டும்

## கோப்பாய்ப் பிரதேச தேசோதய உபதலைவர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், மே 15

கிராமப் புறங்களில் வறுமைக்குள் வாழும் மக்களுக்கு உதவுவதற்காக கிராமிய மட்டத்திலும் பிரதேச மட்டத்திலும் இயங்கும் சமூக மட்ட நிறுவனங்கள், பொது அமைப்புக்கள் முனைப்புடன் செயற்பட வேண்டும்.

இவ்வாறு கோப்பாய்ப் பிரதேச தேசோதய உபதலைவர் மருத்துவர் பா.சயந்தன் தெரிவித்தார்.

கைதடியில் உள்ள முதியோர்களுக்கு திசா பல்மூக்குக் கண்ணாடியக நிதி அனுசரணையுடன் 30 பயனாளிகளுக்கு இலவச மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வு கோப்பாய் பிரதேச தேசோதய சபை தலைவர் சமாதான நீதிவான் இ.மயில்வாகனம் தலைமையில் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்தாவது

இன்று கிராமிய மட்டத்தில் வாழும் ஏழைகளுக்கும் கைவிடப்பட்டவர்களுக்கும் அனாதைகளுக்கும் உதவி வழங்குவதற்கு வர்த்தகர்கள், வெளிநாட்டு அமைப்புக்கள், கைத்தொழில் அதிபர்கள் என பெரிய உதவி செய்யும் உள்ளங்கள் இங்கு உள்ளனர். ஆனால் அவர்களை இணைப்பதற்கு கிராமிய மட்டத்தில் செயற்படும் நிறுவனங்கள் செயற்பாடு போதாமையாக உள்ளது. இன்று திசா பல்மூக்குக் கண்ணாடியகம் மக்களுக்கு சேவை செய்ய முன் வந்துள்ளது.

இந்தச் செயற்பாட்டு வெற்றிக்கு பிரதேச மட்டத்தில் இயங்கும் சமூக மட்ட நிறுவனத்தின் பங்களிப்பு என்பது முக்கிய மானதாக கருதப்படுகிறது.

கிராமிய மட்டங்களில் செயற்படும் அனைத்து சமூக மட்ட நிறுவனங்களும் விழிப்படைந்து மக்களுக்குச் சேவையாற்ற முன்வரவேண்டும். என்றார். (ற-50)

# தும்புத் தொழிற்சாலையை மீளவும் இயக்கவேண்டும்

## பொதுமக்கள் கோரிக்கை

அச்சுவேலி.மே.15
வெளிமாவட்டங்களில் இருந்து கொண்டுவரப்படும் பிளாஸ்ரிக் பொருள்களின் துரித அதிகரிப்பால், பனை, தென்னை தும்புப் பொருள்களைப் போட்டி போட்டு சந்தைப்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது. பனை தென்னை தும்புப் பொருள்கள் உற்பத்தி முயற்சியை கைவிட வேண்டி ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு அச்சுவேலி தும்புப் பொருள் உற்பத்தி தொழிற்சாலையின் முகாமையாளர் கி.வரதராசா தெரிவித்தார்.

"அச்சுவேலி பனை, தென்னை வள அபிவிருத்திக்கூட்டுறவுச் சங்கத்தால் ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்பட்ட பனை, தென்னை தும்புப் பொருள்களை மூலப்பொருள்களாகக் கொண்டு பல்வேறு பொருள்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை அச்சுவேலி வடக்கு வல்லையில் 4 வருடங்களாகச் செயற்பட்டு வந்தது. தற்போது கடந்த இரண்டு வருடங்களாக இதன் செயற்பாடு நிறுத்தப்பட்டு, நிறுவனம் பூட்டப்பட்ட நிலையில் பற்றைக்காடாக் காணப்படுகின்றது." என்று பொதுமக்கள் விசனம் தெரிவித்தனர்.

"இந்தத் தொழிற்சாலையில் முப்பதுக்கு மேற்பட்ட யுவதிகள் வேலை செய்தனர். அவர்களுக்கு சேமிப்போடு கூடிய ஊதியம் வழங்கப்பட்டது. தொழிற்சாலையின் செயற்பாடுகள் ஆண்டு தோறும் விரிவு படுத்தப்பட்டது. பலருக்கு வேலை வழங்கக் கூடிய நிலையில் வளர்ந்து வந்தது. மகளிர் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் யுவதிகளுக்குத் தொழிற்பயிற்சி வழங்கி பயிற்சி பெற்ற யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் தூர நோக்குடன் உள்ளூர் மூலப்பொருள்களான பனை, தென்னை தும்புகளை பயன்படுத்தி அதனோடு இணைந்த பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டன. பயிற்சி பெற்ற யுவதிகள் குடிசைக் கைத்தொழிலில் ஈடுபடுவதற்கும் வழிப்படுத்தி வந்தது.

அச்சுவேலி தும்புத் தொழிற்சாலையில் தும்புத்தடி வகைகள் வீடு தூசு தட்டிகள், தூரிகைகள், சுவர்களுக்கு வர்ணம் பூசும் தூரிகை வகைகள், பாசி உரஞ்சி, நிலம் உரஞ்சி, மேசை துடைப்பான், கால்மிதி வகைகள், கயிறுதிரித்தல் போன்ற பல்வேறு தொழில்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதோடு நாளாந்தம் ஒவ்வொரு வகையிலும் 200க்கும் மேற்பட்ட உருப்படிகள் தயாரிக்கப்பட்டன. அவற்றுக்கு உள்ளூரில்பெரும் கிராக்கி இருந்ததோடு வெளிமாவட்டங்களுக்கும் அனுப்பபட்டன.

தற்போது பிளாஸ்ரிக் பாவனையை முற்றாக ஒழிக்க வேண்டும் என அறிவித்துள்ள நிலையில், மீண்டும் எமது உற்பத்திகளான தும்புத் தொழிற்சாலையை இயங்க வைக்க உரியவர்கள் கவனம் எடுத்துச் செயற்படவேண்டும்."என்றுமக்கள்கோரிக்கை விடுத்தனர். "பனையில் இருந்தும் தென்னையில் இருந்தும் பெறப்படும் மூலப்பொருள்களை பயன்படுத்தித் தொழிற்சாலையில் பல்வேறு பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டன. தற்பொழுது தொழிற்சாலை மூடப்பட்டுள்ளது.

வெளிமாவட்டங்களில் இருந்து எடுத்துவரப்படும் பிளாஸ்ரிக் மூலப்பொருள் உற்பத்திகளுடன் போட்டி போட்டு சந்தைப் படுத்த முடியாமையே காரணமாகும்.

தொழிற்சாலையை மூடியமையால் இலட்சக்கணக்கான ரூபா நட்டம் ஏற்பட்டதோடு பலர் வேலை வாய்ப்பை இழந்துள்ளனர் " என்று தொழிற்சாலையின் முகாமையளர் தெரிவித்தார். (ற-10- 11)

# அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தொழிற்சங்க நடவடிக்கை இடைநிறுத்தம்

கொழும்பு, மே 15
அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தால் இன்று திங்கட்கிழமை முன்னெடுக்கப்பட விருந்த தொழிற்சங்க நடவடிக்கைகள், தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன என்று சங்கத்தின் தலைவர் மருத்துவர் நலிந்த கேராத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது.
தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்கும் ஏனைய துறைகளின் தொழிற்சங்க உறுப்பினர்கள், தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவதற்குத் தயாராக உள்ளனரா என்பதை உறுதிப்படுத்துவதற்கு கால அவகாசம் கோரியுள்ளனர்.

தொழிற்சங்க நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

ஏனைய தொழிற்சங்கங்களுடன் இணைந்து முன்னெடுக்கப்பட்ட தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு, அரசுஇன்னும்முறையாகப் பதிலளிக்கவில்லை. சைட்டம் விவகாரம் தொடர்பில், அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தால் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைக்குத் தொழிற்சங்க நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கு முன்னர், அரசு பதிலளிக்க வேண்டும் என்று மக்கள் விடுதலை முன்னணியினரும் கோரியுள்ளனர் - என்றார். (ஜ-10)

# சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் 4,263 பெண் தலைமை குடும்பங்கள்

யாழ்ப்பாணம், மே 15
யாழ்ப்பாணம் சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவில் வாழும் 22 ஆயிரத்து 914 குடும்பங்களில் 4 ஆயிரத்து 263 குடும்பங்கள் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் என்று பிரதேச செயலக தகவல்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலாளர் பிரிவிகளில் அதிக வறுமையான மக்களைக் கொண்ட பிரதேச செயலாளர் பிரிவாக சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவு காணப்படுகின்றது. பெண் தலைமைத்துவமாக 4 ஆயிரத்து 263 குடும்பங்கள் வாழ்கின்றனர். போரில் கணவரை இழந்த 213 பெண்களும், போரில் கணவர் காணமல்போன நிலையில் 62 பெண்களும், கணவர் உயிரிழந்த நிலையில் 3 ஆயிரத்து 168 பெண்களும் உள்ளனர்.

கணவரால் கைவிடப்பட்ட நிலையில் 580 பேரும் , ஏனைய வகையில் பெண் தலைமைத்துவமாக 240 பேரும் உள்ளனர். இதேபோன்று சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவில் மட்டும் தனித்து வாழும் ஒரு அங்கத்தவர்கள் குடும்பமாக ஆயிரத்து 691 பேர் வாழ்கின்றனர் என்று பிரதேச செயலகத் தகவல்கள் தெரிவித்தன.

வீட்டு வசதியைப் பொறுத்தவரையில் தகுதியிருந்தும் 4 ஆயிரத்து 762 குடும்பங்கள் இன்றுவரை கொட்டகைகளிலும் , அரை வீட்டுத் திட்டத்திலும் வாழ்கின்றனர்.

3ஆயிரம்குடும்பங்களுக்கு கழிப்பறை வசதிகள் இல்ல என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-101)

பட்டதாரிகள் விவகாரம்:

# கிழக்கு மாகாணத்தில் சிறப்பு அமைச்சரவை

மட்டக்களப்பு, மே 15
கிழக்கமாகாண பட்டதாரிகளை வேலைகளுக்கு உள்ளீர்ப்பதற்கான மாகாண சிறப்பு அமைச்சரவைக் கூட்டம் நாளைமறுதினம் இடம்பெறும் என்று கிழக்கு முதலமைச்சர் தெரிவித்தார்.

"மாகாணத்தில் எங்கெங்கு, என்னென்ன பாடங்களுக்கு ஆசிரியர்கள் தேவை என்ற விவரங்களைப் பெறும் வேலைகள் அடுத்த ஓரிரு நாள்களில் ஆரம்பித்துவிடும்.

அதற்கான பணிப்புரைகள் ஏற்கெனவே உரிய அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டு விட்டன.

17ஆம் திகதி இடம்பெறுகின்ற மாகாண அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் அடுத்து வரும் ஓரிரு வாரங்களுக்குள் பட்டதாரிகளை வேலை வாய்ப்புக்குள் உள்ளீர்ப்பதற்கான விண்ணப்பங்கள் மாகாண சபையால் கோரப்படும்.

உடனடியாக ஆயிரம் பட்டதாரிகளுக்கும், பின்னர் கட்டங்கட்டமாக ஏனையோருக்கும் நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

தற்போது வேறு அரச தொழில்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் பட்டதாரிகள் தற்போது மாகாணசபையால் கோரப்படும் விண்ணப்பங்களில் இருந்து தவிர்ந்து கொள்ள வேண்டும்." என்று அவர் தெரிவித்தார். (ற-ய-46)

# மதமொன்று அழிக்கப்படுமாயின் அதற்குப் பொறுப்பு மதத் தலைவரே

## கல்முனை விகாராதிபதி தெரிவிப்பு

எருவில், மே 15
ஒரு நாட்டிலே மதமொன்று அழிக்கப்படுகின்றபோது அதற்கு முகங்கொடுக்க வேண்டிய பொறுப்பு அந்தந்த மதத் தலைவர்களிடத்தே இருக்கின்றது

இவ்வாறு கல்முனை விகாராதிபதி ரண்முத்துக்கல சங்க ரத்தின தேரர் குறிப்பிட்டிருந்தார்.

தேசிய ஒருமைப்பாட்டுக்கும், நல்லிணக்கத்துக்குமான அலுவலகத்தின் அனுசரணையுடன் கல்முனை கல்வி வலய அலுவலகத்தால் சித்திரைப் புத்தாண்டு கொண்டாட்ட நிகழ்வு கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலையில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்

அவர் தெரிவித்ததாவது
இந்த நாட்டிலே உள்ள தமிழ், சிங்கள, முஸ்லிம் சமூகமானது சந்தோசமாக வாழவேண்டும். அவர்களிடத்தில் ஒற்றுமை வெளிக்காட்டப்பட வேண்டும். நான் ஒரு பௌத்த மதத் தலைவர் என்ற வகையில் எனக்கு அடிக்கடி சேறு பூசும்செயற்பாடுகள் தொடர்ந்து வருகின்றது.

நான் ஒரு இனவாதி இல்லை. நானும் ஒரு பௌத்த மதத்தின் தலைவர் என்ற ரீதியில் எனது மதத்தைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு என்னிடம் இருக்கின்றது. அதனையே நான் செய்கின்றேன்.

பல்லின சமூகங்கள் வாழும் இந்த நாட்டிலே ஒவ்வொரு இனங்களும், மதங்களும் வேறுபாடுளை களைந்து அனைவரும் சகோதரர்கள் என்ற முறையில் ஒற்றுமையுடன் வாழவேண்டும் எதிர்கால சந்ததியினருக்கு நாங்கள் நல்ல சிந்தனைகளை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் என்றார். (ற-ய)

மரண அறிவித்தல்

திருமதி திரேசம்மா குருஸ்



சரவணை மேற்கு, வேலணையைப் பிறப்பிடமாகவும் இல.47, மத்தியுஸ் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திரேசம்மா குருஸ் 13.05.2017 சனிக்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்றவர்களான பிரகாசம் - ஆரோக்கியத்தின் அன்பு மகளும், காலஞ்சென்ற மரியான் குருசின் அன்பு மனைவியும், சாள்ஸ் (தவேந்திரா - ஜேர்மனி), ஜெராட் (சந்திரா - இத்தாலி), கலாட் (விசேந்திரா -யாழ்ப்பாணம்), கலிஸ்ரா (பரிமளா - யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயும், சுசி (ஜேர்மனி), தேவி (இத்தாலி), அனிதா (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியும், நிரோஜினி (ஜேர்மனி), நிரோஜன் (ஜேர்மனி), ஜொனிஸ்ரன், மேசிகா, ஜொனால்ரன், கிரிஸ்ரிக்கா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.05.2017) திங்கட்கிழமை பிற்பகல் 3.00மணிக்கு இல.47, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் புனித மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு தூய கொஞ் சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகன் - கலாட்
077 604 2606
மகள் - கலிஸ்ரா

இல.47, மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
(AJA/CS/ 3970)(13.17)

மரண அறிவித்தல்

கந்தையா ரதிநாயகம் (லண்டன்)



புலோலி வட கிழக்கு, சந்தா தோட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தையா ரதிநாயகம் கடந்த (12.05.2017) வெள்ளிக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா மற்றும் சிரோன்மணி தம்பதிகளின் அன்பு மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான இராசு - இரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகனும், திருமதி சுபத்திராவின் (லண்டன்) பாசமிகு கணவரும், ரஜனி, ரகு (லெபனான்), ரதீஸ்தரன் (பிரான்ஸ்), ரமேந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு சகோதரனும், காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் திருமதி கவிதா, திருமதி நந்தீஸ் (இந்தியா), திருமதி இதயா (பிரான்ஸ்) ஆகியோரின் அருமை மைத்துனரும், வினீஷ், ஹரீஷ், அனிஷ், அர்சியா, எடின், லேயா, சாரா ஆகியோரின் பாசமிகு பெரிய தந்தையும், பிரசாத், பிரதிகா, பிரதாப், பிரசாந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சந்தாதோட்டம்,
புலோலி வடகிழக்கு,
புலோலி.

தகவல்:
குடும்பத்தினர்.
(AJA/CS/3669)(1)

077 807 3570

**வீடு வாடகைக்கு**

கிளிநொச்சி நகரில் A9 பாதைக்கும் கந்தசாமி கோயிலுக்கு அண்மையில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு.

**077 633 7307**

# ஆராதனைக் குழுவினர் கதிர்காமத்துக்கு

யாழ்ப்பாணம், மே 15

நவாலி சின்னக்கதிர்காம முருகன் ஆராதனைக் குழுவினர் 60 பேர் கதிர்காமத்துக்கு நேற்றுப் பயணமாகினர்.

குழுவினர் மாத்தளை, நுவரெலியா, திருகோணமலையில் உள்ள பல ஆலயங்களுக்குச் சென்று வழிபாடு மற்றும் ஆராதனைகளை நடத்துவர். அத்துடன் அவர்கள் அன்னதானமும் வழங்குவர்.

இந்தக் குழுவுக்கு நவாலி சின்னக் கதிர்காம ஆலய முதன்மைக் குரு சிவத்திரு மா.பத்மநாதன் தலைமை தாங்குகின்றார்.

இதேவேளை எதிர்வரும் 28ஆம் திகதி நவாலி சின்னக்கதிர்காமக் குரு ச.இராசமணி 35ஆவது ஆண்டு குருவழிபாடு இடம்பெறவுள்ளது. (ற-50)

**முகாமைத்துவ வேலைவாய்ப்பு**

நீங்களும் ஓர் முகாமையாளர் ஆகலாம்.......
சாதாரணதரம் கற்ற உங்களுக்கு சாதிப்பதற்கு ஓர் சந்தர்ப்பம் இதோ! வடக்கு கிழக்கில் எமது GMI கிளைகளில் பணிபுரிய முதல் 40 பதவி வெற்றிடங்கள்

வயதெல்லை 18-30 அனுபவம் அவசியமற்றது. இலவசப் பயிற்சி, தங்குமிட வசதியுடன் கூடிய நிரந்தர தொழில்.....
பயிற்சிக் காலத்தின் போது 11500-16500/= பின் குறைந்தது 45000/= திறமையிருப்பின் எம்முடன் இணையலாம்.

**077 802 1371**

**யா/வரணி மத்திய கல்லூரி**
**பழைய மாணவர்**
**சங்க பொதுக்கூட்டம் - 2017**

இடம் : கல்லூரி பிரதான மண்டபம்.
காலம் : 27.05.2017 சனிக்கிழமை
பி.ப 2.00 மணி
விடயம் : புதிய நிர்வாகத் தெரிவு

மேற்படி கூட்டத்தில் புதிதாக இணையவுள்ள பழைய மாணவர்களும் இணைத்துக்கொள்ளப் படுவர். அனைத்துப் பழைய மாணவர் சங்க உறுப்பினர்களும் கலந்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

அதிபர்
(தலைவர்)




**8 ஆவது பிறந்தநாள் வாழ்த்து**
**15.05.2017**

ஜ
சி
ந்
த
ன்



*Wish you a Happy Birthday*

திரு.திருமதி
யோகேஸ்வரன் பகிரதி தம்பதிகளின்
தவப்புதல்வன்
செல்வன் **ஜசிந்தன்**



தனது எட்டாவது பிறந்த நாளை
இன்று (15.05.2017) திங்கட்கிழமை தனது
அப்பப்பாவின் இல்லத்தின் விமரிசையாகக்
கொண்டாடுகிறார் இவரை
மண்டலாய்ப் பிள்ளையார் துணை கொண்டு
சகல சௌபாக்கியங்களும் பெற்று
நீடுழி வாழ வாழ்த்துகின்றோம்.



வாழ்த்துவோர்:
பாட்டி, சித்தப்பாமார்,
மாமிமார், அப்பா, அம்மா,
கட்டுக்கொம்பரை,
அல்வாய் கிழக்கு, அல்வாய்
077 656 3701

(cs/3932) (13)

1985ம் ஆண்டிலிருந்து இன்று வரை....
யாழ். **கலாலயா**
பயிற்சியகம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

**மகளிருக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!**



✌ *கேக் ஐசிங்* - பட்டர், றோயல், Parchment, Frosting, Fondant, Water Whipping Cream Icing, மாச்சீனி மலர்கள் (Sugar Flowers).

✌ *உணவு தயாரித்தல்* - உணவு வகைகள், 6 வகையான Cakes, Cup Cake மற்றும் பீஸா சிற்றுண்டிகள் குளிர் பானங்கள், ஐஸ் கிறீம், புடிங், சுப் தயாரித்தல்



✌ *கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்*
40 வகையான கொண்டைகள் போடுதல், முடி அயன் செய்தல், முடி சுருட்டு தல், Hair Colouring, முடி வெட்டுதல்,



✌ FACIALS (*முக அழகுக்கலை*)
Pedicure, Manicure, Nail Art, கண் புருவம் சீராக்குதல் (Eye Brow Threading), தேவையற்ற முடிகளைஅகற்றுதல் (Waxing)



✌ BRIDAL DRESSINGS (*மணப்பெண் அலங்காரங்கள்*) இந்து, கிறிஸ்தவ இஸ்லாம் மணப்பெண் அலங்காரமும் Modern, கூர்க்காஸ், சிங்கப்பூர் குஜராத்தி, மடிசார், சிங்கள முறையிலான சேலை அணியும் முறைகளும் பயிற்றுவிக்கப்படும்.

**பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.**



✌ பிளவ்ஸ், சாறி பிளவ்ஸ், சுரிதார், தைக்கும் சான்றிதழ் அற்ற கிழமைநாள் தையல் பயிற்சிகள்.

கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம் 24-05-2017
புதன் காலை 10.00 மணி
சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 27-05-2017
சனி காலை 10.00 மணி

**மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.**

-இயக்குநர்-



**World Class UK Degree @ICBT Jaffna Campus**

Accredited by EQAA European Quality Assurance Agency

Apply now for New Intake 2017

**ICBT HND IN BUSINESS MANAGEMENT**
Finance/ Marketing/ Human Resource Management

Duration
- Full Time: 18 Months (Mon-Fri)
- Part Time: 2 Years (Sat & Sun Evening)

Part Time Entry qualifications:
GCE A/L + Work Experience

Cardiff Metropolitan University

**BSc (Hons) BUSINESS MANAGEMENT**
Offered by Cardiff Metropolitan University, UK

Duration
- 1 year

Entry Qualifications
- Higher National Diploma in Business Management or any other accepted programs.

UGC

Why Study ICBT ?
- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafeteria/Library/Computer Laboratory/ Recreation Area/Modern Lecture Halls.
- Easy Payment schemes

Week End Part Time Classes
TVEC REGISTERED

0770 746 553 | 0769 289 784

ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk

National Business Excellence
2016 | 2015 | 2014 | 2013
Gold Award Winner
Education Service Sector
www.icbt.lk





கொக்குவில் ஆடியபாதம் வீதியில் பயணித்த கார் ஒன்று வீதியோரம் தடம் புரண்டு அருகில் இருந்த 10அடி வாய்க்காலுக்குள் புரண்டு விபத்துக்குள்ளானது. சாரதி படுகாயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது. மானிப்பாய் பகுதியில் இருந்து கொக்குவில் ஆடியபாதம் வீதியில் திருநெல்வேலி நோக்கிப் பயணித்தவேளையில் காரின் சக்கரம் காற்றுப் போனதில் வீதியோரம் இருந்த வீதிப் பாதுகாப்புச் சுவரையும் உடைத்துக்கொண்டு வாய்க்காலுக்குள் பாய்ந்தது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-101)

காணாமல் ஆக்கப்பட்டவர்களை வெளிப்படுத்த வலியுறுத்தி

# 80ஆவது நாளாக நேற்று வவுனியாவில் போராட்டம்



வவுனியா, மே 15

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் பல மாவட்டங்களில் போராட்டங்கள் நடத்தப்படும் நிலையில் வவுனியாவில் நடத்தப்படும் போராட்டம் நேற்று 80 ஆவது நாளை எட்டியது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தற்காலிக தகரக் கொட்டகைக்குள் பெரும் வசதியீனங்களுக்கு மத்தியில் தமது போராட்டத்தை உறுதியுடன் முன்னெடுத்தனர். இராணுவத்திடம் கையளிக்கப்பட்ட தமது உறவினர்களை விடுவிக்க வேண்டும். அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் பயங்கரவாதச் சட்டத்தை நீக்க வேண்டும் என்ற கோரிக்கைகளை வலியுறுத்தியே அவர்கள் தொடர் போராட்டத்தை நடத்துகின்றனர். தமது கோரிக்கைகளுக்கு உரிய தீர்வு கிடைக்கும் வரை போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை என்று அவர்கள் உறுதியுடன் தெரிவித்தனர்.

போராட்டத்தில் ஈடுபடுபவர்களை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரன், வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், ஜனநாயக போராளிகள் கட்சியின் ஊடகப் பேச்சாளர் துளசி ஆகியோர் சந்தித்தனர். அவர்களுடன் கலந்துரையாடினர்.

கடத்தப்பட்டவர்கள் அரசியல் கைதிகள் மற்றும் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டவர்களின் விடுதலை மற்றும் தெளிவான வெளிப்படுதலையும் வலியுறுத்தி வடக்கு, கிழக்கில் போராட்டங்கள் நடைபெறுகின்றன. கிளிநொச்சியில் நேற்று 84ஆவது நாளாகவும், முல்லைத்தீவில் 68ஆவது நாளாகவும், யாழ்ப்பாணம் மருதங்கேணியில் 62ஆவது நாளாகவும், கிழக்கில் திருகோணமலையில் 72ஆவது நாளாகவும் நேற்றுப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. (ற-21)

## மீள்குடியமர்வு தொடர்பாக ஆய்வு

ஐந்தாண்டு மாவட்ட அபிவிருத்தி திட்டம் ஊடாக யாழ். மாவட்டத்தின் மீள்குடியமர்வு தொடர்பான இறுதிக் கட்ட ஆய்வு கடந்த இரு நாள்கள் நடைபெற்றது. நிகழ்வில் யாழ். மாவட்ட செயலர் நா.வேத நாயகன் கலந்து கொண்டார்.

யாழ் மாவட்டத்தின் 2009 இன் பின்னரான மீள்குடியமர்வு தொடர்பான மக்களின் காணிப் பிரச்சினை, வீட்டுத்திட்டம், உட்கட்டுமானம், வாழ்வாதாரம், சமூகசேவை, முள்ளந்தண்டு வடம் பாதிப்புற்றோர், மாற்று திறனாளிகள் மற்றும் 14 க்கும் மேற்பட்ட உப துறைகளில் பெறுபெற்று சட்டகம் ஊடாக ஆய்வு செய்யப்பட்டது. இதன் தொகுப்பை ஐ.நா அபிருத்தி திட்ட நிபுணத்துவ குழு ஆய்வு செய்த பின்னர் அரசிடம் சமர்ப்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-50)


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 18.04.2017 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி

### அமரர் மனோன்மணி தங்கராஜா



அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (16.05.2017) செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனிதத்தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 18.05.2017 வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறும் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

64/7, முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## நெஞ்சம் மறக்காத பதினோராம் ஆண்டு நினைவுநாள்





அன்னை மடியில்
02.01.1987

ஆண்டவன் அடியில்
15.05.2006

### செல்வி லாவண்யா மாணிக்கம்

(யசோ – உயர்தரமாணவி)



மண்ணுலகில் வெண்ணிலவாய் வந்துதித்த லாவண்யாவே !
கண்ணுக்கு குளிர்ச்சியாய் காட்சி தந்த யசோவே !
மூவருக்கும் பின்னால் வந்துதித்த, வாழத்துடித்த இளையவளே!
நற்சுகத்துடன் வாழ்ந்த நீங்கள் கண்ணெதிரே கை நழுவிப்போனதென்ன ?
கயவனவன் போட்ட ஊசி காலனாக மாறியதோ - அன்று
வண்ணை காமாட்சி அம்மனும் மூடிவிட்டாள் தன் கண்ணை
" லாவண்யம் " அன்று இருளில் மூழ்கியதே
அழகிய நின் திருமுகம் கண்டு ஆண்டுகள் பதினொன்று ஆனதே
அழியாத நினைவலைகள் எம் இதயத்தில்
காலம் மனப்புண்ணை ஆற்றும் என்பது
காலம் கடந்த பொய்யாத் தெரிகிறது
தினம் தினம் பார்த்துப்பேசி மகிழ்ந்த - நின் திருவுருவை
படமாகப் பார்க்கின்றோம், பரிதவிக்கின்றோம்.

கண்ணீர்ப்பூக்களை அர்ச்சித்து நிற்கும்........
குடும்பத்தினர்.
"லாவண்யம்" 614/3, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

## 31ஆம் நாள் வீட்டுக்கிரியை அழைப்பு

### அமரர் மணியம் செல்வராணி (பவளம்)



பிறப்பு
29.03.1955

இறப்பு
15.04.2017

கடந்த 15.04.2017 இறைபதம் அடைந்த அன்புத் தாயார் அவர்களின் 31ஆம் நாள் வீட்டு நிகழ்வு இன்று (15.05.2017) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இதில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது தாயாரின் மரணச் செய்திகேட்டு நேரிலும் துண்டுப் பிரசுரங்கள் மூலமும் எமக்கு ஆறுதல் தெரிவித்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

இல.43,
நீதிமன்றம் முன்பாக,
கிளிநொச்சி.

(kn 130)(11)

குடும்பத்தினர்.
077 947 6162

## 92 எம்.பிகளால் அரசுக்கு 3 பில்லியன் ரூபா இழப்பு

*உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல்*

கொழும்பு, மே 15
நாடாளுமன்ற உறுப்பினர்கள் பெற்றுக்கொள்ளும் தீர்வை வரியற்ற வாகன அனுமதிப் பத்திரங்கள் விற்பனை செய்யப்பட்டதால், அரசு 3 பில்லியன் ரூபாவை இழக்க நேரிட்டது என உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.
அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,
இந்த மோசடி தொடர்பில் சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மீதான மேலதிக சாட்சியங்கள் நேற்று முன்தினம் பதிவு செய்யப்பட்டன. மனுதாரரான சட்டத்தரணி நாககனந்த கொடிதுவக்கு சாட்சியங்களை முன்வைத்தார்.
தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் பட்டியல் ஒன்றையும் அவர் நீதிமன்றத்தில் சமர்ப்பித்தார். இந்தப் பட்டியலுக்கு அமைய, ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சியைச் சேர்ந்த 92 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தீர்வை வரியற்ற வாகன அனுமதிப் பத்திரங்களை மூன்றாம் தரப்புக்கு விற்பனை செய்துள்ளனர். இந்தப் பட்டியலில் தமிழ் பேசும் 23 நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்களும் உள்ளடங்குகின்றன.
சமூக நீதிக்காகக் குரல் கொடுப்பதாகத் தெரிவிக்கும் ஆளும் கட்சிகள், ஒன்றிணைந்த எதிர்க்கட்சி, தமிழ் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் முற்போக்கு கூட்டணி உள்ளிட்ட கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்களும் பட்டியலில் அடங்கியுள்ளன. - என்றுள்ளது. (ஐ-10)

# உயர் கல்வி அபிவிருத்திக்கு 100 மில்லியன் அமெ.டொலர்

## உலக வங்கியால் உதவி

கொழும்பு, மே 15
இலங்கையின் உயர் கல்வித்துறையின் அபிவிருத்திக்கு 100 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை வழங்குவதற்கு உலக வங்கியின் பணிப்பாளர் சபை அனுமதி வழங்கியது.
கல்வியின் முன்னேற்றத்துக்கு ஒத்துழைப்பதற்காக வழங்கப்படும் இந்த நிதிக்கான அனுமதி கடந்த வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டது.
உயர் கல்வித் துறையின் முன்னுரிமைக்குரிய பிரிவுகளில் அதிகமானவர்களை உள்வாங்குவதற்கும், பட்டப் படிப்புநிகழ்ச்சித்திட்டங்களின் தரத்தை முன்னேற்று வதற்கும் , ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கத்தை ஊக்குவிப்பதற்கும் இந்த நிதி பயன்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

> “இந்த நாட்டின் நிலைபேறான பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிக்கக்கூடிய அதிக திறன்களைக் கொண்ட விஞ்ஞானிகள், பொறியியலாளர்கள், மருத்துவர்கள், தொழில்முயற்சியாளர்கள், கொள்கை வகுப்பாளர்கள், கல்விமான்கள் மற்றும் ஆசிரியர்களை உயர் கல்விக் கட்டமைப்பானது உருவாக்க வேண்டும்.

2003 ஆம் ஆண்டு முதல் உயர் கல்வித்துறையில் பெறப்பட்ட அனுபவங்களில் இருந்து விருத்தி செய்யப்பட்ட AHEAD எனப்படும் புதிய உயர் கல்வி விரிவாக்கல் மற்றும் அபிவிருத்தி துரித்தப்படுத்தல் திட்டமானது , உலக வங்கியின் பெறுபேறுகளைத் தரும் கடன் கருவித் திட்ட நிதியுதவியை பயன்படுத்தும் முதலாவது திட்டமாகும். நிலைபேறான அபிவிருத்திப் பெறுபேறுகளை அடைவதற்காக நிறுவன ரீதியான திறன்களை கட்டியெழுப்புதில் இந்தத் திட்டம் கவனம் செலுத்துகின்றது.
"மேல், நடுத்தர வர்க்க நாடு என்ற நிலையை எய்துவதற்கான இலங்கையின் அபிலாஷைக்கு, நாட்டிலுள்ள மக்கள் எந்தளவுக்கு திறனுள்ளவர்களாகவும், பல்துறைசார் ஆற்றலைக்கொண்டவர்களாகவும் இருப்பதிலேயே தங்கியுள்ளது. இந்த நாட்டின் நிலைபேறான பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிக்கக் கூடிய அதிக திறன்களைக் கொண்ட விஞ்ஞானிகள், பொறியியலாளர்கள், மருத்துவர்கள், தொழில்முயற்சியாளர்கள், கொள்கை வகுப்பாளர்கள், கல்விமான்கள் மற்றும் ஆசிரியர்களை உயர் கல்விக் கட்டமைப்பானது உருவாக்க வேண்டும்.
நாட்டில் போட்டித்தன்மையை முன்னேற்றுவதும் வளர்ச்சியை ஏற்படுத்துவதும் இலங்கை அரசின் முக்கிய நோக்கமாக உள்ளது. இந்த முயற்சியில் அவர்களுக்கு ஒத்துழைப்பதில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம்" என்றுஉலகவங்கியின்இலங்கைக்கான வதிவிடப்பணிப்பாளர் ஐடா சுவராய் ரிடில்கொவ் தெரிவித்தார். (ஐ-10)

## அவசர அம்புலன்ஸ் சேவையை விரிவுபடுத்த இந்தியா 20 மில்லியன் டொலரை வழங்கும்

*பிரதி அயலுறவுத்துறை அமைச்சர் தகவல்*



கொழும்பு, மே 15
“இலங்கையின் அனைத்துப் பகுதிகளுக்கும் அவசர நோயாளர் காவுவண்டிச் சேவையை விரிவுபடுத்துவதற்கு, இந்தியா 20 மில்லின் டொலர் நிதியைக் கொடையாக வழங்கும்”
இவ்வாறு இலங்கையின் பிரதி அயலுறவுத் துறை அமைச்சர்ஹர்சடி சில்வா தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது,
“அடுத்த ஒரு வருடத்துக்குள் இந்தத் திட்டம் செயற்படுத்தப்படும். இந்தத் திட்டத் துக் காக 225 நோயாளர் காவு வண்டிகள், அவற்றை இயக்குவதற்கான ஆயிரத்து 500 பணியாளர்களுக்கான கொடுப்பனவுகள் இந்த கொடை யில் உள்ளடங்கும்.
மேல் மற்றும் தென் மாகாணங்களில் இந்திய அரசின் உதவியுடன், 89 நோயாளர் காவு வண்டிகள் 570 பணியாளர்களுடன் இயக்கப்பட்டு வருகின்றன. அதற்காக இந்தியா 7.5 மில்லியன் டொலர் நிதியை வழங்கியிருந்தது. 2016 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்தச் சேவை மூலம் 20 ஆயிரம் அவசர நோயாளர்களைக் காவும் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன" என்றார்.
"இந்தியாவின் உதவியுடன் மேல் மற்றும் தென்மாகாணங்களில் அவசர நோயாளர் காவு வண்டிச் சேவை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
இந்தத்திட்டத்தை இலங்கையின் அனைத்து மாகாணங்களுக்கும் விரிவுபடுத்துவதற்கு இந்தியா உதவும்" என்று இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்தி மோடிபன்னாட்டுவெசாக் தினத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது உறுதியளித்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-10)

## கணினிக் கட்டமைப்பில் முக்கிய ஆவணங்களை பாதுகாக்க கோரிக்கை

கொழும்பு, மே 15
இலங்கையில் கணினிக் கட்டமைப்பில் காணப்படும் முக்கிய ஆவணங்களைப் பாதுகாத்துக் கொள்ளுமாறு இலங்கை கணினி அவசர நடவடிக்கை பிரிவு கோரிக்கை விடுத்துள்ளது.
உலகம் முழுவதும் மேற்கொள்ளப்பட்டுள்ள இணையவெளித் தாக்குதலை அடுத்தே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா உள்ளிட்ட 99 இற்கும் மேற்பட்ட நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட இணையவெளித் தாக்குதல் காரணமாக அந்த நாடுகளின் கணினிக் கட்டமைப்புச் செயலிழந்துள்ளதோடு, முக்கிய தரவுகள் திருடப்பட்டன.
இலங்கையில் அதற்கான அறிகுறிகள் தென்படாத போதிலும், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கணினித் தரவுகளைப் பாதுகாத்துக்கொள்ளல் வேண்டும். பெரிய நிறுவனங்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட இந்தத் தாக்குதல் மேலும் தொடர வாய்ப்புள்ளது எனத் தெரி விக்கப்பட்டுள்ள நிலையிலேயே இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. (ஐ-10)

## இலங்கை – இந்தியா இடையே நல்லுறவு மேலும் வலுப்படும்

*முத்தையா முரளிதரன் நம்பிக்கை*



கொழும்பு, மே 15
இந்தியாவுக்கும், இலங்கைக்கும் மிகநெருங்கியநட்புறவுநிலவுகிறது. இலங்கையின் மூத்த சகோதரனாக இந்தியா உள்ளது. இலங்கைக்குப் பல்வேறு உதவிகளை இந்தியா வழங்கி வருகிறது. எதிர்காலத்தில் இரு நாடுகளுக்கும் இடையேயான நல்லுறவு மேலும் வலுப்படும். இவ்வாறு இலங்கை அணியின் முன்னாள் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் தெரிவித்தார்.
பன்னாட்டு வெசாக் தின நிகழ்வுகளுக்காக இலங்கைக்கு வந்திருந்த இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி, மலையகத்துக்குப் பயணம் செய்திருந்தார். அப்போது மக்கள் மத்தியில் உரையாற்றும் போது முத்தையா முரளிதரன், மறைந்த தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். ஆகியோர் இலங்கையில் உள்ள இந்திய வம்சாவளித் தமிழர்களால் உலகுக்கு வழங்கப்பட்ட பரிசு என்று புகழ்ந்துரைத்தார்.
இது தொடர்பாக முரளிதரன் வெளிநாட்டு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே இவ்வாறு தெரிவித்தார்.
அதில் மேலும் தெரிவித்ததாவது,
இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி, எனது பெயரைக் குறிப்பிட்டதை மிகப்பெரும் கௌரவமாகக் கருதுகிறேன். தனது உரையின்போது எனது பெயரைக் குறிப்பிட்டது எனக்கு மிகப்பெரிய ஆச்சரியத்தை அளித்துள்ளது. உலகிலேயே-மிகப் பெரும் ஜனநாயக நாடாக இந்தியா திகழ்கிறது. இந்த நிலையில், எனது சொந்த நாட்டில் எனது பெயரையும், நான் சார்ந்த சமூகத்தின் அடையாளத்தையும் அவர் குறிப்பிட்டுப் பேசியது எனக்குக் கிடைத்த மிகப் பெரிய கௌரவமாகும்.
இந்தியாவுடன் எனக்கு மிகவும் நெருங்கிய உறவு உள்ளது. நான் தென்னிந்தியாவைச் சேர்ந்த பெண்ணைத்தான் திருமணம் செய்துள்ளேன். எனது மூதாதையர்கள் இந்தியாவில் இருந்து இலங்கை வந்தவர்கள். நாங்கள் அவர்களது 4 அல்லது 5ஆவது தலைமுறையினர் ஆவோம். என்றார். (ஐ-10)

# மகிந்த அணியின் மே தினக்கூட்டத்துக்கு ரூ.18 கோடியை வழங்கினர் வணிகர்கள்

கொழும்பு, மே 15
மகிந்த அணியின்ரின் மே தினக் கூட்டத்துக்கு இலங்கையைச் சேர்ந்த வர்த்தகர்கள் சிலர் 18 கோடி ரூபா நிதியுதவியை வழங்கியுள்ளனர்.
அவர்களின் விவரங்களைப் பெறுவதற்கான நடவடிக்கைகளைப் புலனாய்வு பிரிவினர் முன்னெடுத்துள்ளனர் என்று கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.
அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, மகிந்த அணியினர் நடத்திய மேதினக் கூட்டத்துக்கு சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகள் மாத்திரமல்லாது, இலங்கையில் உள்ள சில வர்த்தகர்களும் நிதி யுதவியை வழங்கினர்.
அதற்கமைவாக நெடுஞ்சாலைகள் நிர்மாணிப்பு மற்றும் பெருநகர திட்டங்கள் உட்பட நிர்மாணிப்பு துறை வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள சில செல்வந்த வர்த்தகர் கள் தலா ஒரு மில்லியன் ரூபாவை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.
இலங்கையில் குடிதண்ணீர் போத்தல் தொழிற்துறையில் ஈடுபட்டுள்ள நிறுவனம் ஒன்று நிதியுதவிக்குப் பதிலாக ஒரு லட்சம் குடிதண் ணீர் போத்தல்களை வழங்கியுள்ளது.
புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் சில முக்கிய அமைச்சர்கள் வர்த்தகர்கள் சிலரைத் தொடர்பு கொண்டு நிதியுதவி கோரியுள்ளனர்.
"முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச எம்முடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, தனது ஆட்சிக்காலத்தில் வர்த்தக நடவடிக்கைகளுக்கு உதவியதை எண்ணிப்பார்த்து மே தினக் கூட்டத்துக்கு நிதியுதவி வழங்குமாறு கோரிக்கை விடுத் தார். அதனடிப்படையில் நாம் நிதியுதவி வழங்கினோம்" என்று வர்த்தகர்கள் ஒப்புக் கொண்டனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ-10)

Facebook : UT
Twitter : UTHA



அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் அதிகம் வாழும் சிவப்பு நாரைகளான 'கார்லர் இபிஸ்' பறவைகள் தற்போது பருவநிலை மாற்றம் காரணமாக ஏனைய நாடுகளுக்குக் கூட்டம் கூட்டமாகச் செல்கின்றன. பிரேசிலுக்கு ஏராளமான 'கார்லர் இபிஸ் பறவைகள் சென்றுள்ளன. (ம)

# மிகச் ச
# அமெ
## பரிசோதனைக்கு

பியாங்யாங், மே 15
கொரியத் தீபகற்பத்தில் போர்ப் பதற்றம் ஏற்பட்டுள்ள நிலையில், மிகச் சரியான சூழ்நிலை ஏற்பட்டால் அமெரிக்காவுடன் பேசுவதற்குத் தயார் என்று வடகொரியா நேற்று அறிவித்தது. வடகொரியா நேற்று அதிகாலை ஏவுகணைப் பரிசோதனையை நடத்தியது. இந்தப் பரிசோதனைக்குச் சில மணிநேரங்கள் முன்னதாக இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.
வடகொரியாவின் அயலுறவுத் துறை அமைச்சகத்தின் தலைமை





# ரான்சம்வேர் தாக்குதலால் 99 நாடுகளுக்குப் பாதிப்பு

உலகமெங்கும் உள்ள பல்லாயிரக் கணக்கான நிறுவனங்கள் மற்றும் அரச இணையத் தளங்கள் மீது நடத்தப்பட்ட ரான்சம்வேர் இணையத் தாக்குதலால் 99 நாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
உலகம் முழுவதும் உள்ள பல்வேறு நிறுவனங்களின் மீது இந்த இணையத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. தமது இணையத் தளங்களை வலுவாகக் கண்காணிக்கும் அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், சீனா, ஸ்பெய்ன் நாடுகளிலும் இந்தத் தாக்குதல் உணரப்பட்டுள்ளது. பிரிட்டன் உள்ளிட்ட முக்கிய நாடுகளின் சுகாதார சேவை மையங்கள், மருத்துவமனைகள் போன்றவையும் இலக்கு வைக்கப்பட்டுள்ளது. எனினும் இந்தத் தாக்குதல்களுக்குத் தற்காலிகத் தீர்வு காணப்பட்டுள்ளது.
இது ஓர் ஆயுதக் குழுவின் சதிச் செயலாக இருக்கலாம் என்று நம்பப்படுகிறது. எனினும் இது தொடர்பில் உத்தியோகபூர்வத் தகவல்கள் வெளியாகவில்லை. (ம)

# உக்ரைனில் தாக்குதல்; 4 பேர் சாவு

கீவ், மே 15
உக்ரைன் அரசுக்கு எதிரான பிரிவினை வாதிகள் நடத்திய தாக்குதலில் நான்கு பொதுமக்கள் உயிரிழந்தனர் என்று உக்ரைன் அரசு தெரிவித்தது.
2014 ஆம் ஆண்டு முதல் உக்ரைன் அரசுக்கும் பிரிவினை வாதிகளுக்கும் இடையில் ஆயுதப் போர் நடைபெற்று வருகிறது. கடந்த மூன்று வருடங்களில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர் என்று ஐக்கிய நாடுகள் சபை அண்மையில் தெரிவித்தது.
இந்த நிலையில் கிழக்கு உக்ரைனில் நேற்றுமுன்தினம் பிரிவினை வாதிகளால் நடத்தப்பட்ட தாக்குதலில் நான்கு பொதுமக்கள் உயிரிழந்தனர் என்று உக்ரைன் அரசு அறிவித்தது. (ம)

# உலகின் உயரமான கட்டடத்தின் கட்டுமானப் பணிகள் பின்னடைவு

ரியாத், மே 15
சவுதி அரேபியாவில் கட்டப்பட்டு வரும் உலகின் உயரமான கட்டடத்தை முடிக்கும் பணி தாமதமாகியுள்ளது என்று அந்த நாடு தெரிவித்தது.
உலகிலேயே உயரமான கட்டிமான ஜெட்டா டவர் சவுதி அரேபியாவில் கட்டப்பட்டு வருகிறது. ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் தொடங்கப்பட்ட இந்த கட்டடத்தின் கட்டுமானப் பணி அடுத்த வருடம் முடிவடையும் என்று திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், பொருளாதார நெருக்கடி காரணமாக 2019ஆம் ஆண்டு முடிவடையும் என்று தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பில் சவுதி இளவரசர் அல் வாலீத் பின், "கட்டடத்தை முடிக்கும் பணி பொருளாதார நெருக்கடி காரணமாகத் தள்ளிப் போடப்பட்டுள்ளது. புதிய திட்டத்தின்படி 2019 ஆம் ஆண்டுக்குள் கட்டடத்தின் கட்டுமானப் பணி முடிவடையும்" என்று எதிர்பார்க்கப்படுகிறது என்றார். (ம)



# வடகொரியாவால் மீ
# ஏவுகணைச் சோ



பியாங்யாங், மே 15
அமெரிக்காவினதும் உலக நாடுகளினதும் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் வடகொரியா நேற்று அதிகாலை (இலங்கை நேரப்படி) புதிய ஏவுகளைச் சோதனை நடத்தியது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
தலைநகர்பியாங்யாங்கில் உள்ள குசாங் பகுதியில் இருந்து இந்தச் சோதனை நடத்தப்பட்டது. கிட்டத்தட்ட 2 ஆயிரம் கிலோமீற்றர் தூரம் பயணித்து ஜப்பான் கடலில் சென்று ஏவுகணை விழுந்தது என்று மேலும் தெரிவிக்கப்படுகிறது.
வடகொரியாவின் ஆயுத மற்றும் அணுவாயுதச் சோதனைகளைக் கட்டுப்படுத்தும் விதத்தில் அந்த நாட்டின் மீது ஐக்கிய நாடுகள் சபையும், ஜப்பான், தென்கொரியா, அமெரிக்கா போன்ற நாடுகளும் பல்வேறு பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளன. எனினும் வடகொரியாவின் சோதனைகள் தொடர்ந்துகொண்டே இருந்தன. வடகொரியாவிடம் இருந்து தம்மையும் கொரியத் தீபகற்பத்துடன் தொடர்புபடும் தமது நட்பு நாடுகளைக் கா
பாற்றிக் கொள்ளவு
கொரியத் தீபகற்பத்தி
தனது போர்க் கப்ப
களை நிறுத்தியுள்ள
அமெரிக்கா. இதனா
அந்தப் பிராந்தியத்தி
போர்ப் பதற்றம் நிலை
கொண்டுள்ளது.
தென்கொரியாவின் அ
பர் தேர்தல் கடந்த செ
வாய்க்கிழமை நடைபெ
றது. மூன் ஜெ இன் வெற்
பெற்றார். அவர், வடகெ
ரியாவுடன் சமரசம் செ
யும் முயற்சிகளில் ஈடுப
டார். இதனால் கொரி
தீபகற்பத்தில் நிலவிவரு
போர்ப் பதற்றம் குறைய

# ச் சரியான நேரத்தில்
# மரிக்காவுடன் பேச்சு

## னக்கு முன்னர் வடகொரியா அறிவித்தது


பதற்
மிகச்
டால்
குத்
ற்று
ற்று
சோத
சோ
கள்
வளி

வுத்
மை



நிர்வாகி சோ சன் செய்தியாளர்களிடத்தில் சீனாவில் வைத்து வழங்கிய பிரத்தியேக செவ்வியிலேயே இந்தத் தகவலை வெளிப்படுத்தினார்.

"மிகச் சரியான சூழ்நிலை ஏற்பட்டால் அமெரிக்க அதிபர் ட்ரம்புடன் கொரியத் தீபகற்ப விவகாரத்தில் பேசுவதற்குத் தயார். தென் கொரிய அதிபர் மூன் ஜெ இன்னுடனும் சந்தப்பம் ஏற்பட்டால் பேசுவது தொடர்பில் பரிசீலிக்கப்படும்" என அவர் மேலும் தெரிவித்தார். (ம)



# எகிப்தின் மத்திய பகுதியில்
# 17 மம்மிகள் கண்டுபிடிப்பு

கெய்ரோ, மே 15

எகிப்தில் மத்திய பகுதியில் உள்ள கபால் மாவட்டத்தில் 17 மம்மிகள் ஆய்வாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டன.

எகிப்து நாட்டிலுள்ள பிரமிட்கள் பல்பல ஆச்சரியங்களையும், அதிசயங்களையும் தம்முடன் புதைத்துக் கொண்டுள்ளன. பழமையான காலங்களில் அந்த நாட்டை ஆண்ட மன்னர்கள் மறைந்தவுடன் அவர்களது உடலங்கள் பதப்படுத்தி இந்த பிரமிட்களில் வைத்துப் புதைக்கப்பட்டது.

எகிப்தின் மத்திய பகுதியில் உள்ள டவுனா காபால் மாவட்டத்தில் இருக்கும் பழமையான பிரமிட்டில் வைக்கப்பட்டிருந்த 17 மம்மிகளை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். மம்மிகளுடன் தங்கத்திலான தகடுகளையும் கண்டுபிடித்துள்ளனர்.

"கண்டுபிடிக்கப்பட்ட மம்மிகள் அரச குடும்பங்களைச் சேர்ந்தது போல் இல்லை. ஆனாலும், இது ஒரு முக்கியமான, அவசியமான கண்டுபிடிப்பு" என ஆய்வாளர்கள் தெரிவித்தனர். (ம)

# ல் மீண்டும்
# சோதனை



களைக் காப்
கொள்ளவும்
தீபகற்பத்தில்
ார்க் கப்பல்
த்தியுள்ளது
. இதனால்
ராந்தியத்தில்
ற்றம் நிலை
ளது.
யாவின் அதி
கடந்த செவ்
மை நடைபெற்
இன் வெற்றி
அவர், வடகொ
சமரசம் செய்
களில் ஈடுபட்
ால் கொரியத்
 நிலவிவரும்
றம் குறையும்

என்று எதிர்பார்க்கப்படுகையில் இந்த எண்ணங்களை தனது ஏவுகணைப் பரிசோதனையின் மூலம் தவிடுபொடியாக்கியுள்ளது வடகொரியா.

இந்தத் தாக்குதலை அடுத்து, வடகொரியா மீது கடும் பொருளாதாரத் தடைகளைக் கொண்டுவருவதற்கு உலக நாடுகளுக்கு அழைப்பு விடுத்துள்ளது அமெரிக்கா. அமெரிக்க அதிபரின் உத்தியோகபூர்வ இல்லாமான வெள்ளை மாளிகையின் செய்தித் தொடர்பாளர் சீன் ஸ்பைசர் இந்த அறிவிப்பை வெளியிட்டார். (ம)



# அதிமு கழகத்தில் பிரிவினை முற்றல்

சென்னை, மே 15

தமிழக தற்போதைய முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி, முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் இருவரும் இணைந்து செயற்படுவதென்பது சாத்தியமில்லை என்றவாறாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

சசிகலா, தினகரன் ஆகியோரைக் கட்சியில் இருந்து நீக்கி விட்டு ஆட்சியை நடத்துவது என்று முடிவெடுக்கப்பட்ட பின்னர் அ.தி.மு. கழகத்தில் இருந்து பிரிந்து சென்ற ஓ.பன்னீர்செல்வத்தையும் மற்றும் அவரது ஆதரவாளர்களையும் மீண்டும் கட்சியில் இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுத்தார் எடப்பாடி பழனிச்சாமி.

இரு தரப்பினரும் இணைப்புத் தொடர்பில் பேசுவதற்குத் தனிக் குழுக்களை அறிவித்தனர். இதனால் பேச்சு மிக விரைவில் நடக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் தற்போது இவர்கள் இருவரும் (ஓ.பி.எஸ். - இ.பி.எஸ்.) பெரும்பான்மையை நிரூபிக்கவே முனைப்புக் காட்டுகின்றனர். இணைந்து செயற்படும் திட்டங்கள் கைவிடப்பட்டுள்ளன என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

சென்னையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கல்வியமைச்சர் செங்கோட்டையன் கலந்து கொண்டார்.

அவர் உரையாற்றுகையில்:

"ஆட்சி கவிழும் என்று எதிர்பார்த்திருக்கும் ஓ.பன்னீர் செல்வத்தினதும் அவரது தரப்பினரும் கனவு நிறைவேறாது' என்று தெரிவித்தார். இவரது உரை அ.தி.மு. கழகத்தின் பிரிவினை மேலும் அதிகரித்துள்ளதைக் காட்டுகிறது என்று இந்திய ஊடகங்கள் மேலும் குறிப்பிடுகின்றன. (ம)

# துருக்கியில் பஸ் விபத்து:
# 20 பேர் பரிதாப உயிரிழப்பு

துருக்கியின் சுற்றுலாப் பிரதேசமான மார்மரியா என்ற இடத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பஸ் விபத்தில் 20 பேர் உயிரிழந்தனர். விபத்தில் படுகாயமடைந்த 15 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் சிலர் ஆபத்தான நிலையில் உள்ளதால் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்று அச்சம் வெளியிடப்பட்டது. (ம)

MedExpo
Jaffna 2017 International Healthcare and Medical exhibition
வடக்கின் மாபெரும் சுகாதாரக் கண்காட்சி
இந் நிகழ்வில் கலந்து கொண்டு அனைவரும் பயன்களை பெறலாம்
மே 19 20 21
ஆகிய திகதிகளில்
10.00 am - 6.30 pm
யாழ். வேம்படி மகளிர் கல்லூரி யாழ்ப்பாணம்
+ வைத்தியசாலைகள்
+ மருத்துவ உபகரணங்கள்
+ மருந்து வகைகள்
+ ஆயுர்வேதம் - சித்தமருத்துவம்
+ ஒப்பனையும் அழகுசாதனமும்
+ FMCG
+ உணவு மற்றும் போசாக்கு
+ ஆயுட் காப்புறுதி
+ மருத்துவக் கல்வி



வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகளின் ஏற்பாட்டில் உயிரியல் கண்காட்சி
பிரசித்தி பெற்ற இந்திய மருத்துவர்களினால் மகப்பேறு இல்லாத தம்பதியர்களுக்கு இலவச ஆலோசனைகள் வழங்கப்படுகின்றது
பதிவுகளுக்கு : 0773436927
www.evolutionecs.com
Platinum Sponsor
Official Cosmeceutical Partner
Official Healthcare Partner
Official Event Partner
arc International Fertility & Research Centre
Northern Central Hospital
Official Print Media Partner
Official Electronic Media Partner
Official Digital Media Partner
உதயன்
Event Organized by
Supported by
evolution

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# மலையகத்தாரின் வாழ்வியல் சிறக்க வழிபிறக்கட்டும்

பாரத தலைமை அமைச்சர் நரேந்திர மோடி வந்தார், பலதரப்பினரையும் சந்தித்தார், நிர்ணயிக்கப்பட்டிருந்த நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார், பல்வேறு வாக்குறுதிகளையும் வழங்கினார், திரும்பிச் சென்று விட்டார். இலங்கையில் சுமார் 25 மணித்தியாலங்களே தங்கியிருந்துள்ளபோதும் நிகழ்த்தியிருந்த உரைகளில் இந்த நாட்டுக்கும் மக்களுக்கும் மக்களின் மொழி, சமய, கலாசாரங்களுக்கும் இடையிலான உறவுகளை, அவைகளின் ஆழத்தை, பழமையை, பாரம்பரியவிழுமியங்களை மிகத்தெளிவாகவும், ஆணித்தரமாகவும் தமக்கே உரியமுறையில் ஆங்கிலத்தில் அழகாக எடுத்தியம்பத் தவறவில்லை. அது வழமையாக இந்தியாவை எதிர்த்து நிற்பவர்களையும் கூடச்சிந்திக்க வைத்திருந்தது. இந்தியாவின் இலங்கை குறித்த நோக்கம் மேன்மையானது, எந்தவகையிலும் வர்த்தக, பொருளர்தார உதவிகள் மூலம் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்வதல்லவென்பதை புரிய வைப்பதாக அவரது உரை அமைந்திருந்தது.

இந்தியாவுக்கும் இந்து, பௌத்த சமயங்களுக்குமிடையிலுள்ள தொன்மையான உறவுகளைத் தொட்டுக் காட்டிய பாரத தலைமை அமைச்சர் இப்பொழுதும் கூட பௌத்தர்கள் தங்கள் புனிதத்தலங்களை எளிதாகச் சென்று தரிசிப்பதற்கும் இந்துக்கள் பழைமையான சிவ ஆலயங்களை அதேவிதமாக காசிக்குச் சென்று தரிசித்துவரவும் ஏதுவாக வானூர்தி சேவையொன்றைக் கொழும்பிலிருந்து வாரணாசிக்கு வரும் ஓகஸ்ட் மாதம் ஆரம்பிப்பதற்கான பணிப்புரையை விடுத்திருப்பதாகவும் அறிவித்தார்.

மலையகத்தில் இந்திய உதவியில் கட்டப்பட்ட 150 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையை இலங்கை அரசதலைவர், தலைமை அமைச்சர் ஆகியவர்களுடன் சேர்ந்து திறந்து வைத்த பின் நோர்வூட் மைதானத்தில் அவர் நிகழ்த்திய சொற்பொழிவு அந்த மக்களின் மனங்களை நெகிழ வைப்பதாக அமைந்து விட்டது. "சகோதர சகோதரிகளே வணக்கம்" என்று தமிழில் ஆரம்பித்த அவர் இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலான பல்வேறு சமய மற்றும் வரலாற்றுத் தொடர்புகளைச் சுட்டிக் காட்டினார். மகாத்மா காந்தி இலங்கைக்கு வந்தபோது மலையக நகரங்களுக்கு பயணம் மேற்கொண்டிருந்ததைச் சுட்டிக்காட்டினார். கண்டியில் பிறந்தவரான அமரர் எம்.ஜி.ஆர் தமிழ்நாட்டின் முதல்வராக உயர்ந்தார் என்பதை மட்டுமல்ல கண்டியில் நாயக்க மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் அவர் தஞ்சாவூர், மதுரை நகரங்களில் இருந்த நாயக்க மன்னர்களுடன் பெண் கொடுத்தும், பெண் எடுத்தும் உறவுகளைப் பேணியிருந்தார்கள் என்றார். அந்தக் காலத்து கணியன் பூங்குன்றனாரின் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற பொன்மொழிக்கேற்ப மலையக இந்திய வம்சாவளி மக்கள் இலங்கையில் வாழ்ந்து வருகிறார்கள் என்றார். தமிழ் மொழிக்கு இலக்கணம் தோற்றுவித்த அகத்திய முனிவரை நினைவு கூர்ந்தவர் உலக மறையான திருக்குறளில் இருந்தும் மேற்கோள் காட்டினார். வறுமையிலும் வறுமை நிலையில் வாழ்கின்ற மலையக மக்களுக்கு ஏற்கனவே 4 ஆயிரம் வீட்டுத் திட்டத்தை 10 ஆயிரமாக உயர்த்துவதாக அறிவித்தார். அவர்களின் கல்வி மற்றும் பல்வேறு துறைகளிலும் இந்தியா உதவிகளை வழங்கும். உங்கள் பிரச்சினைகளில் நாங்கள் அருகிலிருந்து உதவுவோம் என்றார். இவ்வளவும் நடந்த பின்னர் பாரத தலைமை அமைச்சர் அருகில் நின்ற அரச தலைவர் சிறிசேனாவின் இடது கையையும் தலைமை அமைச்சர் விக்கிரமசிங்கவின் வலது கையையும் பற்றி உயர்த்தினார். இருநாடுகளுக்குமிடையிலுள்ள உறவினை எந்த ஒரு சக்தியாலும் அசைத்துவிட முடியாது என்பதின் அடையாளமாகவும் இது இருக்கலாம். இந்த உறவைப் பிரித்துவிட எத்தனிப்பவர்களுக்கு எச்சரிக்கையாகவும் எடுத்துக்கொள்ளலாம்.

ஆனால் இந்திய தலைமை அமைச்சர் மலையக மக்களின் நலவாழ்விற்கென அறிவித்துள்ள திட்டங்கள் முழுமையாக அவர்களைச் சென்று அடைய வேண்டும். அதற்கு முறையாக வழிமுறைகளை வகுத்துச் செயற்படுத்துவதில் இலங்கையிலுள்ள இந்திய தூதரகம் இலங்கை அரசுடன் இணைந்து நடைமுறைப்படுத்த வேண்டும். ஏற்கனவே இடைத்தரகர்கள், அரசியல்வாதிகள், கடன்வழங்கும் சில்லறை முதலாளிகள் என்று பலராலும் வஞ்சிக்கப்பட்டும் சுரண்டப்பட்டும் வருகின்ற இந்த மக்களில் பெரும்பாலானோர் கடன்காரர்களாகவும் குடி போதைக்கு ஆளானவர்களாகவும் காணப்படுகிறார்கள் என்பதைக் கருத்தில் கொள்வது அவசியம். அவைகளில் இருந்து அவர்கள் விடுபட வேண்டும்.

இலங்கையின் மீது சீனா போன்ற நாடுகள் பூகோள அரசியல் காய் நகர்த்தலின் மூலம் கால் ஊன்ற எத்தனிக்கும் நிலையில் தனது பாரம்பரிய உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்ள மலையக இந்திய வம்சாவளியினரை ஒரு அடித்தளமாக பயன்படுத்திக் கொள்ள இந்தியா விரும்புவதாக இருந்தாலும் அதன் நிமித்தம் அந்த மக்களின் வாழ்வாதாரம் வளம் பெறுவதை வரவேற்க நாம் ஏனைய சமூகங்களுடன் சரிசமானமாக இந்த நாட்டில் வழங்குவதற்கு அவர்களுக்கு வழிபிறக்க வேண்டும். அதற்கு மோடியின் மலையக வருகை வரப்பிரசாதமாக அமையுமாக.

# தமிழர்களின் பொறுமையை சோதிப்பது நாட்டுக்கு நல்லதல்ல

சேரலாதன்

பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு. அந்த எல்லை மீறப்படுமானால், அதனால் ஏற்படக்கூடிய எதிர்விளைவுகள் பாரதூரமானவையாக மாறிவிடும். எமது நாட்டில் கூட இதுதான் நடந்து கொண்டிருக்கின்றது. 30 ஆண்டுகளுக்கும் மேலாக இடம்பெற்ற ஆயுதப் போராட்டத்துக்கும் இதுதான் வழிவகுத்தது. பேரழிவுகளுக்கு வித்திட்டது.

ஆனால் மாறிமாறி ஆட்சிக்கு வருகின்ற ஆட்சியாளர்கள் இதைப் புரிந்துகொள்வதாகத் தெரியவில்லை.

2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் எவருமே எதிர்பார்க்காததொரு மாற்றம் இந்த நாட்டில் நிகழ்ந்தது. சுமார் 10 ஆண்டுகளாக இந்த நாட்டைத் தனது இரும்புப் பிடிக்குள் வைத்திருந்த மகிந்த ராஜபக்ச, அரச தலைவரைத் தேர்வுசெய்வதற்கான தேர்தலில் தோற்கடிக்கப்பட்டார். ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்து, அரசியலில் படிப்படியாக உயர்ந்து மகிந்தவின் கீழ் ஓர் அமைச்சராகப் பணியாற்றிய மைத்திரிபால சிறிசேன மகிந்தவைத் தோற்கடித்து அரச தலைவராக வருவாரென எவருமே எதிர்பார்க்கவில்லை. ஆனால் அது நடந்து முடிந்துவிட்டது. சிறுபான்மையின மக்கள்தான் அவரது வெற்றிக்குப் பெரிதும் உதவினர். அதே ஆண்டு ஓகஸ்ட் மாதம் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலும், மகிந்தவின் எதிர்பார்ப்பைப் பொய்யாக்கியது. ஆட்சியைப் பிடிப்பதற்கு அவர் வகுத்த வியூகங்கள் வீணாகின. ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக மட்டுமே அவரால் வர முடிந்தது. ஆனால் தமிழர் பக்கம் புதிய அலையொன்று வீசியது. மறைந்த தலைவர் அமிர்தலிங்கத்துக்குப் பிறகு மற்றொரு தமிழ்த் தலைவரான இரா.சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவரானார். நீண்ட போரால் பெரும் பாதிப்புக்களை எதிர்கொண்ட தமிழர்கள் தமது பிரச்சினைகள் தீர்ந்து நிம்மதியாக வாழலாமென நினைத்தனர். அதற்கு ஏற்றாற்போன்று கூட்டமைப்பின் நடவடிக்கைகளும் அமைந்திருந்தன. வழக்கமாக எதற்கெடுத்தாலும் அரசை எதிர்ப்பதே எதிர்க்கட்சியொன்றின் பணியாக இருக்கும். ஆனால் கூட்டமைப்பு இதற்கு நேர்விரோதமாக நடந்து கொண்டது.

## கூட்டமைப்பின் இணக்கமான போக்கு

அரசுடன் இணக்கமாக நடந்து கொள்வதையே அது விரும்பியது. அதன் பிரகாரம் நடந்தும் கொண்டது. வரவு செலவுத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கான வாக்கெடுப்பின்போது கூட்டமைப்பு அரசுக்குச் சார்பாக வாக்களித்தது. அரசு இவற்றையெல்லாம் கவனத்தில் கொண்டு தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுமென்பது கூட்டமைப்பின் நம்பிக்கையாகவும் இருந்தது. அரசு இதை நிச்சயமாக நிறைவேற்றியிருக்க வேண்டும். ஆனால் தமிழர்களின் பல பிரச்சினைகள் தீர்வு காணப்படாத நிலையில் நீண்டு கொண்டே செல்கின்றன. தமிழ் மக்களும் பொறுமையின் எல்லைக்கே சென்றுவிட்டனர். அதிலிருந்து கீழே இறங்கி வந்தால் நல்லது நடக்குமென எதிர்பார்க்க முடியாது.



## அரச தலைவருக்கும் நெருக்கடி

அரச தலைவர் தமிழர்களின் பிரச்சினைகள் தொடர்பாக நன்றாகவே அறிந்து வைத்துள்ளார். ஆனால் அவர் விரும்பினாலும் கூட தமிழர்களுக்கு உதவ முடியாத நிலையில் அவரது கரங்கள் கட்டிப் போடப்பட்டுள்ளன.

இனவாதிகள் நிறைந்த எதிரணித் தரப்பு அவரது ஒவ்வொரு அசைவையும் அவதானித்து அவருக்கு முட்டுக்கட்டை போட்டு வருகின்றது. வடக்கும் கிழக்கும் இணைந்த தமிழ் ஈழம் அமையப் போகின்றது, புலிகள் மீண்டும் தலைதூக்கப் போகின்றனர்; மகிந்தவுக்குப் புலிகளால் ஆபத்து; சிங்கள மக்களை இந்த அரசு புறக்கணிக்கின்றது; என்றவாறெல்லாம் தவறான வதந்திகள் சிங்கள மக்கள் மத்தியில் பரப்பப்பட்டு அவர்கள் தமிழர்களுக்கு எதிராகத் தூண்டப்படுகின்றனர். மகிந்தவின் மே தினப்பேரணியில் பெருந்திரளாகச் சிங்கள மக்கள் கலந்து கொண்டமைக்கு இதுவுமொரு பிரதான காரணமாகும்.

## நம்பிக்கை இழந்த தமிழர்கள்

ஆனால் மறுபுறத்தில், தமிழ் மக்கள் அரசின் மீது நம்பிக்கையிழந்தவர்களாகப் பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். காணாமற் போனவர்களின் உறவுகள் ஒரு புறத்தில் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். மறுபுறத்தில், இடம்பெயர்ந்து வாழுகின்ற மக்கள் தமது காணிகளை விடுவிக்குமாறு கோரிப் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர். இவ்வாறு தமிழர் பகுதிகள் போராட்டக்களமாகவே மாறியுள்ளன.

தமிழர்களின் பொறுமை மீண்டுமொரு தடவை சோதிக்கப்பட்டு வருகின்றது. கூட்டமைப்பின் தலைவர்கள் எதைச் சொல்லி மக்களை அமைதிப்படுத்துவதெனப் புரியாமல் விழிக்கின்றனர். அரசின் மீதும், கூட்டமைப்பின் மீதும் தமிழ் மக்களின் கோபம் அதிகரித்துச் செல்கின்றது. பொறுமையிழந்த தமிழர்கள் மீண்டும் ஆயுதத்தைத் தூக்க வேண்டியதொரு நிலை ஏற்பட்டால் அதை இந்த நாடு தாங்கிக் கொள்ளாது. இந்த யதார்த்தத்தை அரசும் புரிந்து கொள்ளவேண்டும்; இனவாதிகளும் புரிந்து கொள்ள வேண்டும். அனைத்து இனமக்களும் ஒற்றுமையுடன், அமைதியாகவும் வாழ்வதற்குரிய சூழ்நிலை ஏற்படுத்தப்படுவதே நாட்டின் இன்றைய பிரதான தேவையாகும். இதைவிடுத்து அரசு, மீண்டும் மீண்டும் தமிழர்களின் பொறுமையைச் சோதிப்பது நாட்டுக்குக் குந்தகமாகவே முடிந்துவிடும்.

நெடுந்தீவு
கோ.பத்மநாதன்



# வரலாறு மறக்காத குமுதினிப் படகு கொலைக் களம்

ஆழ்கடலின் ஆதிக்கத்துக்கு அடங்கிவிடாமல் கற்பார்கள் காவல் செய்ய பனையும் பூவரசும் மற்றும் விருட்சங்களும் துணையிருக்க கல்வேலி அழகை மெருகூட்ட நிம்மதித் தூக்கமிடும் சுந்தர பூமி எம் நெடுந்தீவு.

நீண்ட கடல் வெளியால் பிளவுண்டு கிடப்பினும் எம்மவரின் சிந்தனைகளும் செயல்வழ்வங்களும் ஓங்கி ஒலித்த படி என்றும் இருக்கும். சுனாமியால்கூட நெடுந்தீவைத் தொட முடியாமற் போனது. அப்படியானதொரு தேசத்தின் சொந்தங்கள் மீதே 1985ஆம் ஆண்டு மே 15ஆம் நாள் அந்த வரலாற்றுத் துயரம் சுமத்தப்பட்டது. நெடுந்தீவு மக்கள் மட்டுமன்றி உலகமே உறைந்து போன நாளாகியதுடன், விடுதலை வேட்கையை மேலும் வீறுகொள்ள வைத்த வரலாற்றுச் சம்பவமாகவும் அது அமைந்திருந்தது.

நாளாந்த கடமைகளின் பொருட்டு அன்றைய நாளும் அப்பாவித்தனமாக பயணம் ஆரம்பமானது. குழந்தைகள், தாய்மார், அரச உத்தியோகத்தர்கள், பெரியவர்கள் என அறுபதுக்கும் மேற்பட்டோர் பயணம் செய்த குமுதினிப் படகு பரந்த கடல்வெளியில் நிறுத்தப்பட்டது. பயணிகள் கரை வந்து விட்டதா? என எட்டிப் பார்த்த வேளை சிறிய படகு ஒன்றில் வந்தவர்கள் குமுதினிப் படகில் ஏறிக் கொண்டனர். சோதனையிட வேண்டும் என்று கூறி எல்லோரையும் பின்பக்கம் அறைக்கு (கொம்போட்மென்ட்) செல்லும் படியும் பணித்தனர். பின் ஒவ்வொருவராக முன் அறைக்கு (முதலாவது கொம்போட்மென்ட்) வரவழைக்கப்பட்டு கத்தி, கோடரி, கொட்டன்கள் என்பவற்றால் அடித்தும் வெட்டியும் கொத்தியும் சித்திரவதைகள் செய்து சரித்தனர்.

கடமையே கண்ணென வாழ்ந்து காட்டிய அதிபர் திருமதி புஸ்பராணி வேலுப்பிள்ளை, ஆசிரியர் க.சதாசிவம் குமுதினியின் பிரதானி தேவசகாயம்பிள்ளை இ.போ.ச. ஊழியர்களான ந.கந்தையா, ச.கோவிந்தன் மற்றும் க.கார்த்திகேசு போன்றோருடன் கர்ப்பிணிப் பெண் உட்பட ஈவிரக்கமின்றி யாவரும் குதறப்பட்டனர். குருதி வெள்ளத்தில் தத்தளித்த இவர்களில் 36 பேர் கொலைவெறிக்கு இரையாகினர். ஏனையவர்கள் உயிர்தப்பினாலும் நீண்டகால நோயாளிகளாகவே அவர்களால் வாழ முடிந்தது.

இனவாத அரசியலின் கோரமும், கோழைத்தனமும் வெளிப்படுத்தப்பட்ட இந்தச் சம்பவம் தமிழ் இன விடிய லுக்காக இளைஞர்களை வீறுகொள்ள வைத்த வரலாற்றுத் தடங்களில் முதன்மையானதெனலாம். சுமுகமான ஒரு சூழ்நிலை நிலவும் போது, குடும்ப உறவுகளோடு இணைந்திருக்க வேண்டியவர்கள் இன்று இல்லை என்பதை எண்ணிப்பார்க்கையில் இது எத்தனை கொடுமையானது என்பது புரியும்.

வெட்டுவதும் கொத்துவதும் வேரோடு சாய்ப்பதுவும் இனவாத சக்திகளுக்கு இது புதியதல்ல. குமுதினியில் மட்டுமல்ல குருநகரிலும் இதே கொடுமை நிகழ்ந்தது.

**கவிஞர் கண்ணில் குமுதினிப் படுகொலை**

சமகால கவிஞர்களால் குமுதினிப் படுகொலை கவிவரிகளில் வெளிவந்தன.

குமுதினிப் படகில் யார் வெட்டினார்கள்...
குருநகர் கடலில் ஏன் கொத்தினார்கள்...
நயினைக்கவிக்குலத்தின்
"கார்த்திகேசு என்னவானாள்..."

என்று நீளும் கவிஞர் புதுவை இரத்தினதுரையின் கவி அவலமும் புங்குடுதீவு கவிஞர் சு.வில்வரத்தி னத்தின் "காலத்துயர்" கவிதையூடாக,

"முட்களை வெட்ட ஏந்திய வாள்கள்
மலர்களை, தளிர்களை, பிஞ்சுகள்
கனிய நின்ற தோப்புக்களை
வெட்டி எறிந்த குருதிக் காட்டில்
எது பூக்கும்?

என்ற ஏக்கமும் என்றும் எம் தீவு மக்களின் நாடித்துடிப்பின் அடையாளங்களாய் நீண்டு செல்லும்

**திருப்பு முனை நோக்கி...**

செல்லரித்துப்போன தேச கட்டுமானங்களில் எம்மவரின் இழப்புக்கள் நிலையானவை. இனவாத அரசுகளை ஆட்டங்காண வைத்த வரலாற்றுப் பதிவுகளில் ஒரு முக்கிய திருப்புமுனை ஈழ விடுதலை வரலாற்றில் என்றும் ஈரம் காயாத வரிகளாய் நிலைத்து நிற்பது குமுதினிப் படுகொலை. அன்று அரச படைகளின் கோரத் தாண்டவத்தால் குதறப்பட்டோரை ஒன்றுபட்ட "இளைஞர் அணிகளும்" பொதுமக்களும் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டிருந்ததால் அநேகமானோர் காப்பாற்றப்பட்டனர் .

**நினைவு தினமும் நினைவாலயமும்**

இறந்தோரின் நினைவாக சமய வழிபாடுகளுடன் ஊர்வலங்களும் நினைவுக்கூட்டங்களும் நடத்தப்பட்டன. "இளம் பறவைகள் கலாமன்றம்" எனும் அமைப்பு நினைவாலயம் அமைப்பதற்கான முதல் முயற்சியை செய்திருந்தது. காலப்போக்கில் குடிமக்கள் குழு, பிரதேச சபை போன்றன தற்போதைய நினைவாலயம் வரையான ஆக்கபூர்வ பணிகளை மேற்கொண்டிருந்தன எனலாம்.

32 வருடங்கள் நிறைவடையும் இன்றைய நாள்வரை பேசுபொருளாகவே குமுதினி அமைந்திருக்கின்றது.

**குமுதினிப் படகின் சேவையும் தேவையும்**


குமுதினிப்படகு இற்றைக்கு சுமார் 80 வருடங்களுக்கு முன் கட்டப்பட்டது. இன்றுவரை அது சேவை செய்து வருகின்றது. இடையில் பழுதானால் பத்திரிகைகள் சோககீதம் பாடுவதைக் கேட்கலாம். அத்தனை முக்கியத்துவம் குமுதினிக்கு உண்டு.


காற்றும் மழையும் வெயிலும் கொடு
மழையும்
ஏற்று எமைச் சுமக்கும் குமுதினித்தாய்
கூற்றுவரின் கூட்டக்
கொடுங்கற்றி வாள்முனையில்
வீழ்ந்தாள் கடல் வெளியில்
உப்புதிருங்காற்றின்உதவியுடன் கரை
சேர
செத்தவராய்ப் போனோம் நாம்
அவளோ...
சாகாவரமெடுத்தாள்
மீண்டும் எமைச் சுமக்க

குமுதினியின் வயது எண்பதைத் தாண்டினாலும் இந்தத் துன்பியல் இன்றுடன் 32 ஆண்டுகளைக் கடந்து நிற்கின்றது. எமது வாழ்வின் நெருக்கீடுகளையும், தடைகளையும் உணர்ந்து கொள்ளும் ஒரு நாளாக இன்றைய நாள் அமையும்.

குமுதினிக்குள் நடந்த இந்த சோகங்களைப் போல் குமுதினியும் பல சோகங்களைச் சுமந்தும் நெடுந்தீவு மக்களை சுமந்து கரை சேர்க்கும் தாயாக பெரிய பொறுப்பைச் செய்து வருகின்றாள்.

ஈரமின்றி இறுகிப்போன மனித மனங்களுக்கு வாழ்வின் வலியையும், வழியையும், வனப்புக்களையும் சொல்லும் வளமான ஆசானாய் இன்றும் எம்முடனே வலம்வரும் குமுதினியாள் என்றும் அவளே துணை என்ற நினைப்புக்க ளுடன் எம்மவரின் கடல்வழிப்பயணம் தொடர்கின்றது.





## ஆசிரியருக்கான கடிதம்

# வாகனம் செலுத்துவதில் அவதானம் அவசியம்

வீதி விபத்தைத் தடுப்பதற்கான ஓர் உத்தியாகவே வாகனங்களில் சைகை விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. ஆயினும் அந்த வாகன விளக்கு சமிக்ஞைகளால் விபத்து ஏற்பட்டு விடுமோ என்கின்ற ஐயமும் ஏற்பட்டுள்ளது. பொதுவாக வலப் பக்கத்துக்கு திரும்ப இருப்பவர் அதற்கான வலப்பக்க சிவப்பு விளக்கை ஒளிர்ந்து அணைந்து ஒளிர விடுவர். அவ்வாறே எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனால் சிலர் சமிக்ஞை விளக்கை ஒரு திசை நோக்கி ஒளிர விட்டு, தாம் மறு திசையிலும் திரும்ப முயல்வதாலேயே விபத்துக்கள் அதிகரிக்கின்றன.

சமிக்ஞை விளக்கைப் போடாமற் போனாற் கூடப் பரவாயில்லை. ஆனால் ஒரு திசையில் திருப்பவுள்ளதாகச் சமிக்ஞை காட்டிவிட்டு, மறு திசைக்குத் தமது வாகனத்தை அவர்கள் திருப்பும்போது தொடர்ந்து பின்னால்வரும் வாகனங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளோ ஏராளம்.

உண்மையில் இவற்றைக் கண்காணிப்பதற்கு சிசிரிவி கமெராக்கள் சந்திகளில் பொருத்தப்பட்டு போதிய நேரமிருக்கின்ற வேளைகளில் அவற்றை உரிய தரப்பினர் இரண்டு மூன்று பேர் ஆராய்ந்து சம்பந்தப்பட்டவர்களை நீதிமன்றில் சிசிரிவி கமெரா ஆதாரத்துடன் முன்னிலைப்படுத்த வேண்டும். என்னென்ன இடங்களில் சிசிரிவி கமெரா பொருத்தப்பட்டுள்ளது என்கின்ற தகவல்களையும் வீதியில் காட்சிப்படுத்தலாம். குற்றவாளிகளைக் கண்டு பிடிப்பது இதன் நோக்கமல்ல. குற்றங்களைக் குறைக்க இத்தகைய செயற்பாடுகள் வகைசெய்யுமென எண்ணுகின்றேன்.

விபத்துக்கள் தவிர்க்கப்படுமானால் அதனால் ஈட்டப்படும் பலாபலன்களோ மிகப் பலவாகும்.

ப.சீவரத்தினம், கோண்டாவில்.

# அபிவிருத்தி லொத்தர் சபையின் 'ராசி அதிர்ஷ்டம்' சந்தைக்கு அறிமுகம்

## வடக்குக் கிழக்கு மக்களுக்குப் பரிசுகளை வழங்கும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது


``ராசி அதிர்ஷ்டம் உங்களை வெற்றியாளராக்கும் தனியோகம்"

அபிவிருத்தி லொத்தர் சபையின் 'ராசி அதிர்ஷ்டம்' எனும் அதிர்ஷ்ட லாபச் சீட்டு சந்தைக்கு அறிமுகம் பெற்றுள்ளதான தகவல் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி வடக்குக் கிழக்கு மக்களுக்குபரிசுகளைஅதிகம் வழங்கும் வரப்பிரசாதமாக அபிவிருத்தி லொத்தர் சபையினால் உருவாக்கப்பட்டுள்ள இந்த 'ராசி அதிர்ஷ்டம்' எனும் அதிர்ஷ்ட லாப சீட்டுக்கள் இம்மாதம் 05 ஆம் திகதி முதல் வடக்குக் கிழக்கு சந்தைகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த அறிமுக நிகழ்வில் அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவர் ரொமேஷ் ஜயவர்தன,உபதலைவர் ஆர்.ஐ.விமலசேன, பொது முகாமையாளர் சமன் ஜெயசிங்க, பிரதி பொது முகாமையாளர் அநுர ஜயரத்ன மற்றும் உதவிபொது முகாமையாளர் அசங்கா குணசிங்க ஆகியோர் கலந்து கொண்டிருந்ததாகக் கூறப்படுகின்றது. அத்துடன் அன்றைய நிகழ்வில் முதல் தொகுதிஅதிர்ஷ்டலாபச்சீட்டுக்கள் மட்டக்களப்பு விற்பனை முகவர் எஸ்.ஹரிஹரனிடம் கையளிக்கப்பட்டது.

விசேடசீட்டிழுப்புச்செயற்பாடுகள் எதிர்வரும் ஜூன் மாதம் 9ஆம் திகதி மானிப்பாய் செல்லமுத்து மைதானத்தில் இடம் பெறவுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

வழமையான சீட்டிழுப்புக்கு மேலதிகமாகஇச்சீட்டிழுப்பின் விசேடத்துவமாகமற்றுமொரு சீட்டிழுப்புக்கான சந்தர்ப்பம் இந்த அதிர்ஷ்டலாபச் சீட்டில் வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

தவிர,இந்தஅதிர்ஷ்ட லாபச் சீட்டானது வடக்குக் கிழக்கு மக்களின்நலனைக்கருதிற்கொண்டு அவர்களுக்காகவே உருவாக்கப்பட்டுள்ளது. எனவே வடக்குக் கிழக்கு மக்கள் அதிகளவான அதிர்ஷ்ட லாபச் சீட்டுக்களைக் கொள்வனவு செய்து கொண்டு அதிகரித்த நன்மைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென அபிவிருத்தி லொத்தர் சபையின் உயர் அதிகாரிகள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இந்தவிசேடசீட்டிழுப்பில்வெற்றிபெறுவோருக்கான பரிசுவழங்கலில்பின் வரும்நடைமுறைகள் பின்பற்றப்பட வுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. முதலில்தெரிவுசெய்யப்படும்40இலக்கங்கள் - ஒருதங்கநாணயம்வீதம் 40 தங்க நாணயங்கள் பரிசாக வழங்கப்படும்.
2. இரண்டாவதாக தெரிவு செய்யப்படும் 4 இலக்கங்கள் - ஒரு அப்பிள் ஐ போன் வீதம் 4 ஐ போன்கள் பரிசாக வழங்கப்படும்.
3. மூன்றாவதாகதெரிவுசெய்யப்படும்3இலக்கங்கள் - ஒருதங்கஆபரணம் வீதம் 3 தங்க ஆபரணங்கள் பரிசாக வழங்கப்படும்.
4. நான்கவதாகத் தெரிவு செய்யப்படும் 2 இலக்கங்கள் - ஒவ்வொருஸ்கூட்டர்வீதம் 2 ஸ்கூட்டர்கள் பரிசாக வழங்கப்படும்.
5. ஐந்தாவதாக தெரிவு செய்யப்படும் இலக்கம் - பெறுமதிமிக்க எக்சியா (Axia) ரகம் சார்ந்த கார் ஒன்று பரிசாக வழங்கப்படும்.

COMMERCIAL BANK

# மருத்துவ மேம்பாடுகளுக்கு கொமர்ஷல் வங்கி நிதி உதவி வழங்கியது

லேடிறிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனை மற்றும் தேசிய கண் மருத்துவமனை ஆகியவற்றின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கென கொமர்ஷல் வங்கி நிதி பங்களிப்பினை வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொமர்ஷல் வங்கியின் கூட்டாண்மை சமூகப் பொறுப்புத் திட்டம் மற்றும் விரிவான சமூக மேம்பாட்டு பல்நோக்கு திட்டம் என்பவற்றின் அடிப்படையிலே சிறுவர் மருத்துவமனையில்அண்மையில்புதிதாகநிர்மாணிக்கப்பட்ட இருதயசத்திரசிகிச்சைபிரிவுக்குத்தேவையான சுவாசக் கருவியை கொமர்ஷல் வங்கி அன்பளிப்புச் செய்துள்ளது. அதேபோன்று தேசிய கண் மருத்துவமனைக்குவருகைதருபவர்களுக்கானசிற்றுண்டிச்சாலை அமைப்பதற்கான நிதிமூலத்தையும்வங்கிவழங்கியுள்ளது. வருடாந்தம்எறத்தாழ500சிறுவர்களுக்குஇங்குமேலதிகமாக இருதய சத்திரசிகிச்சைகள் செய்யப்படவுள்ளதுடன்.

தற்போது மேற்படி வைத்தியசாலைகளில் காணப்படுகின்ற இரண்டு இருதய சத்திர சிகிச்சைக் கூடங்கள் மூலமாக உரிய நேரத்தில் சிகிச்சை பெற முடியாமல் காத்திருக்கும்சிறுவர்களுக்கானசிகிச்சைகள்மேற்கொள்ளப் படவுள்ளன.

இதுதொடர்பில் கருத்துரைத்துள்ள கொமர்ஷல் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஜெகன் துரைரட்ணம்,

"கொழும்பில் உள்ள சிறுவர் வைத்தியசாலையில் அமைந்துள்ளஇருதயசத்திரசிகிச்சைநிலையமேஇலங்கையில் அர்ப்பணிப்போடு செயற்படும் சிறுவர்களுக்கான ஒரேயொரு நிலையமாகும். நாடு முழுவதும் பிறப்பிலேயே இருதயக்கோளாறைஎதிர்நோக்கியுள்ள சிறுவர்களுக்கு இங்கு சத்திர சிகிச்சை அளிக்கப்படுகின்றது. அந்தவகையிலே சிறுவர் இருதய சத்திர சிகிச்சை நிலையத்துக்கான எமது நிதி உதவி என்பது இங்கு சத்திரசிகிச்சைகளை விரைவுபடுத்திப்பல இளம் உயிர்களைக் காப்பாற்ற பங்களிப்பினை வழங்கும் என நம்புகின்றோம்." - என்றார்

மேலும் தகவல் தொழில்நுட்பக் கல்வி, இணைய வழி ஆங்கிலக் கல்வி, ஆங்கிலக் கல்வி மேம்பாடு, பட்டதாரி மாணவர்களுக்குமடிக்கணினிமற்றும்புலமைப்பரிசில் வழங்கல், வைத்தியசாலைகளுக்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் உதவிகள் வழங்கல், வரலாற்று, கலாசார மற்றும் சமய முக்கியத்துவம் மிக்க இடங்களைப் பாதுகாத்து பராமரிக்க உதவுதல், படைவீரர்களின் புனர்வாழ்வுதிட்டங்களுக்கு உதவுதல் என வங்கியின் பணிகள் நீடித்துச் செல்கின்றது.

# கொழும்பு — விசாகபட்டினம் இடையே நேரடி விமான சேவைகள் ஆரம்பம்

கொழும்பு மற்றும் இந்தியாவின் விசாகபட்டினம் இடையேயான நேரடி விமான சேவைகளை இலங்கையின் விமான நிறுவனம் எதிர்வரும் ஜூலை மாதம் 08 ஆம் திகதி தொடக்கம் ஆரம்பிக்கவுள்ளதான தகவல் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி வாரத்திற்கு 04 நாட்கள் குறிப்பாக, வாரத்தின் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமை, புதன்கிழமை, சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் இந்த நேரடி விமான சேவையை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

SriLankan Airlines

# கொள்கை வட்டி வீதங்களில் மாற்றமில்லை

## சமனிலையை பேணுவதற்கு மத்திய வங்கி தீர்மானம்




சந்தைக்கான வட்டி வீதங்களை தீர்மானித்துக்கொள்வதில் நேரடியான தாக்கங்களை செலுத்தக்கூடிய கொள்கை வட்டி விகிதங்களை மாற்றமின்றி தொடர்ந்தும் சமனிலைத்தன்மையோடு பேணிக்கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கியின் நிதிச்சபை தீர்மானித்துள்ளதாக தெரியவருகிறது.

இதன்படி நடைமுறையிலுள்ள நிதிக் கொள்கைகளில் நீடித்த உறுதித்தன்மை காணப்படுவதான தகவல்களும் தீர்மான மாக்கப்பட்டுள்ளது. குறிப்பாக இலங்கை மத்திய வங்கியில் நிலையான வைப்புகள் மற்றும் நிலையான கடன் வசதிகளுக்கான விகிதாசாரங்கள் முறையே 7 மற்றும் 8.5 என்ற நிலைபேறான மட்டங்களில் தொடர்ந்தும் மாற்றமின்றி நடைமுறைப்படுத்தப் படும் என மத்தியவங்கி தெரிவித்துள்ளது.


அதேவேளையாப்பு ரீதியான கையிருப்புகளுக்கான விகிதாசாரம் என்பது 7.5 சதவிகிதமாகப் பேணப்படும் என மத்திய வங்கி அறிவித்துள்ளது.

# சிறந்த பொருளாதாரக் கொள்கை

## முதலீடுகளை மேற்கொள்ள துருக்கி தீர்மானம்

இலங்கையிலே தற்போது கடைப்பிடிக்கப்பட்டுவருகின்ற பொருளாதாரக்கொள்கையானது அதிகளவான துருக்கிய முதலீட்டாளர்களை கவர்ந்துள்ளதான தகவலைஇலங்கைக்கானதுருக்கியின்தூதுவர்டன்கா ஒஸுகாடர் தெரிவித்துள்ளார்.

துருக்கி-இலங்கைஇடையேயானவர்த்தகரீதியிலான கருத்துநிலைப்பகிர்வுக்கூட்டநிகழ்வுகள்அண்மையில் கொழும்பில் இடம் பெற்றது. அந்த நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துரைக்கையிலேயே மேற்கண்டவாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.



ஆசிய பிராந்திய நாடுகளிடையே இலங்கை யுத்தகாலத்தின்பின்பாகஅதிகளவானவெளிநாட்டுமுதலீடுகளின்உள்வருகையைஅனுமதிப்பதற்கானபொருளாதாரக் கொள்கைவகுப்பினைத்திட்டமிட்டுஇராஜதந்திரரீதியிலே மேற்கொண்டு வருவதுடன் அதிகளவான அபிவிருத்தி எனும் தொனிப்பாருளின் கீழான கடன் தொகைகளை சுவீகரித்துக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கலாநிதி கந்தையா சிறிகணேசன்



# பல்கலைக்கழக, ஆங்கிலமொழி கற்பதிலான 'டிப்ளோமா' மற்றும் 'பட்டய' கற்கைநெறிகளின் தேவை

இன்று ஆங்கிலம் கற்கும் மாணவர்கள் அதை விருப்பமுடன் படிக்கின்றார்களா...? என்பது கேள்விக்குறியே. பாடசாலையில் ஒரு பாடமாகக் கற்கும்போது அதன தார்ப்பரியம் ஓரளவுக்கு மாணவரகளுக்குப் புரிகின்றது. ஆனால் அதைக் கற்பதில் உள்ள சங்கடங்கள் காரணமாக அந்த மொழியில் பாண்டித்தியம் பெறுவதில் மாணவர்கள் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

வெறுமனே மனப்பாடம் பண்ணிப் பேசுவதிலும் பார்க்க உள்ளார்ந்த சூழ்நிலைகளில் அறிவு நிலைப்பட்டுப் பேசும் போதும், எழுதும்போதும் அது மனதுக்குள் நிலைத்து விடுகிறது. இன்று க.பொ.த சாதாரண தரம் மற்றும் உயர்தரம் படித்துவிட்டு ஆங்கில மொழிப் பயிற்சி இன்மை காரணமாகப் பல்வேறு தொழிற் கற்கைகளைத் தொடர முடியாதவர்கள் இருக்கின்றார்கள். உயர் கல்வி நிலையங்களில் பல்வேறு கற்கை நெறிகளை நடத்த வேண்டிய நிலையில் உயர் கல்வியியலாளர்கள் இருக்கின்றார்

## ஆங்கிலத்தை உள்வாங்கக் கூடிய சூழல்

இப்போதும் ஆங்கிலத்தை உள்வாங்கக் கூடிய சூழல் மிகவும் அருகி வருகின்றது. ஆங்கில மொழிக்கல்வி இருந்த வேளையில் ஆங்கிலம் பாவிக்கப்படும் சூழல் ஊடாக ஆங்கிலத்தைப் புரிந்து அதைப் பயன்படுத்துவதன் ஊடாக அந்த மொழியில் எழுதவும் பேசவும் அன்றைய மாணவர்களால் முடிந்தது. இன்றும் 2002இன் பிற்பாடு ஆங்கில மொழி மூலமான கல்வி வழங்கப்பட்ட வவுனியா, யாழ்ப்பாணம், மன்னார், திருகோணமலை மற்றும் மட்டக்களப்பில் மாணவர்களின் ஆங்கிலத் திறமை சற்று வளர்ச்சி கண்டிருக்கின்றது. குறிப்பாக வவுனியாவில் நடத்தப்பட்ட ஆங்கில மொழி மூலமான கல்வியில் ஆங்கில மொழியில் கூட்டங்கள், வாசிப்பு முகாம்கள், சஞ்சிகை வெளியீடுகள், மாணவர் பேச்சு அரங்குகள், நாடக மேடை ஏற்றங்கள் என மாணவர், செயற்பாடுகளுக்குள் ஆழ்த்தப்பட்டதால் இயல்பான சூழ்நிலையில் கற்பதிலும் பார்க்க ஆங்கிலத்தை உள்வாங்கும் மனோ நிலையில் மேற்குறித்த வகையில் ஆட்பட்டபோது இயல்பாகவே ஆங்கில மொழி அவர்கள் உள்ளத்துள் நுழைந்தது.

வெறுமனே மனப்பாடம் பண்ணிப் பேசுவதிலும் பார்க்க உள்ளார்ந்த சூழ்நிலைகளில் அறிவு நிலைப்பட்டுப் பேசும் போதும், எழுதும்போதும் அது மனதுக்குள் நிலைத்து விடுகிறது. இன்று க.பொ.த சாதாரண தரம் மற்றும் உயர்தரம் படித்துவிட்டு ஆங்கில மொழிப் பயிற்சி இன்மை காரணமாகப் பல்வேறு தொழிற் கற்கைகளைத் தொடர முடியாதவர்கள் இருக்கின்றார்கள். உயர் கல்வி நிலையங்களில் பல்வேறு கற்கை நெறிகளை நடத்த வேண்டிய நிலையில் உயர் கல்வியியலாளர்கள் இருக்கின்றார்கள். பல்கலைக்கழகம், கல்வியியற் கல்லூரிக்கு செல்பவர்களுக்கு அந்தந்த நிறுவனங்கள் ஆங்கில போதனையை நடத்தினாலும் அவை முழுதான பயன் தருவதில்லை என்பது கண்கூடு. அதேவேளை தனியார் நிறுவனங்கள் நடத்தும் 6மாத டிப்ளோமாப் பயிற்சி நெறிகளில் பெருமளவு ஆங்கில அறிவைப் போதிக்க முடிவதில்லை. உயர் தொழில் நுட்ப நிறுவனம் நடத்தும் டிப்ளோமா கற்கை நெறி தரமான ஒன்றாக இருந்தபோதும் அதனை இரண்டு வருடங்கள் படித்து முடிப்போர் நாட்டின் தேவைக்குக் குறைவே அவர்கள் ஆங்கில ஆசிரியர்களாக வருவதற்கான வகைப்பாடுகள் உண்டு. ஆயினும் ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்குவதற்குப் பல்கலைக்கழகங்கள் ஊடாக நடததப்படும் விரிவாக்கக் கற்கை நெறிகள் இன்று எங்கள் மத்தியில் நடத்தப்படுவதில்லை. வவுனியா வளாகத்தில் 1990கள் (1993) முதல் 2012வரையான காலப்பகுதியில் அங்கு நடாத்தப்பட்ட டிப்ளோமாக் கல்வி பயின்ற பலர் இன்று பல்கலைக்கழகத்தில் கல்வியியற் கல்லூரியில், தொழில்நுட்பக்கல்லூரியில், பாடசாலைகளில் ஆங்கில விரிவுரை யாளர்களாகவும், ஆங்கில ஆசிரியர்களாகவும் கடமை புரிகின்றார்கள்.

1990களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்ட டிப்ளோமா மற்றும் PGD டிப்ளோமா கற்கைநெறியால் பலர் விரிவுரையாளர்களாகவும், பேராசிரியர்களாகவும் உயர்ந்துள்ளார்கள்.

எனவே இன்றைய சூழலில் பல்கலைக்கழக விரிவாக்கற் கற்கை நெறியாக டிப்ளோமா கற்கை நெறியையும், உள்வாரியாக ELT டிகிரி கற்கை நெறியையும் ஆரம்பிக்க வேண்டிய தேவை உள்ளது.

ELT டிகிரி என்பது சிறப்பு டிகிரியாக வரும் போதுதான் பல மாணவர்கள் அதை நோக்கி ஈர்க்கப்படுவார்கள்.

## ஆங்கில இலக்கியங்கள்

ஆங்கில இலக்கியத்தைப் படித்து கா.பொ.த உயர்தரம் ஊடாகப் பல்கலைக்கழகம் நுழையும் மாணவர் வீதம் 0.1 வீதத்திலும் குறைவு. ஒருசில மாணவர்களும் ஒருசில ஆங்கிலம் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களும் மாத்திரமே பயிலும் ஆங்கில டிகிரிக் கற்கை நெறியால் எமது நாட்டுக்கு வேண்டிய ஆங்கிலப் புலமையாளர்களின் தேவையை நிறைவேற்ற முடியாது. இதனால் ஆங்கிலத்தில் சாதாரண அறிவைக் கொண்டிருந்தாலும் விருப்பமுள்ள ஆர்வமுள்ள மாணவர்களை உள்வாங்கி அவர்களுக்கு மொழித்திறன், மொழி அறிவு, மற்றும் ஆங்கில மொழியியல் கற்கைகளைக் கற்பித்து பயிற்சி வழங்கும்போது அவர்கள் ஆங்கிலத்தில் சிறப்பான தேர்ச்சியை அடைவர். பின்னர் B.A டிகிரி முடித்து PGD TESL or M.A TESL செய்வதன் ஊடாக மேலும் பலப்படுவர். எமது ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறையும் நீங்கும். வருடத்தில் குறைந்தது 20அல்லது35 பிள்ளைகளை ELT மற்றும் டிப்ளோமா ஊடாக உருவாக்குவதன் மூலம் எமது இலக்கை அடையலாம். இல்லாவிடில் ஆங்கில ஆசிரியர்களைத் தெற்கிலிருந்தோ அல்லது அயல்நாடான இந்தியாவிலிருந்தோ இறக்குமதி செய்யவேண்டிய அபாயம் எமக்கு ஏற்படும்.



# 2017 வைகாசி மாத பலன்



## சிம்மம்

மனித நேயம் மிக்க நீங்கள் தன்னை நம்பி வந்தவர்களைக் கைவிடமாட்டீர்கள். குருபகவான் 2ஆம் இடத்தில் வலுவாக அமர்ந்திருப்பதால் எதிர்பார்த்த காரியங்கள் நல்ல விதத்தில் முடியும். குழப்பங்கள் நீங்கும். எதிர்ப்புக்கள் குறையும். திடீர் பணவரவு உண்டு. பங்குகள் மூலமாகவும் பணம் வரும்.

வாகனப் பழுது நீங்கும். வீடு கட்டுவதற்கான அனுமதி கிடைக்கும். வங்கிக் கடன் உதவியும் கிட்டும். பிள்ளைகளின் உயர்கல்வி, உத்தியோகம், திருமணம் சம்பந்தப்பட்ட முயற்சிகள் நல்ல விதத்தில் முடிவடையும். உங்களின் பிரபல யோகாதிபதி செவ்வாய் இந்த மாதம் முழுவதும் சாதகமாக இருப்பதால் செல்வாக்குக் கூடும். எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். வீடு, மனை வாங்குவதும், விற்பதும் சாதகமாக முடிவடையும். பாதிப்பணம் கொடுத்து முடிக்கப்படாமல் இருந்த சொத்தை மீதிப் பணம் தந்து பத்திரப்பதிவு செய்வீர்கள்.

சகோதரியின் திருமணத்தை முன்னின்று நடத்துவீர்கள். 14ஆம் திகதி வரை உங்கள் ராசிநாதன் சூரியன் உச்சம் பெற்றுக் காணப்படுவதால் மறைந்துக் கிடந்த திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புக் கிடைக்கும். வீரியத்தை விட காரியம் தான் முக்கியம் என்பதை உணருவீர்கள். பூர்வீக சொத்துப் பிரச்சினையைச் சமுகமாக முடிப்பீர்கள். உங்களுடைய ஆளுமைத் திறன் அதிகரிக்கும். பிரபலங்கள் அறிமுகமாவார்கள். அரசு காரியங்கள் சுலபமாக முடிவடையும். புதன் சாதகமான வீடுகளில் செல்வதால் தன்னம்பிக்கை அதிகரிக்கும். அறிவுப் பூர்வமாகவும், அனுபவப் பூர்வமாகவும் பேசி எல்லோரையும் கவருவீர்கள். ராகுவும், கேதுவும் சரியில்லாததால் வீண் செலவுகளும், அலைச்சலும், தவிர்க்க முடியாத பயணங்களும் இருந்துக் கொண்டேயிருக்கும்.

திடீர்ச் செலவுகளால் ஏற்படும் பணப்பற்றாக்குறையை நினைத்து மனதில் பயம் இருக்கும். கணவன்மனைவிக்குள் விவாதங்களும் வந்து போகும். அர்த்தாஷ்டமச் சனி தொடர்வதால் வீடு, வாகனப் பராமரிப்புச் செலவுகளும் அதிகரிக்கும். கன்னிப் பெண்களே! அழகு கூடும். நினைத்தவாறு திருமணம் முடியும். வியாபாரத்தில் சந்தை நிலவரத்தை அறிந்து கொண்டு அதற்கேற்ப சில மாற்றங்களைச் செய்வீர்கள். உத்தியோகத்தில் புதுச் சலுகைகள் கிடைக்கும். அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். சக ஊழியர்கள் மத்தியில் செல்வாக்கு உயரும்.

# வரலாற்றில் இன்றைய தினம்

1536 -பிரிட்டன் அரசி ஆன்பொசின் லண்டனில் தேசத்துரோகம் முறையற்ற பாலியல் தொடர்பு போன்றவற்றுக்காக சிறப்பு அறம் கூறும் சபையில் விசாரணைக்குட்படுத்தப்பட்டுதூக்குத்தண்டனைவிதிக்கப்பட்டார்.

1718 -உலகின் முதலாவது இயந்திரத் துப்பாக்கிக்கான காப்புரிமத்தை லண்டன் சட்டவியலாளர் ஜேம்ஸ் பக்கிள் பெற்றுக் கொண்டார்.

1730 -பிரிட்டனின் முதலாவது தலைமை அமைச்சரானார் றொபேட் வல்பொல.

1792 -சர்டினியா இராச்சியத்தின் மீது பிரான்ஸ் போர்ப் பிரகடனம் செய்தது.

1793 -மனிதனின் முதல் பறப்பு முயற்சியாக 5தொடக்கம் 6மீற்றர் உயரத்தில் 360 மீற்றர் தூரத்துக்கு இடையே டியாகோ மரின் அகுப்லெற பறப்பில் ஈடுபட்டார்.

1811 -ஸ்பெயினிடமிருந்து பராகுவே சுதந்திரப் பிரகடனம் செய்தது.

1817 -அமெரிக்காவில் முதலாவது உளநல மருத்துவமனை தொடங்கப்பட்டது.

1925 -அல் இன்சுனியா எனும் முதலாவது அராபிய கம்யூனிஸ்ட் புதினப் பத்திரிகை வெளிவந்தது.

1932 -ஜப்பானிய தலைமை அமைச்சர் இனுகை சுயோசி சதி முயற்சியொன்றில் படுகொலை செய்யப்பட்டார்.

1940 -மக்டொனால்ட் தனது முதலாவது உணவகத்தை கலிபோர்னியா சான் பேர்னாடினோவில் திறந்து வைத்தார்.

1943 -பன்னாட்டுகம்யூனிஸ்ட் நிறுவனமான கொமின்ரேன் யோசப் ஸ்டாலினால் கலைக்கப்பட்டது.

1958 -சோவியத் யூனியனால் ஸ்புட்னிக் 3 விண்கலம்ஏவப்பட்டது. இதுபூகோளவியல் ஆராய்ச்சிக்கான பல உபகரணங்களைக் கொண்டது ஆகும்.

1960 -சோவியத் யூனியனால் ஸ்புட்னிக் 4 விண்கலம் விண்ணில் ஏவப்பட்டது.

1970 -அமெரிக்காவின் முதலாவது பெண் இராணுஜெனரல்களாக ஆன்மா ஹோய்ஸ் மற்றும் எலிசபத் பி ஹெய் சிங்ரன் ஆகியோர் அதிபர் றிச்சாட் நிக்ஸனால் நியமிக்கப்பட்டனர்.

1972 -1945 ஆம் ஆண்டு வெற்றி கொள்ளப்பட்டு அமெரிக்க இராணுவத்தால் ஆளப்பட்ட ருக்யு தீவு ஜப்பானிய ஆட்சியாளரிடம் கையளிக்கப்பட்டது.

1985 -நெடுந்தீவுக் கடலில் பயணித்த குமுதினிப் படகில் வைத்து 36 அப்பாவித் தமிழர்கள் கடற்படையினரால் படுகொலை செய்யப்பட்டனர்.

1988 -எட்டு ஆண்டுகள் போரின் பின்னர் ஆப்கானிஸ்தானிலிருந்து தனது ஒரு லட்சத்து 15000 படையினரை சோவியத் யூனியன் மீளப்பெறத் தொடங்கியது.

## நாளை

**வைகாசி-02**

செவ்வாய்க்கிழமை -16.05.2017

திதி: பஞ்சமி பி.ப.12.16

நட்சத்திரம்: உத்தராடம் பி.இ.04.37

சுபநேரம்:10.23-11.53 வரை

ராகுகாலம்:02.53-04.23 வரை

# செவிடன் காதில் ஊதிய சங்கின் நிலையில் யாழ்ப்பாண மாநகர சபை

யாழ்ப்பாண மாநகர சபையினருடைய செயற்பாடுகள் நீண்டகாலமாக செவிடன் காதிலே ஊதிய சங்கைப்போன்று உள்ளன. யாழ்ப்பாண மாநகர சபையின் கழிவகற்றல் முகாமைத்துவம் இதுவரை சீரான முறையில் ஒழுங்குபடுத்தப்படவில்லை. யாழ்ப்பாண நகரப்பகுதியில் கழிவகற்றல் தொடர்பாக யாழ். நகரப்பகுதியில் உள்ள வர்த்தகர்கள் முதற்கொண்டு நகருக்கு வந்து செல்லும் பொது மக்கள் வரை குறை கூறுகின்றனர். இது ஒருபுறம் இருக்க நாவாந்துறைப் பகுதிக்குச் சென்று பார்த்தால் மாநகர சபையினுடைய முகத்திரை கிழிந்து விடும். அது ஒரு காட்சித்தீவாக வடிவமைக்கப்பட்டுள்ளது. காக்கை தீவுப் பகுதியில் ஓட்டுமடம் சந்தியில் இருந்து காரைநகர் செல்லும் (பாதை இல. 785) வீதியின் இரு மருங்கிலும் பரவலாகக் குப்பைகள் கொட்டப்படுகின்றன. படி ரக வாகனங்கள் மூலம் குறித்த பகுதிகளில் குப்பைகள் கொட்டப்படுகின்றன. காக்கைதீவில் உள்ள குப்பை மேட்டைப் போல பல குப்பை மேடுகள் வீதியின் இரு புறங்களிலும் காணப்படுகின்றன. இவ்வாறு காணப்படும் குப்பைகளை அங்குள்ள நாய்கள் முதல் பறவைகள் வரை வீதிக்கு நடுவே இழுத்துச் சென்று போட்டுவிடுகின்றன. இவை அந்த வீதியால் பயணிக்கும் மக்களை பெரும் அசௌகரிங்களுக்குத் தள்ளிவிடுகின்றன.

இதைவிட மற்றொரு பிரச்சினை அந்தப் பகுதியில் தற்போது ஏற்பட்டுள்ளது. கல்லுண்டாய் வீதியால் பயணிக்கும் மக்களுக்கு அருவருப்பான வகையில் அமைந்துள்ளது. அங்கு தொடர்ச்சியாக மாட்டெலும்புகள் கொட்டப்படுகின்றன. அந்த எலும்புகள் பறவைகள் மற்றும் விலங்குகளால் பல பகுதிகளுக்கும் இழுத்துச் செல்லப்பட்டு துர்நாற்றம் வீசுகின்றது. கண்காணிப்புக் கமராக்களைப் பொருத்தி, அல்லது சிறப்பு காவலாளிகளை நியமித்து அவ்வாறு மாட்டெலும்புகள் மற்றும் குப்பைகளை கொட்டுவோரை கையும் மெய்யுமாகப் பிடித்துத் தண்டனை பெற்றுக் கொடுப்பதாக யாழ்ப்பாண மாநக சபையினர் தெரிவித்திருந்தனர். மாடு வெட்டுவதற்கு அனுமதி வழங்குவது யாழ்ப்பாண மாநகர சபையே. அவ்வாறாயின் அந்த எலும்புகள் கொட்டப்படு வதற்கான முழுப் பொறுப்பும் மாநகர சபையையே சாரும். இந்த விடயங்கள் அண்மையில் பத்திரிகையில் வெளிவந்தன. செய்தி வெளியாகி ஒரு சில நாள்களில் அந்த எலும்புகள் அங்கிருந்து அகற்றப்பட்டன. சுமார் ஒருவார காலம் அங்கு எலும்புகள் கொட்டப்படவில்லை. ஆனால் மீண்டும் அந்த வீதி எலும்புகளாலும், குப்பைகளாலும் அழகுபடுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக யாழ்ப்பாண மாநகர சபைக்கு தெரியாது என்று கூற முடியாது. காரணம் மாநகர சபை வாகனங்கள் தொடர்ச்சியாக அந்த வீதியால் குப்பைகளை ஏற்றிச் செல்கின்றன. அதிகாரிகள் அங்கு சென்றிருக்கின்றனர். இருந்தும் அந்த வீதி அசிங்கப்படுகின்றது என்றால் அது மாநகர சபையினுடைய அசண்டையீனம் என்றுதான் கூறவேண்டும். மாநகர சபையினர் எந்த வித மான காரணங்களையும் கூறித் தமது தவறுகளை மூடி மறைக்க முடியாது. அவ்வாறு மறைப்பதற்கு முயற்சித்தால் அவர்கள் குற்றவாளிகளாகவே கருதப்படுவர். யாழ்ப்பாணத்தில் நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகளைக் கொண்ட பகுதிகள் தமது பிரதேசங்களை அழகுபடுத்தி, கழிவகற்றல் முகாமைத்துவத்தை ஒழுங்கு முறையில் மேற்கொள்ளும் போது, நாள் ஒன்றுக்கு பல இலட்சம் ரூபாவை வரியாக அறவிடும் மாநகர சபை இவ்வாறு அசண்டையீனமாக இருப்பது, அதனுடைய அதிகாரிகளுடைய பொறுப்பற்ற தனமேயாகும். இந்த விடயத்தில் இனி அவர்கள் திருந்துவதற்கான கால அவகாசங்கள் இல்லை. காரணம், வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சு தன்னுடைய பணியை சரிவர ஆற்றவில்லை என்றே கூறலாம்.



# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 5 | | | 9 | | | | |
| 4 | | | 7 | | | 3 | | |
| 3 | | | | | 1 | | | |
| | | 3 | | | 6 | 5 | 4 | |
| | 4 | | | 5 | | | 3 | |
| | 9 | 7 | | | | 6 | | |
| | | | 4 | | | | | 2 |
| | | 2 | | | 7 | | | 3 |
| | | | | 1 | | | 7 | 5 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 1 | 4 | 5 | 7 | 8 | 2 | 9 | 3 |
| 5 | 2 | 9 | 4 | 3 | 6 | 7 | 1 | 8 |
| 7 | 3 | 8 | 9 | 1 | 2 | 6 | 4 | 5 |
| 1 | 4 | 6 | 3 | 2 | 5 | 9 | 8 | 7 |
| 2 | 9 | 5 | 8 | 6 | 7 | 1 | 3 | 4 |
| 3 | 8 | 7 | 1 | 9 | 4 | 5 | 6 | 2 |
| 4 | 6 | 3 | 7 | 5 | 1 | 8 | 2 | 9 |
| 9 | 5 | 1 | 2 | 8 | 3 | 4 | 7 | 6 |
| 8 | 7 | 2 | 6 | 4 | 9 | 3 | 5 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண் கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங் கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக் கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.




சிறுத்தை சிவா 'தல' அஜித் கூட்டணி இணையும் மூன்றாவது திரைப்ப டமான விவேகம் படத்தின் முன்னோட்டம், பல்வேறு எதிர் பார்ப்புகளுக்கிடையே கடந்த வாரம் வெளியிடப்பட்டது. ரசி கர்களின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்யும் வகையில் விவேகம் முன்னோட்டம் அமைந்திருந்ததால், அஜித் ரசிகர்கள் பெரும் உற்சாக மடைந்துள்ளனர். வெளியிடப்பட்ட சில மணி நேரங்களிலே பல லட்சம் பேர் விவேகம் முன்னோட்டத்தை யு டியூப் வலைத்தளத்தில் பார்வையிட்டனர். மேலும் பலர் தங்களுடைய முகப்புத்தகத்திலும் , வாட்ஸ் அப் மூலமும் விவேகம் முன்னோட்டத்தைப் பகிர்ந்து கொண்டனர். தற்போதைய நிலவரப்படி, வெளியி டப்பட்ட 9 மணி நேரத்தில் விவேகம் முன்னோட்டத்தை சுமார் 18 லட்சம் பேர் பார்வையிட்டுள்ளனர். இது தமிழ் சினிமா வரலாற்றில் புதிய சாதனையாகப் பார்க்கப்படுகிறது. 'விவேகம்' முன்னோட்டம் 57 செக்கனில் ஓடும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதற்கு என்ன காரணம் என்பதை விவேகம் படத் தின் எடிட்டரான லிவிங்ஸ்டன் அந்தோணி ரூபன் தெரிவித்துள்ளார். "விவே கம்" திரைப்படம் அஜித்தின் 57 ஆவது திரைப்படம். எனவே அதனை முன்னிட்டு விவேகம் முன்னோட்டத்தை 57 நொடிகளுக்கு ஓடும் வகையில் அமைக்குமாறு, கீச்சகம் வாயிலாக ரசிகர் ஒருவர் தெரிவித்திருந்தார். இந்த வேண்டுகோள் எனக்கும்,சிவா வுக்கும் பிடித்திருந்தது. எனவே முன்னோட்டத்தை 57 நொடிகள் மட்டும் ஓடுமாறு தயார் செய்தோம் என்றார்.



kawsika @Bubbly_Girl__

ஒரு பெண்ணின்
அமைதிக்குப் பின்னால்
அழிக்க முடியாத காயங்கள்
உணர முடியாத வலிகள் இருக்கும்

ஏனக்கா உன் புள்ள ராப்பகலா கண் முழுச்சிப் புக் படிச்சான் என்றியே இருந்துமா பெயில் ஆயிட்டான்






அந்தக் கொடுமய ஏன்டி கேக்கிறா பய புள்ள இவ்ளோ நாளா படிச்சிட்டு இருந்தது பேஸ்புக் ஆ மடி

அக்கினி நட்சத்திரம் எமக்குச் சொல்லும் பஞ்ச் டயலொக்



"மரம் செய்ய விரும்பு"

ஒவ்வொரு குடும்பத்திலும்



முதல் பையன் இப்படியும்



கடைசி பையன் இப்படியும் இருப்பான்

மஞ்சள் கலர் துணிப் பையைக் கேவலமாக நினைக்கும் வரை



பிளாஸ்ரிக் பையை ஒழிக்க முடியாது..!



**மேடம்:** சாதனை நிகழ்த்தும் வாய்ப்புத் தேடி வரும். பணிகளைத் திறம்பட நிறைவேற்று வீர்கள். தொழில், வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். நிலுவைப்பணம் வசூலாகும். நண்பருக்குத் தேவையான உதவி புரிவீர்கள்.

**இடபம்:** நற்செயல்களில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். தொழிலில் எதிர்பார்த்த ஆதா யம் கிடைக்கும். பணியாளர்கள் சலுகை பெற்று மகிழ்வர். பெண்கள் ஆடை, ஆபர ணம் வாங்குவர்.

**மிதுனம்:** அடுத்தவர் விடயத்தில் தலையிட வேண்டாம். தொழில், வியாபாரத்தில் உருவாகும் குளறுபடியைத் தாமதமின்றிச் சரி செய்வது நல்லது. பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர்.

**கடகம்:** நல்லவர்களின் ஆலோசனை வளர்ச்சிக்கு வழி வகுக்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் உயரும். பணி யாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும்.

**சிங்கம்:** குழப்பத்துக்கு ஆளாகலாம். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற கூடு தல் உழைப்பு அவசியம். லாபம் சுமார். பணி யாளர்கள் பணிச்சுமையைச் சந்திப்பர். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர்.

**கன்னி:** எதிர்பார்ப்பு இனிதே நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். உபரி வருமானம் கிடைக்கும். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கிக் கொடுப்பீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலைத்திருக்கும்.

**துலாம்:** வாக்குறுதியை நிறைவேற்றுவதில் தாமதம் ஏற்படலாம். தொழில், வியா பாரத்தில் சுமாரான லாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர். ஆடம்பரச் செலவைக் குறைப்பது நல்லது.

**விருச்சிகம்:** மனதில் மகிழ்ச்சி நிறைந்தி ருக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் உயரும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். பெண்களுக்கு நீண்ட நாள் எதிர்பார்ப்பு நிறைவேறும்.

**தனுசு:** வாழ்வில் இனிய அனுபவம் உண்டா கும். தொழில், வியாபாரத்தில் மறைமுகப் போட்டி மறையும். லாபம் படிப்படியாக உயரும். பெண்கள், குடும்பத்துடன் விருந்து, விழாவில் பங்கேற்பர். சிரமப்படலாம்.

**மகரம்:** சொந்தப் பணிகளில் மட்டும் கவனம் செலுத்துவது நல்லது. தொழில், வியா பாரத்தில் சுமாரான ஆதாயம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமையால் சிரமப்பட நேரிடலாம்.

**கும்பம்:** அவசரப்பணியால் நெருக்கடிக்கு ஆளாகலாம். தொழில், வியாபாரத்தில் மந்தநிலை ஏற்படும். லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தின் அடக்குமுறையைச் சந்திப்பர்.

**மீனம்:** தாமதமான செயல் தற்போது நிறைவேறும். சமூகத்தில் செல்வாக்குடன் திகழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரி மிதமான வளர்ச்சி உண்டாகும். லாபம் பன்மடங்கு உயரும்.

# சுதந்திரச் சிலை



உலகிலுள்ள சிலைகளில் மிகப் பெரியது சுதந்திரச் சிலை. இது பெண் வடிவமாக உள்ளது. இந்தச் சிலையின் ஆள் காட்டி விரல் மட்டும் 2½ மீற்றர் (8அடி) நீளம் உள்ளது. இந்தச் சிலை அமெரிக்காவில் நியூயோர்க் துறைமுகத்தின் முன் ஒரு சிறு தீவில் உள்ளது. சிலையின் வலக் கையில் தீப் பந்தத்தையும், இடக்கையில் சுதந்திரப் பிரகடன நாளைக் குறிக்கும் பலகையையும் காணலாம். சிலையின் காலடியில் அறுந்த சங்கலி ஒன்றும் உள்ளது.

சுதந்திரச் சிலையுள்ள பீடத்தின் உயரம் 45மீற்றர். பீடத்தின் உச்சி வரை 'உயர்த்தி'யில் (மின்சாரத்தில் இயங்கும் லிப்டில்) செல்லலாம். இதற்கு மேலுள்ள சிலையின் உயரம் 45 மீற்றர். இது கூடு போன்ற அமைப்புடையது. சிலையின் உச்சி வரை செல்ல சுழல் படிக்கட்டுகள் இரண்டு உள்ளன. சிலையின் தலையில் உள்ள கிரீடத்தைச் சுற்றி 25 ஜன்னல்கள் உள்ளன. ஒரே சமயத்தில் 50 பேர் நிற்கப் போதுமான இடம் தலைப்பகுதியில் உண்டு. ஜன்னல்கள் வழியே கீழேயுள்ள துறைமுகம் நியூயோர்க், நியு ஜெர்சி ஆகிய பகுதிகளைக் காணலாம். சிலையின் வலது கைக்குள் மற்றொரு படிக்கட்டு தீப்பந்த விளக்குக்குச் செல்கிறது. தீப்பந்தம் தரையில் இருந்து 93 மீற்றர் உயரத்தில் இருக்கிறது. இரவில் இது வீசும் ஒளி கப்பல்களுக்கு கலங்கரை விளக்காகவும் விமானங்களுக்கு எச்சரிக்கை விளக்காகவும் பயன்படுகிறது.

இந்த சுதந்திரச் சிலையை பிரெஞ்சு மக்கள் தங்கள் நட்பின் காரணமாக அமெரிக்க ஐக்கிய நாட்டு மக்களுக்கு 1884இல் அளித்தனர். எஃகுச் சட்டங்களின் மீது செப்புத் தகடுகளை வைத்து அடித்துச் செய்யப்பட்ட இந்தச் சிலை இரண்டு லட்சம் கிலோகிராம் எடையுடையது.



## வெண்ணிலவே... வெண்ணிலவே

1. சந்திரன் இரவில் வான வீதியில் பவனி வரும்.
2. அது நட்சத்திரக் கூட்டங்கள் நடுவில் ஒளி வீசும்.
3. இதற்கு சுயமாக ஒளியில்லை.
4. சூரியனின் ஒளி இதனில் படவே அது ஒளி வீசுகிறது.
5. சந்திரன் பூமியின் உப கோளாகும்.
6. சந்திரன் தன்னைத் தானே சுற்றிக்கொண்டு பூமியையும் சுற்றி வருகிறது.
7. இது பூமியைச் சுற்றி வர ஒரு மாத காலம் எடுக்கும்.
8. சந்திரனை நிலா, வெண்ணிலா, அம்புலி என்றெல்லாம் அழைப்பர்.
9. சந்திரன் மாதத்தில் ஒரு தினம், முழு நிலவாக காட்சி தரும்.
10. இந்த நாளை பூரண தினம், பௌர்ணமி தினம் என்று கூறுவர். இந்த இரவில் பூமியில் பால் நிலவு ஒளிரும்.
11. அன்றிலிருந்து இது தேய்ந்து சென்று ஒரு நாள் முழுமையாக மறையும். அதனை அமாவாசை என்பர்.
12. அன்று இரவு முழுவதும் இருட்டாக இருக்கும்.
13. சந்திரனுக்கு ஈர்ப்பு விசை உண்டு.
14. கடலில் இரவில் இதனால் நீர் வற்றுப் பெருக்கு ஏற்படும்.
15. அமெரிக்க விண்கலம் சந்திரத் தரையில் இறங்கியது.
16. ஆம்ஸ்ரோங், அல்ரின் ஆகியோர் சந்திரத்தரையில் இறங்கி அமெரிக்க கொடியை நாட்டி, சந்திரக் கற்களையும் பூமிக்கு எடுத்து வந்தனர்.

## இணைமொழிகள்

1. அகட விகட்ம்
2. கையும் களவுமாய்
3. கிட்டத் தட்ட
4. ஆதி அந்தம்
5. கொடுக்கல் வாங்கல்
6. பட்டம் பதவி
7. அங்குமிங்கும்
8. பேரும் புகழும்
9. சூது வாது
10. ஏறக்குறைய
11. ஓட்டமும் நடையுமாக
12. பூவும் பிஞ்சும்
13. கள்ளங் கபடம்
14. அண்டை அயல்
15. எலும்பும் தோலுமாக
16. அரை குறை
17. கையும் மெய்யுமாய்
18. சுற்றும் முற்றும்
19. ஆற அமர
20. மூலை முடுக்கு
21. சுக துக்கம்
22. ஏச்சுப் பேச்சு
23. கண்ட துண்டம்
24. சூது வாது
25. கண்ணும் கருத்துமாய்
26. சண்டை சச்சரவு
27. அடி பிடி
28. ஊரும் பேரும்
29. அல்லும் பகலும்
30. ஒட்டி உலர்ந்து

# சாது மிரண்டால்....



பொல்லாத பாம்பு ஒன்று தனக்கு ஈடு இணை இல்லை என்ற மமதையோடு தன் இஷ்டத்துக்கு அந்தக் காடெங்கும் சுற்றித் திரிந்தது. கண்ணில் அகப்படும் சிறு உயிரினங்களையெல்லாம் கணக்கில்லாமல் கொன்று விழுங்கி வந்தது.

அதன் தொல்லை தாங்க முடியாத பல அப்பாவி உயிரினங்கள் வேறு காடுகளுக்கு இடம்பெயர்ந்து போயின. அதனால் உணவுக்கு மிகவும் திண்டாடிய பாம்பு ஒரு பெரிய எறும்புப் புற்றுக்குள் புகுந்து எறும்புகளின் முட்டைகளைத் தினம் தினம் வேட்டையாடத் தொடங்கியது. எறும்புகள் இரை தேட வெளியே செல்லும் சமயம் பார்த்து புற்றுக்குள் பாம்பு புகுந்துவிடும். ஒரு முட்டைக் கூட மிச்சம் வைக்காமல் அத்தனை முட்டைகளையும் உண்டு விட்டு. ஏதும் அறியாதது போல வெளியே சென்று விடும். இரைதேடச்சென்றஎறும்புகள் புற்றுக்கு வந்து தங்கள் முட்டைகளைக் காணாது திகைக்கும். வேதனைப்படும்; கண்ணீர் விடும். இப்படி பலகாலம் நடந்து வந்தது. பொறுத்துப் பொறுத்துப் பார்த்த எறும்புகள் ஒரு தடவை புற்றுக்கு வெளியே ஒளிந்திருந்து பார்த்ததில் முட்டைகள் எப்படி காணாமல் போகின்றன என்ற விடயம் கண்டுபிடிக்கப்பட்டது. முதலில் அவ்விடத்தை விட்டு வேறிடம் செல்ல முடிவெடுத்த எறும்புகள் பின்னர் கோழைகள் போல ஒளித்தோடுவதை விரும்பாமல் எதிர்த்து போராடுவது என்ற முடிவுக்கு வந்தன. நூற்றுக்கும் மேற்பட்ட எறும்புகள் கூடி ஆலோசனை நடத்தின. அதன்படி அதிரடியாக பாம்பைக் கொல்ல முடிவெடுத்தன. பாம்பு வழமையாக வரும் நேரத்துக்கு சற்று முன்பாக எறும்புகளில் ஒரு குழு புற்றின் உள்ளே பக்கச் சுவர்களில் பதுங்கியது. மற்றைய குழு புற்றின் தரையில் மண்ணைத் தோண்டி அதற்குள் பதுங்கியது. தலைமை எறும்பு "புற்றுக்குள் பதுங்கி பாம்பைத் தாக்கும் போது வீர மரணம் கூட எமக்கு ஏற்படலாம். ஆனால் நாம் போராடிச் செத்தாயினும் எம் சந்ததியினரை வாழவைக்காக. வேண்டும்" எனக் கூறி எல்லோரையும் வாழ்த்தியது. "உயிர் கொடுத்தும் எமது உரிமையைக் காப்போம்" என்று வீர சபதமிட்ட எல்லா எறும்புகளும் தமது புற்றாகிய போர்க் களம் புகுந்தன.

மறுநாள் குறித்த நேரத்துக்கு பாம்பு புற்றுக்குள் புகுந்தது. திட்டமிட்ட படியே பக்கச் சுவர்களில் ஒட்டியிருந்த எறும்புகள் பாம்பின் தலைப் பகுதியில் திடீரென குதித்தன. அதன் கண்களைத் தாக்கி கடித்துக் குதறின வலிதாங்க முடியாதபாம்பு, அங்கும் இங்கும் புரண்டு துள்ள மண்ணிற்குள் புதைந்து மறைந்திருந்த எறும்புகள் வெளியேறி அதன் உடலை மொய்த்து கடிக்கத் தொடங்கின. திட்டமிட்ட படியே எல்லாம்நடந்தேறியது.

சாதுவான உயிரினமான எறும்புகள் பொறுமையிழந்து வீறு கொண்டெழுந்ததால் 'நான்' என்ற அகந்தை கொண்ட பாம்பு புற்றுக்குள்ளேயே அந்த சிறிய உயிரினங்களுடன் போராடிப் போராடி உயிரை விட்டது.

**துன்பங்கள் வரின் எதிர் நீச்சல் போடுவோம்.**
**வெற்றி நிச்சயம்.**


# கழுகு



அண்டார்டிகா தவிர உலகின் எல்லாப் பகுதிகளிலும் வாழும் பறவை கழுகு. கோல்டன் ஈகிள், பால்ட் ஈகிள் என்ற இரண்டும் மிகப் பெரியவை. மூன்றடி நீளம் வரை இருக்கும். சிறகை விரித்தால் 2 மீற்றர் அகலம் இருக்கும். ஆண் கழுகை விட, பெண் கழுகு உருவத்தில் பெரியது. தலையும், கூர்மையான கண்களும் பெரியவை. சிறகுகள் நீள் சதுர வடிவமாக இருக்கும். உறுதியான அலகு இரண்டங்குல நீளம் இருக்கும். அலகு முனையில் கூராகவும் வளைந்தும் இருக்கும். கால்களும் பாதங்களும் உறுதியானவை. பகலில் தான் இவை இரை தேடும். உயரப் பறந்தவாறே பூமியில் உள்ள இரையைக் கண்டு அதன் மீது பாய்ந்து தாக்கிக் கொல்லும். எலி போன்ற சிறிய உயிரினங்களே இதன் முக்கிய உணவு. உயரமான மரங்களில் கூடு கட்டும். ஒரு கழுகு ஒருமுறை கட்டிய கூட்டை தன் ஆயுள் முழுவதும் பயன்படுத்தும். சில கூடுகள் 3 மீற்றர் அகலமும் 6 மீற்றர் ஆழமும் கொண்டவை. ஒரு ஆணும் பெண்ணும் சேர்ந்து ஆயுள் முழுவதும் வாழும். ஏனைய பறவை, விலங்கினங்களில் இருந்து இது மாறுபட்ட இயல்பாகும். ஒன்று அல்லது இரண்டு முட்டைகளை இடும். முட்டை 3 அங்குல நீளமும் 150 கிராம் எடையும் இருக்கும். 35 முதல் 45 நாள் வரை பெண் அடைகாக்கும். இந்த நாள்களில் ஆணே இரை தேடி வந்து பெண்ணுக்கு கொடுக்கும். முட்டைகளில் இருந்து முதலில் வெளிவரும் குஞ்சு, சற்று பெரியதாக இருக்கும். பெரிய குஞ்சு சிறிய குஞ்சைக் கொத்தி கொன்று விடும்.

## கடிகாரங்கள் காட்டும் நேரம் யாது?

1 2 3 4



.................. .................. .................. ..................

**கடிகாரங்களில் காட்டப்பட்டுள்ள நேரங்களுக்கு அரை மணித்தியாலத்தை சேர்த்தால் காட்டும் நேரத்தை எழுதுவோம்**

.................. .................. .................. ..................

## வாக்குறுதிகளை...

னேஸ்வரன் தெரிவித்தார்.

அமெரிக்க காங்கிரஸ். நாடாளுமன்ற உறுப்பினர் பில் ஜோன்சன், இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப் இருவரும், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனை அவரது இல்லத்தில் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினர். இந்தச் சந்திப்புத் தொடர்பில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்ததாவது:

அரசியல் நிலமைகள் தொடர்பில் கேள்வி எழுப்பினர். ஆட்சி மாற்றம் ஏற்பட்டு 2 வருடம் முடிவடைந்துள்ளது. மக்கள் வாழ்வில் மாற்றம் ஏற்படவில்லை. அவர்கள் விரக்தியடைந்துள்ளனர். மக்கள் பல இடங்களில் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்துப் போராட்டங்களை நடத்துகின்றனர். நாம் அரசியல் காரணங்களுக்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்காமல் இருந்தால், மக்களிடத்தில் அது விசனத்தை ஏற்படுத்தும். ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடரில் இலங்கைக்கு இரண்டு வருட கால அவகாசம் வழங்கப்பட்டிருக்கின்றது. பல வாக்குறுதிகளை பன்னாட்டுச் சமூகத்துக்கு இலங்கை வழங்கியுள்ளது.

அரசு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற அழுத்தம் கொடுக்க வேண்டும். வாக்குறுதிகளில் எவை நிறைவேற்றப்படுகின்றன, என்ன நடக்கவில்லை என்பன உள்ளிட்ட விடயங்களை அவதானிக்க வேண்டும். அமெரிக்கா இதனைச் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினேன் - என்றார். (வ-5-101-106)

## மே 18 அன்று...

வடக்கிலும் கிழக்கிலும் ஏனைய இடங்களிலும் வாழும் தமிழ் பேசும் மக்கள் மற்றும் புலம்பெயர் தமிழ் பேசும் மக்கள் ஆகியோர் காலை 9.30 மணி தொடக்கம் 3 நிமிட நேர மௌன அஞ்சலியை நடத்த வேண்டும் என்று தாழ்மையுடன் வடமாகாண முதலமைச்சர் என்ற முறையில் உங்களிடம் கோரிக்கை சமர்ப்பிக்கின்றேன்.

வெளிநாடுகளில் உள்ளவர்கள் தமது வசதிக்கேற்றவாறு 3 நிமிடநேர மௌன அஞ்சலியில் ஈடுபடலாம். ஒரு நாட்டின் தேசிய கீதம் இசைக்கப்படும் போது எவ்வாறு மக்கள் எங்கெங்கு நிற்கின்றார்களோ அங்கு தனித்துநின்று நாட்டுக்கு மதிப்பை அளிக்கின்றார்களோ அதேபோன்று 18ஆம் திகதி மு.பகல் 9.30 மணிக்கு சகலரும் இருக்குமிடத்தில் சிரம் தாழ்த்தி 3 நிமிட நேரத்துக்கு இறந்த எம் உறவுகளுக்காக நினைவஞ்சலி செலுத்துமாறு வேண்டிக் கொள்கின்றேன்.

இந்தத் தினம் வரும் வருடங்களிலும் தமிழர்தம் துக்க தினமாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன். முடியுமானவர்கள் முள்ளிவாய்க்காலுக்கு அன்றையதினம் வந்து சேர்ந்திருந்து உங்கள் அமைதி அஞ்சலியைச் செலுத்த வேண்டுகின்றேன். பல இடங்களில் இருந்தும் மக்களை ஏற்றிவரப் பேருந்துகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. பேருந்தினுள் ஏறக்கூடிய இடங்களையும் நேரங்களையும் உங்கள் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களிடம் இருந்து தெரிந்து கொள்ளுங்கள் - என்றார். (வ-5)

## வித்தியா...

புங்குடுதீவு மகா வித்தியாலயத்துக்கு முன்பாக இன்று முற்பகல் 8 மணி தொடக்கம் பிற்பகல் 5 மணி வரை இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

புங்குடுதீவு உலக மையத்தின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் நடத்தப்படுகிறது.

"புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை செய்யப்பட்டு இரண்டு வருடங்கள் நிறைவடைந்துள்ளன. எனினும் படுகொலைக்கான நீதி இன்றுவரை கிடைக்கவில்லை.

மாணவியின் படுகொலை வழக்கு விசாரணையை டரயல் அட் பார் தீர்ப்பாயம் முன்னிலையில் நடத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அந்த தீர்ப்பாயத்தை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் அமைக்காமல் கொழும்புக்கு மாற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தெரிகிறது.

எனவே வித்தியா படுகொலை வழக்கு விசாரணைகள் தொடர்ச்சியாக யாழ்ப்பாண மேல் நீதி மன்றிலே இடம் பெறவேண்டும் என்று வலியுறுத்தி அடையாள உணவு ஒறுப்புப் போராட்டம் இன்று முன்னெடுக்கப் படுகிறது. இந்தப் போராட்டத்துக்கு புங்குடுதீவு தனியார் பேருந்து சங்கம் ஆதரவு தெரிவித்துள்ளது" என்று ஏற்பாட்டாளர்களால் தெரிவிக்கப்பட்டது. (வ-8)

## படையினருக்கு...

பாதுகாப்பு அமைச்சின் செயலர், முப்படைத் தளபதிகளுக்கும் இடையே சந்திப்பு நடைபெற்றது. இதன் பின்னர், மாவட்ட ரீதியிலான சந்திப்புக்கள் நடைபெற்றன.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் கடந்த மாதம் 28ஆம் திகதி சந்திப்பு நடைபெற்றது. சந்திப்பில், ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் தனியார் காணியில் உள்ள பாதுகாப்புத் தரப்பினரின் முகாம்களை அரச காணிக்கு இடமாற்றுவதை நோக்காகக் கொண்டு, மாற்றாக வழங்கக் கூடிய காணிகளை அடையாளம் காணுமாறு பிரதேச செயலர்களுக்கு பணிப்புரை விடுக்கப் பட்டிருந்தது.

பிரதேச செயலாளர்கள் தமது அறிக்கைகளை மாவட்டச் செயலகத்துக்கு முன்வைத்துள்ளனர். தமது பிரதேசங்களில் பாதுகாப்புத் தரப்பினருக்கு வழங்கக் கூடிய மாற்றுக் காணிகள் - அரச காணிகள் இல்லை என்றே அவர்கள் அறிக்கையிட்டுள்ளனர்.

இது தொடர்பிலான அடுத்த கூட்டம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பாதுகாப்புத் தரப்பினருக்கும் இடையே விரைவில் நடைபெறவுள்ளது. (வ-5)

## இலங்கை...

நேற்றுப் போராட்டம் நடத்தப்பட்டது.

பெரியார் திராவிடர் கழகத்தைச் சேர்ந்தவர்கள் இந்தப் போராட்டத்தை நடத்தியமையால் அங்கு பெரும் பரபரப்பு நிலவியது.

இலங்கையில் நடக்கவிருக்கும் இசைநிகழ்ச்சியில் இசைஞானி இளையராஜா கலந்து கொள்ளவுள்ளார். இந்த நிகழ்ச்சியை சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த ராஜசிங்கம் என்பவரும், நோர்வேயிலுள்ள கமல் என்பவரும் இணைந்து நடத்துகின்றனர். இந்த நிகழ்ச்சியில் இசைஞானி இளையராஜா கலந்து கொள்ளக் கூடாது என தந்தை பெரியார் திராவிடர் கழகத்தை சேர்ந்தவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தில் ஈடுபட்டவர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தமிழீழ மக்கள் அடக்குமுறைக்கு மத்தியில் உரிமைகளை இழந்த நிலையில் இருக்கும் இந்தக் கால சூழலில் இசை நிகழ்வில் கலந்து கொள்ளக்கூடாது என்று அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (வ-5)

கோடிபதி அதிர்ஷ்ட

சீட்டிழுப்பு வாரம்: 136
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 14.05.2017

அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 86,423,144/-

ஆங்கில எழுத்து மற்றும் இலக்கங்கள்
R 10 19 45 51

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

## மரண அறிவித்தல்

### திருமதி யோகலட்சுமி சிவசுப்பிரமணியம்



அச்செழுவைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகலட்சுமி சிவசுப்பிரமணியம் நேற்று (14.05.2017) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - சின்னம்மா தம்பதியரின் புதல்வியும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - அன்னப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான குலசிங்கம், குணசிங்கம் மற்றும் குணரத்தினம் ஆகியோரின் அன்புச்சகோதரியும் யோகலட்சுமி, ரேவதி, ஈஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் குலபவானி, குலரமணன், குலரஜனி, குலறஜீவன், குலசீலன், தர்சினி, பிரதீபன், துவகாந்தினி ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.05.2017) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் மு.ப. 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 2 மணியளவில் அச்செழு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஆலத்தறைவளவு,
அச்செழு, நீர்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### கணபதி சண்முகன்



கைதடி தெற்கு, கைதடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதி சண்முகன் (ஓய்வுபெற்ற சாரதி, இ.போ.ச. யாழ்ப்பாணம்)14.05.2017 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதி மற்றும் லட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற ஞானாம்பாளின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற கிருஷ்ணமூர்த்தி மற்றும் நகுலேஸ்வரி சேதுலிங்கம், முருகமூர்த்தி, விநாயகமூர்த்தி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச்சகோதரனும் சுஜிதரன் (கனடா), சஞ்சீவன் (ஜேர்மனி), சிந்துஜன் (CCA, மருத்துவபீடம்), துவாரகா, பகீரதன், துஸ்யந்தி (2017 Bio, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சந்திரிக்கா (கனடா), சனுஜா (ஜேர்மனி), சத்தியா, நாகவரதன் ஆகியோரின் அன்பு மாமனும் லக்ஷிதா, தஸ்வின், மித்ரா (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.05.2017) திங்கட்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊற்றல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி வடக்கு, கைதடி.

தகவல்:
குடும்பத்தினர். 077 916 0679

## நீங்கா நினைவலைகளும் நன்றி நவிலலும்

31ஆம் நாள் — 2ஆம் ஆண்டு



**அமரர் சுப்பிரமணியம் சிவலிங்கம்**
தோற்றம் 01.09.1956 — மறைவு 15.04.2017



**அமரர் சிவலிங்கம் துஷிதன்**
தோற்றம் 18.08.1992 — மறைவு 16.05.2015

எங்கள் அன்புத் தெய்வம் திடீரென எம்மை விட்டுப் பிரிந்த வேளை நாம் செய்வதறியாது திகைத்து நின்றபோது உடன் ஓடி வந்து உதவிகள் செய்த உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அயலாருக்கும் எமது துக்கத்தில் பங்கு கொண்டு எமது இல்லத்துக்கு வந்து ஆறுதல் கூறியோருக்கும் இறுதிக்கிரியைகளில் பெரும் திரளாகக் கலந்து கொண்ட அனைவருக்கும் அயலில் உள்ள நல்ல இதயங்களுக்கும் வெளிநாட்டில் இருந்து தொலைபேசி மூலம் தொலைத் தொடர்புகள் கொண்டு எமது துக்கத்தில் பங்கு கொண்ட அனைவருக்கும் மற்றும் அந்தியேட்டிக்கு கீரிமலைக்கு வந்தவர்களுக்கும், வீட்டுக் கிரியைகளில் பங்கு கொண்டு ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தித்த அனைவருக்கும் சிரம் தாழ்த்தி எமது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

குடும்பத்தினர்.

இம்முறை தனயோகம் உங்களுடையதா?

| திகதி | வெற்றிவாரம் | வர்ணம் |
| --- | --- | --- |
| 14.05.2017 | 2132 | ஊதா |

துலாம் 08 23 25 34

செவ்வாய்க்கிழமை வெற்றிப்பொதி
ரூ 4, 459, 412/=

2017.05.16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நீல நிற டிக்கட்டுக்களாகும்.
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து
1919 இற்கு அனுப்பவும்.

Galaxy Star

வெற்றி வாரம் 159 — திகதி 14.05.2017

நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
06 02 30 31 41

அடுத்த புதன்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 3,040,096/-
17.05.2017 ஆம் திகதி புதன்கிழமை
நீல நிற டிக்கட்டுக்களாகும்.

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>GS என டைப் செய்து
1919 இற்கு அனுப்பவும் அல்லது நரித அழைப்பு 1919

## LANKA SKILL DEVELOPMENT ACADEMY (PVT) LTD

### வேலைவாய்ப்பு

**01.** Hotel industry ஆசிரியர் NVQ QUALIFIED

**02.** Hotel industry பயிற்சி ஆசிரியர் (G.C.E A/L)

சிறந்த ஆங்கில அறிவு கணனி அறிவு கற்பித்தலில் முன்னனுபவம் இருத்தல் வேண்டும். தெரிவு செய்யப்படும் பயிற்சி ஆசிரியர் விண்ணப்பதாரி பயிற்சியளிக்கப்பட்டு வேலையில் இணைக்கப்படுவார்.

(பயிற்சியின் ஆரம்பத்திலிருந்தே சம்பளம்)
மின்னஞ்சல் ஊடாக விண்ணப்பிக்கவும்.

**03.** அலுவலக சுத்திகரிப்பாளர் (பெண்)
(அலுவலக சுத்திகரிப்பாளர் 17/05/2017 புதன்கிழமை நேரில் வருகை தரவும்)

S_Senthilingam@hotmail.com

**150/11, சிவராஜா அவின்யு**
**திருநெல்வேலி.**

T.P: **0213127815**
**0778153187**

## மரண அறிவித்தல்

## இராமநாதர் தியாகராசா



நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமநாதர் தியாகராசா 13.05.2017 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமநாதர் தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் யோகம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற தனுக்கோடி செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் பாலசிங்கம் (அலுவலகப் பணியாளர், நெடுந்தீவு றோ.க. மகளிர் கல்லூரி), தனபாக்கியம் (அதிபர், மாவிலித்துறை றோ. க. வித்தியாலயம், நெடுந்தீவு), பரமேஸ்வரன், பிறேமராசா(அரசினர் வைத்தியசாலை, நெடுந்தீவு), விமலாதேவி, தனலட்சுமி (சுவிஸ்), கீதா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் இரத்தினேஸ்வரி (அரசினர் வைத்தியசாலை, கோப்பாய்), சர்வேஸ்வரன் (ஓய்வுபெற்ற மின்சார ஊழியர்), ருக்மணிதேவி (ஆசிரியை), மகேஷ்வரன், குருதர்சினி (அலுவலக பணியாளர், காரைநகர் இந்துக்கல்லூரி), பாஸ்கரன், கரன் ஆகியோரின் அன்பு மாமனும் அம்புஜன், யுகந்தன், துவாரகன், டேனுஷன், சங்கீர்த்தன், மதீஷன், தனோஜன், டிருஷா, பைந்தமிழ், துவாரகா, கஜீதரன், அபிரா, அக்ஷரா, அஹரா, ஐதுசன், காருஷன், அர்ச்சனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.05.2017) திங்கட்கிழமை மு.ப.10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கட்டுராமன்சல்லி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நெடுந்தீவு கிழக்கு.**
**13 ஆம் வட்டாரம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 559 0088, 077 186 4832, 077 624 6816**

## மரண அறிவித்தல்

திருமதி

## பரமேஸ்வரி கனகரத்தினம்



சுன்னாகம் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி கனகரத்தினம் (13.05.2017) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான இராமுப்பிள்ளை - சின்னத்தங்கம் தம்பதியரின் அருமைமருமகளும் காலஞ்சென்ற கனகரத்தினத்தின் அன்புமனைவியும் சதாரூபி, சர்வாம்பிகை (பிரான்ஸ்), சாரதாம்பிகை (சுவிஸ்), அனுசாம்பிகை (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும் பாலசிங்கம், சிவபாலன் (பிரான்ஸ்), கதிர்காமநாதன் (சுவிஸ்), பத்மநாதன் (கனடா) ஆகியோரின் அருமை மாமியும் ஆதவன், ஸ்ரீகரன் (பிரான்ஸ்), பிரணவன், பிருந்தன், பிரதீசா (சுவிஸ்), திவாகர், அஸ்வின், திஷான் (கனடா) ஆகியோரின் ஆருயிர் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.05.2017) செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**முருகேசு பண்டிதர் வீதி,**
**சுன்னாகம் தெற்கு.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**021 224 0881**

## மரண அறிவித்தல்கள்

## அந்தோனிமுத்து பவுலினப்பு (இராசமணி)




**பிறப்பு 28.07.1936**　**இறப்பு 13.05.2017**

செம்பியன்பற்றைப் பிறப்பிடமாகவும் போயிட்டி, இளவாலையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிமுத்து பவுலினப்பு 13.05.2017 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிமுத்து - மதலேனின் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற யோசேப்பின் அன்புக் கணவரும் துரைசிங்கம் (கனடா), காலஞ்சென்றவர்களான இராசாத்தி, துரைமணி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் அருள்சீலி (போயிட்டி), ஞானசீலி (இத்தாலி), இதயம் (ஜேர்மன்), காலஞ்சென்ற வ:சில், சீலி (இத்தாலி), சிசில் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் அற்புதம் (போயிட்டி), வசந்தன் (இத்தாலி), அல்போன்ஸ் (ஜேர்மன்), ராணி (இத்தாலி) ஆகியோரின் மாமனும் அருட்தந்தை சில்வெஸ்ரர் தாஸ், அருட்தந்தை றெஜிக்குமார் (OMI) ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் 16.05.2017 செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து செம்பியன்பற்றுக்கு எடுத்துச் செல்லப்பட்டு அஞ்சலிக்காக புனித பிலிப்பு நேரியார் ஆலயத்தில் வைக்கப்பட்டு மு.ப. 10.00 மணியளவில் இரங்கல் திருப்பலியின் பின்னர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**



## இளையகுட்டி குழந்தைவேலு

நுணாவில் மேற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட இளையகுட்டி குழந்தைவேலு நேற்று (14.05.2017) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையகுட்டி - தங்கமுத்து தம்பதியரின் மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் சுந்தரலிங்கம், சந்திரலிங்கம் ஆகியோரின் பாசமிகு தந்தையும் புஷ்பராணி, மஞ்சுளா ஆகியோரின் அன்பு மாமனும் கஸ்தூரி, கானுஜா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான கனகம்மா, சிவகுரு, பொன்னுத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.05.2017) திங்கட்கிழமை பி.ப. ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காந்தாளம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**நுணாவில் மேற்கு.**
**சாவகச்சேரி.**

**கு.சுந்தரலிங்கம் - 077 140 5047**
**கு.சந்திரலிங்கம் - 077 374 7154**

## வல்லிபுரம் நாகராசா

(ஓய்வு பெற்ற ஆசிரியர்,
யா/சீனன்கலட்டி ஞானோதய வித்தியாசாலை)



சிறுவிளானைப் பிறப்பிடமாவும், வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் நாகராசா நேற்று (14.05.2017) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் - கண்ணாத்தை தம்பதியரின் அன்புப்புதல்வனும் காலஞ்சென்ற செல்லப்பா - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும் மகேஸ்வரியின் அன்புக்கணவரும் திலகறாஜ் (ஆசிரியர், ஆனைக்கோட்டை R.C.T.M.S), சியாமளா (ஆசிரியை, யாழ். மத்திய கல்லூரி), சசியளா (ஆசிரியை, சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை) ஆகியோரின் அன்புத்தந்தையும் நாகதாரணி (ஆசிரியர், யா/இணுவில் இந்துக்கல்லூரி), செந்தில்நாதன் (ஆசிரியர், யா/மெமோறியல் ஆங்கில பாடசாலை), தேவகாந்தன் (ஆசிரியர், யா/இணுவில் இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான கனகம்மா, கதிரவேலு, பாக்கியம் மற்றும் அப்புத்துரை, பாலசிங்கம் ஆகியோரின் அன்புச்சகோதரரும் நிஷாந், திலக்சயன், அபிசேக், ஜனுர்ஷாந் ஆகியோரின் அருமைப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.05.2017) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சிறுவிளான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சிறுவிளான், இளவாலை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

### புலிகளின்...

எச்சங்கள் பலவற்றை தன்னகத்தே சுமந்த வண்ணம் இந்த உலகுக்கு பல செய்திகளை எடுத்து கூறிய நிலையில் உள்ளது.

விடுதலைப் புலிகள் தங்களை படையணி ரீதியாகவோ அல்லது நிர்வாக ரீதியாகவோ அடையாளப்படுத்துவதற்காக தகடுகளில் இலக்கம் பொறிக்கப்பட்டு மூன்று இடங்களில் அணிந்து கொள்வார்கள். அவர்கள் இடுப்பு பகுதியில் அணியும் தகடு ஒன்று முள்ளி வாய்க்கால் பகுதிக்கு நேற்றைய தினம் சென்ற போது சிக்கியது.

இந்தத் தகட்டுக்கு மற்றும்மொரு சிறப்பு ஒன்று உள்ளது. விடுதலைப்புலிகள் வளங்களை எவ்வாறு பயன்படுத்தியுள்ளார்கள் என்பதையும் எமக்கு தெரிவிக்கின்றது. 2 பக்கங்களிலும் இலக்கம் பொறிக்கப்பட்டுள்ளது. ஆனால் ஒரு பக்கத்தில் இலக்கம் அழிக்கப்பட்டுள்ளது.

“இறுதியில் வளங்களை பெற்றுக்கொள்வதில் பல சிரமங்களை எமது விடுதலை இயக்கம் சந்தித்தது. புதிய போராளிகளுக்கு உரிய தகடுகளை பெற்றுக்கொள்வதிலும் சிரமங்களை எதிர் கொண்டோம். அதனை நிவர்த்தி செய்வதற்கு ஏற்கனவே வழங்கப்பட்ட தகட்டுக்கு உரிய போராளி வீரச்சாவடைந்தால், அவருடைய இலக்கத்தை அழித்துவிட்டு புதிய இலக்கம் பொறிக்கப்பட்டு புதிய போராளிக்கு வழங்கப்படும்” என்று முன்னாள் போராளி ஒருவர் தெரிவித்தார்.

முள்ளிவாய்க்காலில் சிதறிக்கிடக்கும் ஒவ்வொரு எச்சங்களின் பின்னும் பல வரலாறுகள் புதைந்துள்ளன. (வ-7)

### இரட்டைப்...

டைப்புளியடியில் ஆரம்பமாகி தொடர்ந்து 4 நாள்களுக்கு கடைப்பிடிக்கப்படும் என்று அந்தக் கட்சியின் நினைவஞ்சலி ஒருங்கிணைப்பாளர் தெரிவித்தார்.

“எமது இனம் அனுபவித்த கொடுமையான நிகழ்வுகளில் ஒன்று முள்ளிவாய்க்கால். நாம் ஒவ்வொரு வருடமும் முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தைக் கடைப்பிடித்து வருகின்றோம். இந்த முறை ஜனநாயகப் போராளிகள் கட்சியினரால் முள்ளிவாய்க்கால் இரட்டைப்புளியடியில் அஞ்சலி நிகழ்வுகள் ஆரம்பமாகி எதிர்வரும் 18ஆம் திகதி வரைக்கும் கடைப்பிடிக்கப்படவுள்ளது.

முள்ளிவாய்க்கால் மனிதப் பேரவலம் நடைபெற்ற இந்த 4 நாள்களும் கொல்லப்பட்ட எம் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து அஞ்சலி செலுத்தவேண்டும்” என்று அவர் கேட்டுள்ளார்.

(வ-7)

## ஒன்றிணைந்த...

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நினைவேந்தலை தனித்து ஏற்பாடு செய்யும் என்றும் அறிவித்திருந்த நிலையிலேயே, வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் இந்தப் பத்திரிகை அறிக்கை நேற்று மாலை வெளியாகியுள்ளது.

இதுதொடர்பில் அவர் நேற்றிரவு அனுப்பிய பத்திரிகை அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

**விசாரணைப் பொறிமுறை இன்னமும் இல்லை**

வடக்கு கிழக்கு மாகாண மக்களின் சரித்திரத்தில் மாறா இடம்பெற்றுவிட்ட சோக வரலாற்றுப் பதிவே முள்ளிவாய்க்கால். அன்றைய தினம் என்றென்றும் எமது மக்களின் வரலாற்றில் துக்க தினமாக கடைப்பிடிக்க வேண்டும். 2009ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி முடிவிலே உயிரிழந்த ஆயிரமாயிரம் பொது மக்கள் தொடர்பான உண்மை நிலை இது வரைக்கும் வெளிச்சத்துக்குக் கொண்டு வரப் படவில்லை. நடந்தது சம்பந்தமான நம்பகத் தன்மை வாய்ந்த விசாரணைப் பொறிமுறை இதுவரையில் ஏற்படுத்தப்படவில்லை.

ஐ.நா. மனித உரிமைகள் சபை, போரிலே கொல்லப்பட்டவர்களுக்கான நீதி உறுதிப்படுத்தப்படும் என்ற தோரணையில் மேலும் இரு வருடங்கள் கால நீட்சி அளித்துள்ளது. வெளிப் படைத் தன்மையுடன் பொறுப்புக் கூறலானது நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதே பன்னாட்டுச் சமூகத்தின் எதிர்பார்ப்பு.

இலங்கை அரசு இது பற்றிய உரிய நடவடிக்கைகள் எடுப்பதாகக் கூறியே கால நீட்சி பெற்றுக் கொண்டார்கள். அது பற்றி எந்தவிதமான நடவடிக்கைகளையும் எடுக்க அரசு முன்வருவதாகத் தெரியவில்லை. சந்திரிகா அம்மையார் மட்டும் வெளிநாடுகளின் உள்ளடங்கலுடன் போர்க்குற்ற விசாரணை நடைபெற வேண்டும் என்ற தமது தனியான கருத்தை வெளியிட்டுள்ளார். வெளிநாட்டு உள்ளீடுகள் இல்லாத நீதி விசாரணை ஒரு போதும் உண்மையை வெளிக்கொண்டுவர உதவி செய்யாது.

**அநீதிகளை எடுத்துரைக்க உதவும்**

இதனை நாங்கள் வேண்டி நிற்பதன் நோக்கம் குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதற்காவே என்று சிலர் நினைக்கின்றார்கள். அதனால் பெருந்தன்மையுடன் இரக்கம் காட்டி அதைப்பற்றி மறந்துவிடலாமே என்று அவர்கள் கூறுகின்றார்கள். இவ்வாறு கூறுபவர்கள் கொழும்பிலும் வேறு இடங்களிலும் சொகுசாக இருந்து கொண்டு இவ்வாறான கருத்துக்களை வெளிக்கொண்டு வருகின்றார்கள். இது தவறு. இப்பேற்பட்ட விசாரணை தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை எடுத்துரைக்க உதவும்.

குற்றவாளிகள் தண்டிக்கப்படுகின்றார்களோ? இல்லையோ? இதுவரை காலமும் தமிழ் மக்கள் எவ்வாறு நடத்தப்பட்டுள்ளார்கள் என்பது சம்பந்தமான விடயங்களை இவ்வாறான விசாரணைகள் வெளிக்கொண்டு வருவன. அத்துடன் நடந்தவை வெளிச்சத்துக்கு வந்தால், அவை தமிழ் மக்களின் நல்லதொரு அரசியல் தீர்வுக்கு முன்னோடியாக அமையக் கூடும். தமிழர்கள் தமது அரசியல் உரிமைக்கான கோரிக்கைகளை இதுவரை காலமும் தொடர்ச்சியாக முன்வைத்து வந்த காரணங்களை எடுத்தியம்ப அவ்வாறான விசாரணைகள் வழிவகுக்கும். உண்மையான அதிகாரப் பரவலாக்கம் விரைந்து செயற்பட வேண்டிய தொன்று என்பதை அனைவரையும் அறிந்து கொள்ளச்செய்வன.

**ஒருங்கிணைய வேண்டும்**

இன்று ஜனநாயக வழிமுறைகளில் மக்கள் தங்கள் கவனத்தைத் திருப்பியுள்ளார்கள். அடிதடி எடுத்தே ஒரு விடயத்துக்குத் தீர்வு காணலாம் என்ற எண்ணம் போய், எம்மை நாமே வருத்தி அகிம்சை முறையில் போராடி வெற்றிகள் காணமுடியுமென்பதை எமது மக்கள் எடுத்துக்காட்டி வருகின்றார்கள்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வும் அந்தவகையிலே ஒருவிதப் போராட்டம்தான். அநியாயமாகக் கொலை செய்யப்பட்ட எமது மக்களை நாம் ஒன்றிணைந்து நினைவு கொள்வதன் மூலம் மக்களின் ஒரு பெரிய துயர அலையை உண்டுபடுத்துகின்றோம். இறந்து போனவர்களின் ஆன்மாக்கள் சாந்தி அடைய வேண்டும் என்று ஒருமித்து மனதார கோரிக்கை விடுவது இங்கும் பிறநாடுகளில் வாழும் தமிழ்மக்களையும் மனதால் ஒன்று சேர்க்க உதவுகின்றது.

எம் மக்களின் ஒற்றுமையே எமது கோரிக்கைகளுக்கு ஆட்சியாளர்களைச் செவிசாய்க்க வைக்கும். மே 18ஆம் திகதி முள்ளிவாய்க்காலில் நடைபெறும் நினைவேந்தல் நிகழ்ச்சியில் கட்சி, மத, இன, வர்க்க பேதமின்றி, ஏழைகள் பணக்காரர்கள் என்ற வித்தியாசமின்றி எமது மக்கள் சேர்ந்து பங்குபற்ற வேண்டும். வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள அனைத்து தமிழ் மக்களும் அத்துடன் நாட்டின் ஏனைய இடங்களில் வசிக்கும் தமிழ் மக்களும் புலம் பெயர் தமிழ் மக்களும் ஒன்று சேர்ந்து தமது துக்கத்தை வெளிப்படுத்தும் நாளாக அதை மாற்ற வேண்டும். என்று வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் அறிக்கையில் உள்ளது. (வ-5-4)

## கூட்டமைப்பு...

நான்கு அணிக் கட்சிகள் உள்ளன. ஆனால் தலைமை ஒன்றுதான். சம்பந்தனே எமது தலைவர்.

இவ்வாறு தமிழீழ விடுதலைக் கழகத்தின் (ரொலோ) முக்கிய உறுப்பினரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ந. ஶ்ரீகாந்தா தெரிவித்தார்.

வவுனியாவிலுள்ள கட்சி அலுவலகத்தில் நேற்று மாலை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் பிளவு இருப்பதாகப் பலரும் கருதுகின்றனர். இது குறித்து உங்கள் கருத்து என்ன என்று செய்தியாளர்கள் கேள்வியெழுப்பினர். இதற்குப் பதிலளிக்கையில் சிறிகாந்தா மேலும் தெரிவித்ததாவது:

கருத்து வேறுபாடுகள் எமக்குள் வரும். ஒரு கட்சிக்குள்ளேயே சில விடயங்களைத் தீர்மானிப்பதற்குப் பல மணிநேரம் எடுக்கிறது. அவ்வாறாயின் நான்கு கட்சிகளும் சேர்ந்தால் பிரச்சினைகள் இருக்கும். ஆனால் வேற்றுமையிலும் ஒற்றுமை எமது தேசிய கூட்டமைப்புக்குள்ளது. 2001 ஒக்ரோபர் மாதத்திலிருந்து கடந்த 16 ஆண்டுகளாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு கட்டுக்கோப்பான கூட்டு அணியாக இயங்கி வருகின்றது. அந்த வரலாற்று உண்மையை எல்லோரும் உணர்ந்து கொள்ளவேண்டும்.

பயங்கரவாதச் சட்டம் தொடர்பாக சுமந்திரன் அக்கறையுடன் செயற்படுகிறார். பத்திரிகை அறிக்கையிலும் அவர் குறிப்பிட்டுள்ளார். நான்கு விடயங்கள் வலியுறுத்தப்பட்டன. தடுப்புக் காவல் சட்டத்தில் இப்போது 18 மாதங்கள் என்றிருப்பது குறைக்கப்படவேண்டும் என்பதை ஏற்றுக்கொள்ளவேண்டும். மீண்டும் ஒரு ஆயுதப் போராட்டம் தலைதூக்கிவிடும் என்ற அச்சத்தால் பயங்கரவாதச் சட்டத்தை நடைமுறையில் வைத்திருக்கிறார்கள். ஆனால் எங்களைப் பொறுத்தவரை ஆயுதப் போராட்டத்தின் அத்தியாயம் முடிவடைந்துவிட்டது என்று கருதுகின்றோம். எங்கள் மக்கள் பலவற்றையும் இழந்து நடு வீதியில் அநாதைகளாக உள்ளனர். அவர்களின் உரிமைக்காக ஜனநாயக வழியில்அகிம்சை வழியில் எங்கள் போராட்டத்தை முன்னெடுக்கவேண்டும் என்பதுதான் ரெலோவின் நிலைப்பாடு. நாங்கள் அங்கம் வகிக்கும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின்நிலைப்பாடும் அதுவேதான்.

அந்தவகையில் வடக்குகிழக்குப் பகுதியில் இராணுவமுகாம் இருக்கவேண்டிய தேவை கிடையாது. அரசு அதை வைத்திருக்க விரும்புகிறது. ஏனென்றால் அவர்கள் பார்வை வேறு. எங்கள் பார்வை வேறு. நாங்கள் அரச தலைவராக மைத்திரியைக் கொண்டு வந்தோம் என்பதற்காக எல்லாம் நாங்கள் நினைத்தபடி அவர்கள் மனதை மாற்றி கருத்தை மாற்றி நிலைகளை மாற்றுவார்கள் என்பதை நாங்கள் எதிர்பார்க்க முடியாது. இது அரசியல். எங்களுக்கு எங்களுடைய நிர்ப்பந்தங்கள், அவர்களுக்கு அவர்களுடைய நிர்ப்பந்தங்கள். பதவியை நீடிக்கின்றபதவியைப் பிடித்து வைத்திருக்கவேண்டிய நிர்ப்பந்தம். இதனைப் புரிந்து கொள்ளவேண்டும். அதாவது பல்வேறு நலன்கள் சம்பந்தப்பட்ட விளையாட்டு. நாங்கள் நாங்களாக இருக்கும் வரை நாங்கள் கண்களை மூடிக்கொண்டு ஏமாறத் தயாராகாத வரை நாங்கள் தெளிவாக இருக்கும் வரை நாங்கள் முன்னோக்கிச் செல்ல முடியும்.

நாங்கள் நான்கு கட்சிகளும் இப்போதும் ஒரு அணிக்குள்ளேயே இருக்கின்றோம். எங்களுக்குள் குறைபாடுகள் உள்ளன. அதனை நீங்கள் சுட்டிக்காட்டலாம். நாங்கள் ஒற்றுமையிலிருந்து விலகமாட்டோம். தமிழ் மக்கள் வேறு தெரிவு என்ன ? எங்கள் மக்கள் எல்லாவற்றையும் இழந்து இருக்கிறார்கள். இவ்வாறு இருக்கின்றபோது ஆளுக்கொருவராக ஒருவர் குடும்பியை ஒருவர் பிடித்து சண்டையிடுவோமாக இருந்தால் அது மலிவான அரசியலாக இருக்கலாம். அதை நாங்கள் செய்ய முடியாது. அதைச் செய்யவேண்டும் என்று சிங்களப் பேரினவாத சக்திகள் எதிர்பார்க்கின்றன. நாங்கள் ஒன்றாக இருப்பது பலருக்கு வயிற்றெரிச்சலை ஏற்படுத்துகிறது. இவர்கள் உடையமாட்டார்களா, பிரியமாட்டார்களா, எதற்காக சுரேஸ் பிரேமச்சந்திரன் நீடித்து கொண்டிருக்கிறார் என்பதைச் சிந்திக்கிறார்கள். அது நடக்காது. அதை நான் உறுதியாகச் சொல்கின்றேன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நீடிக்கும். அது ஒருபோதும் வலுவிழக்காது. அதை நீங்கள் உறுதியாக நம்பலாம். அப்படி வலுவிழக்கத் தமிழ் மக்கள் விடமாட்டார்கள். நாங்கள் தமிழ்மக்களுக்கு சில வாக்குறுதிகளை கொடுத்திருக்கிறோம். ஆகவே நாங்கள் உடைந்து போய்விட்டு மக்களை சந்திக்க முடியாது என்றார்.

இந்தச் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் உட்பட ரெலோவின் முக்கிய உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். (த-4-402)

## 2 விக்னேஸ்வரன்களும்...

வரன்களும் தங்களது கடமையை சரியாகவும் நேர்த்தியாகவும் செய்ய வேண்டும். எமது சமூகத்தின் முக்கியமான பொறுப்புக்கள் உங்கள் இருவர் கைகளில்தான் உள்ளன"

இவ்வாறு நல்லை ஆதின குருமுதல்வர் ஶ்ரீலஶ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமசாரிய சுவாமிகள் தெரிவித்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் புதிய துணைவேந்தர் ஆர். விக்னேஸ்வரனுக்கு பாராட்டு விழா இணுவில் கந்தசுவாமி ஆலயத்தில் நேற்றுப் பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெற்றது. பேராசிரியர் வ.மகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கலந்துகொண்டு ஆசிச் செய்தி வழங்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"வடக்கு மாகாண முதலமைச்சராக சி.வி. விக்னேஸ்வரன் இருக்கின்றார். அதேபோல் வடக்கு மாகாண மக்களின் கல்விச் சொத்தான யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக ஆர். விக்னேஸ்வரன் இருக்கின்றார். 2 பதவிகளுமே தமிழ் மக்களுக்கு முக்கிய விடயமாகும். ஆகவே 2 விக்னேஸ்வரன்களும் தமிழ் மக்களின் வாழ்க்கையை உயர்த்தும் வகையில் தமது பணிகளை சிறப்பாகச் செய்யவேண்டும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக செயற்பாட்டை பன்னாட்டு சமூகம் உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கின்றது. தற்போதைய நிலையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் முக்கியமான கட்டத்தில் இருக்கின்றது. அதனை சீரான பாதையில் பயணிக்க வைக்க வேண்டிய முக்கிய பொறுப்பை புதிய துணைவேந்தர் பொறுப்பேற்றுள்ளார். அதனை அவர் சிறப்பாக பயணிக்க வைக்க அவருக்கு இறைவன் அருள்புரிவானாக" என்று நல்லை ஆதீன முதல்வர் மேலும் தெரிவித்தார்.

வ.மகேஸ்வரன் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணம் ஒருகால கட்டத்தில் கல்வி வளர்ச்சியில் 'நாங்கள்தான் முதாலாம் இடத்தில் இருக்கின்றோம்' என மார்பில் தட்டி சொல்லும் நிலமை இருந்தது. ஆனால் அது அனைத்தும் தலைகீழாக மாறி 9 மாகாணங்களிலும் எமது மாகாணமே கடைசி நிலையில் இருக்கின்றது. இந்த நிலையை பாடசாலை மட்டத்தில் மட்டும் அல்லாது பல்கலைக்கழக மட்டத்திலும் மாற்றி அமைத்து எமது மாகாணத்தின் கல்வி வளர்ச்சியை உயர்த்த வேண்டிய க்கடப்பாடு எம் அனைவருக்கும் இருக்கின்றது. எங்களைப் பார்த்து பின்பற்றிய காலம் போய், எங்களை அவமானப்படுத்துகின்ற காலம் காணப்படுகின்றது. எனவே இவற்றை மாற்ற துணைவேந்தரும் சமூக ஆர்வலர்களும் முன்வரவேண்டும்" என்று விழாவின் தலைமையுரையில் பேராசிரியர் வ. மகேஸ்வரன் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (வ-8)

## 3 இடங்களில்...

யாழ்ப்பாணம், மே 15

முள்ளிவாய்க்கால் மண் குருதியில் மூழ்கிய நாள்களை நினைவு கூர்ந்து கடைப்பிடிக்கப்படும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் மூன்றாம் நாள் நேற்றாகும். தொல்புரம் - வழக்கம்பரை, நவாலி மற்றும் வவுனியா ஆகிய இடங்களில் நினைவேந்தல் நிகழ்வுகள் கடைப்பிடிக்கப்பட்டன.

யாழ்ப்பாணத்தில் நடந்த நினைவேந்தலில் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், திருமதி அனந்தி சசிதரன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். வட்டுக்கோட்டைத் தீர்மானம் நிறைவேற்றிய, தொல்புரம் வழக்கம்பரையில் முதலாவது நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது. தொடர்ந்து நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்தின் மீது 1995ஆம் ஆண்டு வான் தாக்குதலில் மக்கள் கொல்லப்பட்டதன் நினைவாக அமைக்கப்பட்ட நினைவுக் கல்லுக்கு அருகில் இரண்டாவது நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது.

இதேவேளை, ரெலோவின் ஏற்பாட்டில் வவுனியா பண்டார வன்னியன் சிலைக்கு முன்பாக நேற்று மாலை 6 மணியளவில் நினைவேந்தல் இடம்பெற்றது.

ரெலோவின் தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் பொதுச்சுடரை ஏற்றி வைத்தார். தொடர்ந்து அந்தக் கட்சியன் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான எம்.கே. சிவாஜிலிங்கம், விந்தன் கனகரட்ணம், மயூரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிகாந்தா உள்ளிட்ட பலரும் சுடரேற்றினர். (வ-5-402-101)

## புதுடில்லிக்கு...

தலைவர் மகிந்த ராஜபக்சவுக்கு, இந்தியாவின் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி அழைப்பு விடுத்தார் என்று முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்தார்.

தனது ஆட்சி மாற்றத்துக்கு இந்தியாவின் புலனாய்வுத்துறையே காரணம் என்று கடுமையாக இந்தியாவைச் சாடி வந்த முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச, இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட இந்தியத் தலைமை அமைச்சருடன், திட்டமிடப்படாத திடீர் சந்திப்பில் பங்கேற்றிருந்தார். இந்தச் சந்திப்பு அரசியல் அரங்கில் பலத்த அதிர்வலையை ஏற்படுத்தியுள்ளது. இந்தச் சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் குறித்து பல்வேறு புதுப் புது தகவல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

"பல்வேறு நாளிதழ்கள் இந்தச் சந்திப்பு ஒரு மணிநேரம் இடம்பெற்றதாக செய்தி வெளியிட்டுள்ளன. வேறு சில 30 நிமிடங்கள் சந்திப்பு நடந்ததாகவும், இன்னும் சில 15 நிமிட சந்திப்பு என்றும் கூறியுள்ளன. உண்மையில் எவ்வளவு நேரம் சந்திப்பு நடந்தது என்று என்னால் கூற முடியாது. என்னென்ன விடயங்கள் கலந்துரையாடப்பட்டன என்று நினைவுபடுத்த முடியவில்லை. ஆனால் அரசியல் பற்றி கலந்துரையாடப்படவில்லை" என்று சந்திப்புத் தொடர்பில் முதன் முதலில், மகிந்த ராஜபக்ச உத்தியோகபூர்வமாகக் குறிப்பிட்டார்.

அதேவேளை, விரிவான அரசியல் கலந்துரையாடலை நடத்துவதற்கு மகிந்த ராஜபக்சவை புதுடில்லிக்கு வருமாறு இந்தியத் தலைமை அமைச்சர் அழைப்பு விடுத்தார் என்று கோத்தாபய ராஜபக்ச தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் மகிந்த ராஜபக்சவுடன் கோத்தாபய ராஜபக்ச, ஜி.எல்.பீரிஸ் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

"கலந்துரையாடல் மண்டபத்தில், மூடிய அறைக்குள் மகிந்த ராஜபக்சவும், இந்தியத் தலைமை அமைச்சர் மோடியும் தனியாகப் பேச்சு நடத்தினர். ஏனையோர் வெளியே காத்திருந்தனர்" என்றும் கோத்தாய ராஜபக்ச மேலும் கூறினார். (வ-5)

## கடலில்...

யில் கூறப்பட்டது.

இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் குருநகரில் நேற்று முற்பகல் இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த து.ஆரோக்கியராசா (வயது - 60) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். அவர் 3 பிள்ளைகளின் தந்தை.

"குறித்த நபர் உட்பட 3 பேர் படகில் குருநகரிலிருந்து சுமார் ஒன்றரைக் கிலோ மீற்றர் தூரத்தில் தொழிலில் ஈடுபட்டிருந்தபோது திடீரென ஆரோக்கியராசாவைக் காணவில்லை. தேடியபோது கடல் நீரியில் முகக்குப்புற விழுந்த நிலையில் அவரை உணர்வற்ற நிலையில் மீட்டு கரைக்குக் கொண்டு சென்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்த்தோம். அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள் இறந்துவிட்டார் என்று கூறினர் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. விசாரணைகளின் பின்னர் உடலம் அவரது குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது. பொலிஸார் மற்றும் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் விசாரணை மேற்கொண்டனர். (த-4)

வாழ்வா சாவா ஆட்டத்தில் வென்று

# கம்பீரமாகச் சென்றது புனே சுப்பர் ஜெயின்ட்



ஐ.பி.எல். தொடரில் நேற்று மாலை நடைபெற்ற வாழ்வா சாவா ஆட்டத்தில் வெற்றிபெற்று 'பிளே ஓவ்' சுற்றுக்குள் நுழைந்தது புனே சுப்பர் ஜெயின்ட்.

புனேயை எதிர்த்து பஞ்சாப் மோதியது. இந்த ஆட்டத்தில் வெற்றிபெறும் அணி 'பிளே ஓவ்' சுற்றுக்குள் செல்லும் என்றிருந்ததால் ஆட்டத்தில் மிகுந்த எதிர்பார்ப்பு நிலவியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று களத்தடுப்பைத் தீர்மானித்தது புனே. ஓட்டமதுவும் பெறப்படாத நிலையிலேயே பஞ்சாப்பின் முதல் இலக்குச் சரிக்கப்பட்டது. ஓட்டமெதனையும் பெறாமல் ஆட்டமிழந்தார் கப்ரில். சகா 10, மார்ஷ் 13 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். இவர்கள் இருவருமே முன்வரிசையில் பதின்மத்தைத் தாண்டியவர்கள். இறுதி நம்பிக்கையான மக்ஸ்வெல் ஓட்டமெதையும் பெறாமல் ஆட்டமிழந்தார். முடிவில் வெறும் 73 ஓட்டங்களில் சுருண்டது பஞ்சாப்.

பந்துவீச்சில் தாகூர் 3 இலக்குகளையும், உனகட், சாம்பா, கிறிஸ்ரியன் மூவரும் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய புனே 12 பந்துப்பரிமாற்றங்களில் ஓர் இலக்கை மட்டும் இழந்து இலக்கை அடைந்து வெற்றிபெற்றது. ஆட்டநாயகனாக சிறந்த பந்து வீச்சுப் பெறுதியை வெளிப்படுத்திய உனகட் தெரிவானார்.

ஐ.பி.எல். தொடரின் லீக் ஆட்டங்கள் அனைத்தும் முடிவடைந்துள்ளன. புனே 18 புள்ளிகளுடன் இரண்டாம் இடத்துக்குச் சென்றுள்ளது. நாளை மறுதினம் நடைபெறும் முதலாவது தகுதி ஆட்டத்தில் புனேயும் மும்பையும் மோதவுள்ளன. (ம)




# முல்லையை வென்று யாழ்ப்பாணம் மகுடம்



யாழ்ப்பாணம், மே 15

மாகாணமட்ட கூடைப்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் யாழ்ப்பாண மாவட்ட அணி கிண்ணம் வென்றது.

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் மாகாணமட்டத்தில் நடத்தப்பட்ட கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றன. ஆண்கள் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் யாழ்ப்பாண மாவட்ட அணியை எதிர்த்து முல்லைத்தீவு மாவட்ட அணி மோதியது. 69:43 என்ற புள்ளிகளின் அடிப்படையில் யாழ்ப்பாண மாவட்ட அணி கிண்ணம் வென்றது. (ம-23)

## எல்லே தொடரில் யாழ். சம்பியன்

யாழ்ப்பாணம், மே 15

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட மாவட்ட அணிகளுக்கு இடையிலான எல்லேயில் ஆண்கள் பிரிவில் யாழ்ப்பாண மாவட்ட அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் யாழ்ப்பாண மாவட்ட அணியை எதிர்த்து கிளிநொச்சி மாவட்ட அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி மாவட்ட அணி முதலாவது இன்னிங்ஸில் 9 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாண மாவட்ட அணி 14 ஓட்டங்களைப் பெற்று 5 ஓட்டங்களால் முன்னிலை வகித்தது.

5 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் இரண்டாவது இனிங்ஸை ஆரம்பித்த கிளிநொச்சி மாவட்ட அணி 6 ஓட்டங்களைப் பெற்று ஒரு ஓட்டத்தால் முன்னிலை வகித்தது. 2 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய யாழ்ப்பாணம் மாவட்ட அணி இலகு வெற்றிபெற்றது. (ம-422-108)


யாழ்ப்பாண மாவட்ட எல்லே அணி

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், மே 15

குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதி ஆட்டமொன்று இன்று திங்கட்கிழமை குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இரவு 8 மணிக்கு இடம்பெறவுள்ள இந்த ஆட்டத்தில் மன்னார் ஜோசவாஸ் நகர் ஐக்கிய அணியை எதிர்த்து பலாலி விண்மீன் அணி மோதவுள்ளது. (ம-23)

## நேதாஜி சம்பியன்

யாழ்ப்பாணம், மே 15

வல்வைக்குட்பட்ட கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் வல்வை நேதாஜி வி.கழகம் சம்பியனானது. அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் முறையில் இந்தத் தொடர் நடைபெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் இளங்கதிர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நேதாஜி விளையாட்டுக் கழகம் மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் தலா ஓர் கோலைப் பதிவுசெய்தமையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 3:2 என்ற கோல் கணக்கில் நேதாஜி அணி வெற்றிபெற்று கிண்ணம் வென்றது. (ம-108)

## றோயல் இறுதியில்

யாழ்ப்பாணம், மே 15

அராலி அண்ணா விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் இறுதிக்குத் தகுதிபெற்றது. அணிக்கு 9 வீரர்கள் பங்குபற்றும் இந்தத் தொடரின் ஆட்டங்கள் அண்ணா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகமும் சுன்னாகம் நியூவாரியர்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதின. 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதிபெற்றது றோயல் அணி. (ம-108)



## வயாவிளான் மத்தி. கரப்பந்தில் மகுடம்

யாழ்ப்பாணம், மே 15
வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத் தொடரில் 18 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் வயாவிளான் மத்திய கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.
வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் வயாவிளான் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து பருத்தித்துறை சென். தோமஸ் றோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலை அணி மோதியது.
முதலாவது செற்றில் 25:9 என்ற புள்ளிகள் அடிப்படையில் வயாவிளான் மத்தி வெற்றி பெற்றது. இரண்டாவது செற்றில் பருத்தித்துறை சென். தோமஸ் றோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலை அணி 27:25 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது.
இறுதி செற்றில் 25:21 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது வயாவிளான் மத்திய கல்லூரி அணி. மூன்றாமிடத்தை உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய அணி தனதாக்கியது.
(ம-422)

## உரும்பிராய் சைவத்தமிழ் வித்தி. கரப்பந்தாட்டத்தில் சம்பியனானது

யாழ்ப்பாணம், மே 15
வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத் தொடரில் 16 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய அணி சம்பியனானது.
வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய அணியை எதிர்த்து கோப்பாய் மகா வித்தியாலய அணி மோதியது. ஆட்டம் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய அணி 25:12, 25:17 என்ற புள்ளிகள் அடிப்படையில் முதலிரு செற்களையும் கைப்பற்றி நேர்செற் கணக்கில் வெற்றி பெற்றது. மூன்றாமிடத்தை முல்லைத்தீவு கலைமகள் வித்தியாலய அணி தனதாக்கியது. (ம-422)



# கே.ஸி.ஸி.ஸியின் துடுப்பாட்டம் ஜொனியன்ஸ் சம்பியனானது


ஹரிபிரவின்


சுரேந்திரன்



டக்சன்



யாழ்ப்பாணம், மே 15
கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழகம் நடத்திய துடுப்பாட்டத் தொடரில் ஜொனியன்ஸ் அணி வெற்றிபெற்றுக் கிண்ணம் வென்றது.
இந்தத் தொடரின் இறுதியாட்டம் கொக்குவில் இந்துக் கல்லூரியின் மைதானத்தில் நேற்று நடைபெற்றது. திருநெல்வேலி கிரிக்கெட் கழக அணியை எதிர்த்து ஜொனியன்ஸ் அணி மோதியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் அணி 26.5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 205 ஓட்டங்களைப் பெற்றது. ஹரிபிரவின் ஆட்டமிழக்காமல் 69 ஓட்டங்களையும், சஞ்சேயன் 31 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் செந்தூரன் 4 இலக்குகளையும், சுரேந்திரன், சிவராஜ் இருவரும் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.
240 பந்துகளில் 206 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய திருநெல்வேலி கிரிக்கெட் கழக அணி 22.3 பந்துபரிமாற்றங்களில் 86 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்ததை அடுத்து 119 ஓட்டங்களால் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது ஜொனியன்ஸ்.
பந்துவீச்சில் டக்சன் 4 இலக்குகளையும், பிருந்தாபன் 3 இலக்குகளையும், லவேந்திரா 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.
ஆட்டநாயகனாகவும், சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் ஜொனியன்ஸ் அணியின் ஹரிப்பிரவின், சிறந்த பந்து வீச்சாளராக அதே அணியின் டக்சன், சிறந்த களத்தடுப்பாளராக திருநெல்வேலி கிரிக்கெட் கழக அணியின் சுரேந்திரன் ஆகியோர் தெரிவாகினர்.
(ம-23)

## மெதடிஸ்த பெண்கள் அணி பளை மத்தியை வென்றது

யாழ்ப்பாணம், மே 15
வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத் தொடரில் 20 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.
வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியை எதிர்த்து பளை மத்திய கல்லூரி அணி மோதியது.
முதலாவது செற்றில் மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி 25:19 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. இரண்டாவது செற்றில் பளை மத்திய கல்லூரி அணி 25:14 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.
வெற்றி தோல்வியைத் தீர்மானிக்கும் மூன்றாவது செற்றில் மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி 25:23 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றுச் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. மூன்றாமிடத்தை இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலய அணி பெற்றது. (ம-422)



## இறுதிக்குள் ரபேல் நடால்

மட்ரிட் ரென்னிஸ் தொடரில் (ஸ்பெய்ன் தொடர்) ஆண்கள் ஒற்றையர் பிரிவில் இறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்றார் ஸ்பெய்ன் வீரர் ரபேல் நடால்.
நடாலை எதிர்த்து சேர்பிய வீரர் ஜோகோவிக் மோதினார். மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் நடால். அவர் தனது ஆதிக்கத்தை தொடர்ந்தும் தக்கவைத்து இரண்டாவது செற்றை 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற நேர்செற் கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்றார்.
இந்த ஆட்டம் களிமண் தரையில் நடைபெற்று வருகிறது. நடால் களிமண் தரையில் விளையாடுவதில் வல்லவர் என்பதால் இந்தத் தொடரை நடால் கைப்பற்றுவதற்கு அதிக வாய்ப்பு உள்ளது என்று கருதப்படுகிறது. (ம)

# தேசிய எறிபந்தாட்டத்தில் பதக்கங்களை கொண்டுவருமா யூனியன் கல்லூரி அணி

யாழ்ப்பாணம், மே 15
பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட எறிபந்தாட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி இந்த ஆண்டு பதக்கங்களைக் கைப்பற்றுவதில் கடும் சவால் உள்ளது என்று அறிய வருகிறது.
தேசியமட்ட பாடசாலைகளுக்கு இடையிலான எறிபந்தாட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி தனக்கென்று தனி முத்திரை பதித்துள்ளது. 2015ஆம் ஆண்டு ஆண்கள் அணி வெண்கலப் பதக்கத்தையும் கடந்த ஆண்டு வெள்ளிப் பதக்கத்தையும் கைப்பற்றியிருந்தது. ஆனால் இந்த வருடம் அந்த அணியால் வடக்குக்குக் கிடைக்கும் என்று கருதப்பட்ட பதக்கங்கள் தொடர்பில் சந்தேகம் வெளியிடப்பட்டிருந்தது.
இது தொடர்பில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர் நடேசன் செந்தூரனுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, "தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி கடந்த காலத்தில் வெளிப்படுத்திய பெறுபேற்றை நடப்பு வருடத்தில் வெளிப்படுத்துவது கடினம் என்று வெளியாகியுள்ள தகவல்கள் உண்மையே. மாகாணமட்ட தொடரில் சாதிப்பதே நடப்பு வருடத்தில் எமக்கு மிகவும் சவாலாக இருக்கப்போகிறது. யூனியன் கல்லூரி மாணவர்களைப் பொறுத்தவரை வெவ்வேறு பிரதேசங்களில் இருந்து வருபவர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. பாடசாலை தற்போது 7.30 மணிக்கு ஆரம்பமாவதால் காலையில் பயிற்சி நேரம் போதாமல் உள்ளது. பிற்பகலில் 1.30 மணி தொடக்கம் 3 மணி வரை கடுமையான வெயில் நீடிக்கிறது. எனவே பயிற்சிகளை இம்முறை சரிவர மேற்கொள்ளவில்லை" எனத் தெரிவித்தார்.
இது தொடர்பாக கல்லூரி அதிபருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, "கடந்த காலங்களில் எமது கல்லூரி பரீட்சைகளில் சித்தியடையும் சதவீதம் 97ஆக இருந்து தற்போது அது 57 சதவீதமாக குறைவடைந்துள்ளது. இதனை சீர் செய்வதற்காக கற்றல், கற்பித்தல் நடவடிக்கையில் அதிக கவனம் செலுத்தி வருகின்றோம். விளையாட்டில் ஈடுபடும் மாணவர்களுக்கு மேலதிக வகுப்புகள் ஏற்பாடு செய்யும் போது இலங்கை ஆசிரியர் சங்கம் தலையிட்டு 1.30 மணிக்குப் பின்னர் ஆசிரியர்களை கட்டாயப்படுத்தி வைத்திருக்கக்கூடாது என்று நெருக்கடிகளைத் தருகிறது. எனவே பாடசாலை நேரத்தில் வீரர்களின் கற்றலை உறுதிப்படுத்த வேண்டிய தேவையும் கட்டாயமும் ஏற்பட்டுள்ளது" என்று தெரிவித்தார்.
(ம-422)

# போக்பாவின் ஒப்பந்தத்தில் விசாரணைகள் தொடங்கின

யுவென்டாஸ் அணியின் போல் போக்பாவை, மன்செஸ்டர் யுனைற்ரெட் கழகம், உலக சாதனைத் தொகைக்குப் பரிமாற்றம் செய்தமை, பன்னாட்டு கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. கடந்தாண்டு ஒகஸ்ட் மாதத்தில், 89 மில்லியன் ஸ்டேர்லிங் பவுண்ட்ஸ்களுக்கு போக்பா, ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தார். குறித்த ஒப்பந்தம் தொடர்பான தெளிவைப் பெறும்பொருட்டு யுனைற்ரெட் கழகத்துக்கு பன்னாட்டு கால்பந்தாட்ட சம்மேளனத்தால் கடிதமொன்று அனுப்பப் பட்டுள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டே போக்பாவின் ஒப்பந்தம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (ம)





நீச்சல் தடாகத்தின் தற்போதைய நிலை...

# செப்ரெம்பரில் திறக்கப்படும் கிளி. விளையாட்டு அரங்கு

## கிளி. மாவட்ட அரச அதிபர் நம்பிக்கை

கிளிநொச்சி, மே 13

“கிளிநொச்சி மாவட்டத்தில் நீண்ட காலமாகக் கட்டப்பட்டு வரும் விளையாட்டரங்கு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் திறக்கப்படும் என விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் உத்தரவாதம் அளித்துள்ளார்” இவ்வாறு தெரிவித்தார் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம்.



உதயனுக்கு அண்மையில் வழங்கிய பிரத்தியேக செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கிட்டத் தட்ட 200 மில்லியன் ரூபா செலவில் கட்டப்பட்டு வரும் தேசிய விளையாட்டரங் கின் கட்டுமானப் பணிகள் நிறைவடைய வேண்டிய திகதிகளைக் கடந்த பிற்பாடும் கட்டுமானங்கள் இன்னும் தொடர்ந்து கொண்டேயுள்ளன. இந்த மைதானக் கட்டுமானம் தொடர்பில் துல்லியமான கருத்துக்கள் எதுவும் வெளிப்படுத்தப்படாத நிலையில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் நேற்று இவ்வாறு தெரிவித்தார்.

“200 மில்லியன் ரூபா செலவில் மைதானக் கட்டுமானம் ஆரம்பிக்கப்பட்டது. இதன் ஒருபகுதி நிதி வேறு ஒரு மாவட்டத்துக்குத் திருப்பியதன் காரணத்தால் பணிகள் பாதிப்படைந்தன. இதன் காரணத்தால் அதிக காலம் தாமதமடைந்தது. இந்த விடயம் தொடர்பில் கடந்த மாவட்ட அரச அதிபர்கள் மாநாட்டில் சுட்டிக்காட்டியிருந்தோம். இதன் பயனாக மிகுதி நிதியை விடுவித்து செப்ரெம்பர் மாத காலத்துக்குள் பணிகள் முடிவுறுத்தப்பட்டு பயன்பாட்டுக்காக மைதானம் கையளிக்கப்படும் என எமக்கு விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் உறுதியளித்துள்ளார்” என கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (ம-101)

# விருதுகளை அள்ளினார் குயின்டன்

தென்னாபிரிக்க கிரிக்கெட் சபையின் ஐந்து முக்கிய விருதுகளை அந்த அணியின் இளம் வீரரும் இலக்குக் காப்பாளருமான குயின்டன் டி ஹொக் வென்றார்.

தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை ஒவ்வொரு ஆண்டின் மத்திய பகுதியில் அந்தந்த பருவகாலத்துக்கான விருதுகளை வழங்கி வருகிறது. நடப்புப் பருவகாலத்துக்கான விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. குயின்டன் டி ஹொக்கிற்கு ஐந்து விருதுகள் கிடைத்தன.

இந்தப் பருவகாலத்துக்கான சிறந்த வீரர், சிறந்த ஒருநாள் வீரர், சிறந்த டெஸ்ட் வீரர், வீரர்களின் தெரிவில் சிறந்த வீரர், ரசிகர்களின் தெரிவில் சிறந்த வீரர் போன்ற விருதுகளே குயின்டனுக்குக் கிடைத்தன. சிறந்த ரி-20 வீரராக தாகிர் தெரிவுசெய்யப் பட்டார்.

தென்னாபிரிக்க அணியின் இளம் வீரரான கலிஸ்கோ ரபாடா கடந்த வருடம் ஆறு விருதுகளை அள்ளியிருந்தார். இந்த வருடம் குயின்டனுக்கு ஐந்து விருதுகள் கிடைத்துள்ளன. (ம)



வீடு வாடகைக்கு உண்டு
கிளிநொச்சி நகரில் இருந்து
1 Km தூரத்திற்குள்
4 அறைகள் கொண்ட
வீடு ஒன்று வாடகைக்கு
உண்டு.
077 760 4667

# பெங்களூருக்கு ஆறுதல் வெற்றி

ஐ.பி.எல் தொடரில் நேற்று இரவு நடைபெற்ற இறுதி லீக் ஆட்டத்தில் டெல்லியை வென்றது பெங்களூர். நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பெங்களூர் முதலில் துடுப்பெடுத்தா



டத்தீர்மானித்தது. அந்த அணியின் ஆரம்ப வீரர்களாக கெய்ல் மற்றும் விஸ்னு. அணி 30 ஓட்டங்கள்பெற்றிருந்த நிலையில் 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் விஸ்னு. கெய்ல் மற்றும் கோக்லி இணைந்து சிறந்த ஆட்டத்தை வழங்கினர். 38 பந்துகளில் 48 ஓட்டங்களைச் சேர்த்து ஆட்டமிழந்தார் கெய்ல். அரைச்சதம் கடந்து 58 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் கோக்லி. பின்வரிசை வீரர்கள் கிடைத்த வாய்ப்பை பயன்படுத்த முடிவில் 6 இலக்குகள் இழப்புக்கு 161 ஓட்டங்களைச் சேர்த்தது பெங்களூர்.

பந்துவீச்சில் கம்மின்ஸ் 2 இலக்குகளையும், சகீர்கான், நடீம் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய டெல்லி ஓட்டமெதனையும் பெறாத நிலையில் ஆட்டமிழந்தார் ஆரம்ப வீரர் சாம்சன். நாயர், அய்யா முறையே 25, 32 ஓட்டங்களைச் சேர்த்த போதிலும் அதிகமான பந்துகளை எதிர்கொண்டனர். பன்டின் அச்சுறுத்தல் 45 ஓட்டங்களுடன் முடிவு கண்டது. பின்வரிசை தடுமாற 151 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்து 10 ஓட்டங்களால் தோற்றது டெல்லி. இந்த ஆட்டத்தில் வெற்றிபெற்ற போதிலும் பெங்களூர் கடைசி இடத்திலேயே உள்ளது. (ம)

ஆங்கிலம் 3 மாத பயிற்சி நெறி
இளைஞர் யுவதிகள், O/L,A/L எழுதியோர், பல்கலைக்கு தெரிவானோர், தொழில்புரிவோர், வெளிநாடு செல்வோர் உயர்கல்வி மாணவர்கள் இணைய முடியும்.
திங்கள், புதன் பிரிவுகள் - 17.05.2017
1.காலை 08-10 2.காலை 10-12 3.பி.ப 01-03 4.மாலை 03-05
ஆங்கிலத்தில் ஓரெழுத்து தெரியாதவர்களும் கூட 3 மாதங்களிலேயே சரளமாக ஆங்கிலம்பேசமுடியும்!
செவ்வாய், வியாழன் பிரிவுகள் - 18.05.2017
1.காலை 8-10 2.காலை 10-12 3.பி.ப 01-03 4.மாலை 03-05
பயிற்சிநெறி முடிவில் "Diploma Certificate"
SAAMSON
Expert in Language Training
179, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
077 1570 486
021 320 3313

NALIN Information Technologies Pvt Ltd.
NALIN INFORMATION TECHNOLOGIES (PVT) LTD.
வடமாகாண பாடசாலைகளுக்கு விசேட விலைகளில்
Fingerprint Time attendance Device
• மின்தடை சாதனம் (Power Backup) 2 மணித்தியாலங்களுக்குமேல் இயங்குநிலையில் இருக்கும் (A-F011, A-F031களுக்கு மட்டும்)
• வடமாகாணத்தில் 150இற்கு மேற்பட்ட பாடசாலைகளில் எமது நிறுவனத்தினால் பொருத்தப்பட்டுள்ளது.
• வடமாகாண பாடசாலைகளுக்கு பொருத்தற்செலவு இலவசம்.
• நளினூடாக பெற்றுக்கொள்ளும் Realand Fingerprint Time attendance Deviceகளுக்கு மாத்திரம் 3வருட உத்தரவாதம் வழங்கப்படும்
WARRANTY 3 YEAR WARRANTY



Realand A-F261 Realand A-C051
Realand A-F011 Realand A-F031
Rs. 12,500.00 முதல்
மிகவிரைவில் தமிழில் Software தங்களுக்கு பெற்றுத்தரப்படும். * நிபந்தனைக்கு உட்பட்டது.
No. 195/2, Parameswara Junction, Palaly Road, Jaffna.
021 222 1121
077 766 7975

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.05.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.